www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

ஒக்.22-28,1995

ரூபா 11/00

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 124



## தலைநகரில் கொமாண்டோக்கள்?

சவால்கள் மத்தியில் சந்திரிக்கா



லேட்டஸ்ட் ஸ்பெஷல்

சுடச் சுட ஒரு ரிப்போர்ட்

இலக்கிய நயம்

உன்னை நீ அறிவாய்- சுயபரிசோதனை

ரவீனாவின் புதிர் சினி விசிட்

## பாரிசில் ஒரு விபரீதம்

கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## பூமி அழுகிறது

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

வடபகுதி நிலவரம்
சீர்படுவதற்குப் பதிலாக
தினம்தோறும்
சீர்கெட்டுக் கொண்டிருக்கிறது.

நாலுஇலட்சம் மக்களை
நிர்க்கதியாக்கி-
தெருவில் எறிந்திருக்கிறது
கொடிய யுத்தம்!

நாலுஇலட்சம் அகதிகளை
குடாநாடு தாங்குமா?
என்னும் கேள்வி
நெஞ்சை உலுக்கும்போது
யுத்தம் தொடர்ந்தால்-
அகதிகள் எண்ணிக்கை மேலும்
அதிகமாகும் என்ற அவலமும்
அச்சுறுத்த ஆரம்பித்திருக்கிறது.

பருவமழையை மகிழ்ச்சியோடு
வழக்கமாக எதிர்நோக்கும் மக்கள்
இம்முறை மழைக்காலத்தை
அச்சத்தோடு எதிர்நோக்கியிருக்கிறார்கள்.

'வானம் பொழிகிறது
பூமி விளைகிறது' என்பார்கள்.
ஆனால்-குடாநாட்டில்
வானம் பொழிந்தாலும்
பூமி அழுதுகொண்டிருக்கும்
நிலைதான் தோன்றியிருக்கிறது!

பட்டினி அபாயம்
பூதாகரமாக மிரட்டிக்கொண்டிருக்கிறது.
கையிருப்புக்கள் யாவும்
முடிந்து கொண்டிருப்பதாக
யாழ்-அரச செயலகம் கையை விரிக்கிறது!

முகாம்களில் உள்ள மக்களுக்கு
நிவாரணப் பொருட்கள் மட்டுமே
பட்டினியைத் தவிர்க்க உதவும்.
தொழில் இல்லை,
விளை நிலம் இல்லை.
நிவாரணமே ஒரே மார்க்கம்!

கப்பல் போககுவரத்தில்
இழுபறி நிலை நீடிக்கிறது.
பயணிகள் கப்பலின் மாலுமிகளை
பிடிவாதமாக புலிகள்
தடுத்துவைத்திருக்கிறார்கள்.

பொதுமக்களின் தேவைகளை
நிறைவு செய்வதற்குரிய
சிறியளவான மார்க்கங்களும்
இரு தரப்பினதும்
பலப்பரீட்சையில்
அடைபட்டுக் கொண்டிருக்கின்றன.

பயணிகள் கப்பல் மாலுமிகளை
புலிகள் தடுத்துவைத்திருப்பது
முறையுமல்ல; நியாயமுமல்ல,
அதற்காக அரசும்
மல்லுக்கட்டிக் கொண்டிருந்தால்
பட்டினிகிடக்கப் போவது
அப்பாவி மக்கள்தான்.

வடக்கில் பொதுமக்களை
மீட்கப்போவதாக அரசு சொல்கிறது.
அப்படிச் சொல்லிக்கொண்டே
படைகளைமட்டும்
அனுப்பிக் கொண்டிருப்பதில்
அர்த்தமுண்டோ?
பட்டினி அபாயத்தை தீர்க்கும்
பொறுப்பும் அரசுக்குண்டல்லவோ!

போர் என்பது-
பொதுமக்களின் விருப்பமல்ல.
போரின் மத்தியிலும்
உணவுக்கப்பலை' அனுப்பவேண்டியது
அரசின் கடமை.
கடமையைச் செய்யவேண்டும்
என்று வலியுறுத்துவது.
மக்கள் பிரதிநிதிகளின் கடமை!

புத்தாடை அணிந்து
அகத்திலே மகிழ்ச்சி பொங்க,
முகத்திலே முறுவல் துள்ள
தீபாவளி கொண்டாடும்
திருப்தி இன்றில்லை!

இருள் அகற்றவே தீபஒளி.
போர் இருள்
அசுரத்தனமாக ஆக்கிரமித்திருக்கிறது.
இருளை இடிக்க
தீபஒளி மட்டும் போதாது.
சமாதான ஒளி வேண்டும்.

ஆனால்-சமாதானம் என்பது
புஸ்வாணமாகிக் கொண்டிருக்கிறது.
எனினும்-இருளுக்கு மத்தியில்
தீபஒளி-
வெளிச்சத்தின் அருமையை
விளக்கி நிற்கட்டும்!

இருள் முற்றாக விலகும்வரை
சிறு ஒளிகள் தெரிவதும்
நம்பிக்கை வற்றாமல் இருக்க
ஒருவகையில் அவசியம்தான்.

முன்கூட்டியே முரசின்
தீபாவளி வாழ்த்துக்கள்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை-

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## பத்துக் கற்பனைகளில் ஐந்து

1. உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே, என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.

2. மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொருபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தையாகிலும் (சிலைகள்) நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் வேண்டாம். உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம், நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன். என்னிடத்தில் அன்புகூர்ந்து என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கம் செய்கிறவராயிருக்கிறேன்.

3. உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக, கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்.

4. பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக. பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக.

5. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற சுசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு உன் தகப்பனையும், தாயையும் கனம்பண்ணுவாயாக.

மாத்தளை சஜோ. ஜோர்ஜ்

# ஆன்மீகம்



## அழுக்கை அகற்றும் ஐவேளைத் தொழுகை

ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் ஓர் ஆற்றங்கரையோரமாகச் சென்று கொண்டிருந்தார்கள். அப்போது அங்கு ஒரு வெள்ளைப்பறவை சேற்றில் மூழ்கி அழுக்கடைந்து பின்பு ஆற்றில் மூழ்கி அவ்வழுக்கை அகற்றி தூய்மை அடைந்து கொண்டிருந்தது. அவ்வாறு ஐந்துமுறை செய்தது. இதைக்கண்ட ஈஸா (அலை) அவர்கள் ஆச்சரியம் அடைந்தார்கள்.

அதுசமயம் ஹஜ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் அங்கு தோன்றி, முஹம்மது நபி (ஸல்) அவர்களின் உம்மத்தவர்கள் தொழும் தொழுகைக்கு உதாரணம் காட்டவே, இறைவன் இப்பறவையை உங்களுக்கு இவ்வாறு செய்வித்துக் காட்டினான். அவர்கள் செய்யும் பாவங்கள் சேற்றைப்போலவும், தொழும் தொழுகை ஆற்றைப்போலவும் இருக்கிறது. எவ்வாறு சேற்றில் மூழ்கிய பறவை ஆற்றில் மூழ்கிப் பரிசுத்தமடைந்து விடுகிறதோ. அவர்கள் பாவமென்னும் சேற்றை தொழுகையின் மூலம் அகற்றி பாவத்தை விட்டும் பரிசுத்தம் அடைந்து விடுகிறார்கள் என்று விளக்கிக் காட்டினார்கள்.

மற்றும் ஒருவரின் வீட்டினருகில் ஓர் ஆறு ஓட அதில் அவர் அனுதினமும் ஐந்து நேரமும் குளித்து வந்தால் அவரது மேனியில் அழுக்குப் படிந்திருக்காது. அது போல்தான் ஐவேளைத் தொழுகையும். அதாவது தொழுகையின் காரணத்தால் இறைவன் பாவமென்னும் அழுக்கை அகற்றிவிடுகிறான் என்பது மாநபியின் நன்மொழியாகும்.

இர்பானா நியால், மக்கொன.

## கவிதைப்போட்டி இல–121

### பரிசுக்குரிய கவிதை

### வயிற்றுக் கஞ்சி

துப்பாக்கிச் சாத்தானைத்
தொழுகின்ற நிகழ்வுகள்
தொடர்வதனாலன்றோ
தொலைந்த தென்வாழ்வை
நிலங்களில் குனிந்து
நிமிராமல் தேடும்
நிரந்தரக் கூலியானேன்!
வயிற்றுக் கஞ்சி
கிடைத்தென்ன-என்
'அ'கரப் பள்ளி
பகையரணான பின்பு...!

ஷியானி நளீர், அக்குறணை.

## இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்



### இந்நிலை மாறாதோ?

பாலகனே நீயும்தான்
கோவணமும் இல்லாமல்
கானகத்தில் தேடுவது
கண்ணிவெடி உண்டென்றா?

எஸ். இளங்கோ, மக்குலுஸ்ஸ.

### அறுவடை எப்போது?

வறுமையின் கோட்டுக்குள்ளே
வயல் கொத்தும்
வாண்டே-உந்தன்
அறுவடை முடியுமட்டும்
அம்மணக் கோலம்தானோ?

ச.மகாலிங்கம், வெலிமடை.

### அராஜக அநியாயம்

அதிகமாய் தோண்டாதே!
அராஜகம் புதைத்த-உன்
அப்பனின் எலும்புகள் கண்டு
அகம் தளர்வாய்.

எம்.எம். இர்ஷாட் மொஹமட்-
தருவ கொட்டுவ.

### இனியும் வேண்டாம்!

நகரெங்கும் உயிர்களின் சேதங்கள்.
நமக்கிடையிலும் நியாயமற்ற குரோதங்கள்.
வாதங்கள் வேண்டாம்! வேதங்கள் வேண்டாம்!
வா! விரைந்து வா!
நீயும் நானும் விதைத்திடுவோம் புது பண்பாட்டை_
நிலத்திற்கடியில் புதைத்திடுவோம் பழம் பஞ்சாங்கத்தை_

திட்டம்புவ-கலாயுவன்.

### நந்தவனம்

உதவியின்றி
நொந்த மனம்
உதவிக்கரம்-தந்தால்
நந்தவனம்.

எம். துரையன், அக்கரைப்பற்று-06.

### ஒத்திகை

பிற்காலத்
தொழிலுக்கு
இப்போது
ஒத்திகையோ...!

வீவே. வசந்தகுமார்-கோமாரியூர்.

### வைர நெஞ்சம்

பிஞ்சிலே பெரும்
சுமையானாலும்
நெஞ்சிலோ நீண்ட உறுதி!
வஞ்சித்த போரிங்கு
வடபுலத்தில்
வயது வரம்பின்றி
வயிற்றிலடித்த கொடுமை,
கால்வயிற்று கஞ்சிக்கேனும்
வயல் சேற்றில்
கால்பதித்த
வைர நெஞ்சமாயிது?

வை.சித்திக்கிருஷ்ணா, பாண்டிருப்பு-02.

### நில் கவனி

'ஷெல்' விழுந்து
செல்லரித்த
செம்மண் பூமியினை
செந்நெல் காண
சீர்படுத்தும் சின்னநிலவே!
வயல் சேற்றுக்குள்ளும்
வெடிக்காத ஷெல்
கிடக்கும் பார்த்துக்கோ
உடல் பத்திரம்!

வைரமுத்து லட்சுமி,
பாண்டிருப்பு-02.

### மரம்நடு!

வையக
வீதியில்
உன்
பெயர் சொல்ல
ஒரு
மரம் நடு!

ஷஹிர்ஷா தாஸிம், தர்கா நகர்.

### மூடியா மறைக்கிறாய்

மண்ணுக்கு
இரையான
மனித உடம்பினை
மூடியா மறைக்கிறாய்

உ.லெ.மு. அஜ்பத், அக்கரைப்பற்று-03.

## கவிதைப் போட்டி இல-124



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 28.10.1995 -முகவரி- கவிதைப் போட்டி இல: 124
தினமுரசு வாரமலர் த.பெ.இல-1772, கொழும்பு.

### இதுதாண்டா அரசியல்

மண்வெட்டி கையிலெடுப்பார்
மரணக்குழி தோண்டிக் காட்டுவார்!
வரலாறு படைப்பேனென்பார்
வாக்குறுதி மறந்து போவார்!
எதை உளறித் தொலைத்தாலும்
எல்லோரும் கையைத் தட்டுவார்!
இதுதாண்டா தம்பி-நாட்டின்
இன்றைய அரசியல்.....!

எஸ்.சிவசாமி செல்வராஜ், பூண்டுலோயா.

### பாலனின் துணிவு

அண்ணன் அடித்தாலும்
அம்மாவோ வைதாலும்
அப்பாவின் வயல்தன்னை
அழகாகப் பண்படுத்தி
அருமையான நெல்விதைத்து
அவதியின்றி நீர்பாய்ச்சி
அறுவடையில் அகதிகளின்
அரும்பசியை நான் தணிப்பேன்

முஸ்தபா இஸ்ஸத், ஏறாவூர்-01.





இராமாயணத் தொடரைத்தந்து வியக்க வைத்துள்ளார் இராஜகுமாரன். மேலும் இப்பணியினை சிறப்பாக செய்ய என்றென்றும் எங்கள் வரவேற்புக்கள்.

உ.லெ.மு.அஜ்வத், அக்கரைப்பற்று-3.

ஆயிரமாயிரம் வாசகர் நெஞ்சங்களை கொள்ளை கொண்ட நீ தாங்கி வரும் இலக்கிய நயம், லேடீஸ் ஸ்பேஷல், இராமாயணம், பட்டுக்கோட்டை பிரபாகரின் 'விலை உயர்ந்த குற்றம்' மற்றும் அனைத்து அம்சங்களும் இனிமை. உன் சேவை தொடர வாழ்த்துக்கள்.

எம்.எஸ். சனூதா, பதுளை.

'மனித வெடிகுண்டு', கார்லோஸை' பற்றி, அவனின் துணிகர செயல்களைப் பற்றி சுவைபட தொகுத்து கதையாக வடிக்கும் ரசிகனுக்கு என் கைகுலுக்கல்கள். தினமுரசுக்கு வாழ்த்துக்கள்.

செல்வி.சிவாஜினி சதாசிவம், மாத்தளை.

எந்தப் பத்திரிகையிலும் இல்லாத ஒரு தனிச்சிறப்பு உன்னில் தென்படுகிறது. அதிலும் நாரதரின் எக்ஸ்ரே ரிப்போட், ரசிகனின் க்ரைம் தொடர் போன்ற பகுதிகள் பிரமாதம்.

தமிழக எழுத்தாளர்கள் ஒவ்வொருவரின் தொடர்கதைகளும் படிப்படியாக வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது.

ஏ.ஏ.எம்.இக்ரம், கல்ஹின்ன.

மடல் அனுப்பியவர்களில் இடமுள்ளவரை பதிவு செய்யப்பட முடிந்தவர்கள்:

என்.எம்.சுஜம், நாரம்மலை.
மு. தர்மலிங்கம், கரவெட்டி.
கமல்நேசி, இரத்தினபுரி.
செல்வி. லோகநாயகி கந்தையா, கிரான்.
மகாலிங்கம் சௌந்தர், வட்டவளை.
எம்.எல்.அபுபக்கர், கலஹவத்தை.
சி.துஷ்யந்தன், தெஹிந்தளை, வத்தளை.
எம்.எல்.எம்.கைஸ்குட்டி, கிண்ணியா-05.
செல்வி.விஜயா லெட்சுமணன், பெல்மோரல் எஸ்டேட்.
ஏ.எச்.ராஸின் மொகமட், ஏத்தாலை.
செல்வன்.கே.வின்சன்ட், மட்/சத்துருக்கொண்டான்.
இரா.நாகராஜா, நாவுல.
மு.கேதீஸ்வரன், பரகடுவை.
சந்தனம் ராமஜெயம், அல்/பிட்டியாத்தோட்டை.
எம்.ஸாலிஹ் அலீம், புத்தளம்.
சி.காந்தன், நுவரெலியா.
ஆர்.ராதா, உப்புக்குளம், மன்னார்.
கே.உதயகுமாரன், எருவில், களுவாஞ்சிக்குடி.
ஏ.ஜி.சேகர், அக்கரைப்பற்று-08.
நீ.அஞ்சென், திருக்கோவில்.

பட்டுக்கோட்டையின் விறுவிறுப்பான கதை சூப்பர். அசத்தலான பல தகவல்கள் வெரி வெரி சூப்பர்.

வீரசிங்கம் ஸ்ரீதரன், மல்லிகைத்தீவு.

## வாசகர் சாலை

தகவல் பெட்டிதரும் வியப்பான தகவல்கள் எம்மை மெய் சிலிர்க்க வைக்கின்றன. ரசிகன் தரும் கார்லோஸின் துணிகரச் செயல் ரொம்ப துணிவிலும் துணிவு. மொத்தத்தில் உன் சேவை மலர எந்நாளும் நம்வாழ்த்துக்கள்.

ஏ.எஸ்.ரிஸ்வி, ரிஸ்வியா, சியானா மற்றும்
குடும்ப அங்கத்தினர், மதவாச்சி.

மகாபாரதம் முடிந்த கையோடு இராமாயணத்தையும் தொடங்கியதன் மூலம் எங்கள் கவலையைப் போக்கி விட்டீர்கள். கடந்த வாரம் சிந்தியா அசத்தி விட்டார் போங்கள்! ரசிகனை சற்று மெதுவாகப் போகச்சொல்லுங்கள். 'இலக்கிய நயம்', 'கார்லோசின் இருமுகங்கள்' இரண்டிலும் ரசிகனின் இருமுகங்களும் பளிச்செனத் தெரிகிறதே!

செல்விகள்.சித்தி ஜெர்ஸ்லா ஸலீம், ருகைதா ஸலீம்,
நிக்கவெல.

பட்டுக்கோட்டை பிரபாகரின் விலை உயர்ந்த குற்றம் படு சூப்பரய்யா. முரசில் காண்பது இரட்டிப்பு மகிழ்ச்சி.

கலைச் செல்வன் பரீஸ், குருகொட, அக்குறணை.

இராமாயணம் முதல் அங்கமே வியப்பில் ஆழ்த்தியது. இராஜகுமாரனின் கைவண்ணம் பலே.பலே.

செல்வி. எஸ். சந்தியா, கொழும்பு-10.



படிப்பகம்

www.padippakam.com

# 16 வயதானால் இயக்கத்தில் சேர வேண்டும்
# வடக்கில் புலிகள் விடுத்துள்ள அறிவிப்பு

(யாழ் நிருபர் வர்மா)

**யாழ் குடாநாட்டு மக்கள் எட்டு இலட்சம் பேரில் 3 இலட்சம் பேர் இயக்கத்தில் சேர்ந்துகொள்ளக்கூடிய இளைஞர்களாக இருக்கின்றனர். எனவே- 16 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களும், இளம் பெண்களும் உடனடியாக இயக்கத்தில் சேர வேண்டும் என்று புலிகள் யாழ்ப்பாணத்தில் வெளியிட்டுள்ள பிரசுரமொன்றில் தெரிவித்துள்ளனர்.**

### காட்டூனும் கருத்தும்

புலிகள் அமைப்பினரால் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டுள்ள பிரசுரமொன்றில், இயக்கத்தில் சேராமல் இருப்பது வெட்கத்திற்குரியது என்று சித்தரிக்கும் காட்டூனும் காணப்படுகிறது.

அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"யாழ் குடாநாட்டில் மொத்தம் 30 ஆயிரம் படையினர் நான்கு பெரிய படைத் தளங்களில் இருக்கின்றனர்.

இதேவேளை யாழ்-குடாநாட்டில் சுமார் 8 இலட்சம் மக்கள் வாழ்கின்றனர்.

வயது போனவர்களையும், குழந்தைகளையும் சேர்த்து இப்படியொரு போர்க் கணக்கு பார்க்கமுடியுமா என்று யாராவது கேட்கலாம். சரி, இன்னொரு முறையில் இந்தக் கணக்கைப் பார்ப்போம்.

மொத்தம் 5 இலட்சம் பேர் வயதான வர்களாகவும், சிறுவர், சிறுமிகளாகவும் உள்ளனர். மிகுதி 3 இலட்சம் இளம் இரத்தம் மிஞ்சும். இவர்கள் 16 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களும், இளம் பெண்களுமாவார்கள்.

### முகாம் வேண்டாம்.

இந்த இளம் இரத்தங்கள் அகதி முகாம்களில் வசிப்பதற்கு பதிலாக புலிகளின் பாசறையில் வசிக்கத் தொடங்கினால் எமது மண்ணில் அகதி முகாம்களே இருக்க முடியாதே!

எனவே-போராளி குடும்பத்தை அல்லது மாவீரர் குடும்பத்தைச் சாராத மற்றைய குடும்பத்தைச் சேர்ந்த 16 வயதிற்கு மேற்பட்ட யாராவது ஒருவர் இப்போதே தன்னை இயக்கத்தில் இணைத்துக் கொள்ள வேண்டும்.

பெரியப்பாவின் மகன் இயக்கத்தில் இருக்கின்றார், மாமாவின் மகன் இயக்கத்தில் இருக்கின்றார். என்று சாட்டுக்கள் கூறித் தப்பித்துக் கொள்ளக்கூடாது.

16 வயதுக்கு மேற்பட்ட ஒரு இளைஞன் அல்லது இளம்பெண் வீதியால் நடந்து செல்லும்போது "எங்களது குடும்பத்தில் யாராவது ஒருவர் இயக்கத்தில் இருக்கிறாரா?" என்று உங்களையே கேட்டுப் பாருங்கள். அவ்விதம் இயக்கத்தில் இருந்தால் வீதியின் வலதுபுறத்தால் தலைநிமிர்ந்து நடவுங்கள். சைக்கிளில் செல்வதானால் வீதியின் இடதுபுறத்தால் கம்பீரமாக ஓட்டிச் செல்லுங்கள்.

உங்களது குடும்பத்தில் எவருமே இயக்கத்தில் இல்லையென்றால், உனது வயதும் 16க்கு மேல் என்றால் உடனடியாகவே இயக்கத்தில் இணைந்துவிடு. இல்லையென்றால் மற்றவர்களது வசைகளைக் கேட்டு நீயும் உனது குடும்பமும் துன்பப்பட வேண்டி வரலாம்." இவ்வாறு புலிகள் அமைப்பினரின் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது:

### மகளிர் அமைப்பு அறிக்கை

விடுதலைப்புலிகளின் மகளிர் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையொன்றில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"நீண்ட கனவுகளுடன் க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) பரீட்சைகளுக்காக தீவிரமாகப் படித்துக் கொண்டிருக்கும் எங்கள் வாரிசுகள் எதிர்காலம் இருளாகப் போவதை ஏற்றுக் கொள்ளப் போகிறார்களா? நமது இளைய தலைமுறையினர் தாயகத்தை காக்கும் பணியில் இறங்க வேண்டும்." இவ்வாறு அவ்வறிக்கை கூறுகிறது.

# ஜனாதிபதியின் அமெரிக்க விஜயத்துக்குக் கண்டனம்
# ஐ.நா.சபை நோக்கி புலிகள் ஊர்வலம்

ஐக்கிய நாடுகள் சபையின் 50வது ஆண்டு நிறைவை முன்னிட்டு அமெரிக்க நியூயோர்க் நகரில் 135 நாடுகளின் ஜனாதிபதிகளும், பிரதமர்களும் கூடுகின்றனர்.

இம்மாதம் 22ம் திகதி (22.10.95) அன்று 50வது ஆண்டுவிழா நடக்கவுள்ளது.

நியூயோர்க் நகரில் மாபெரும் ஊர்வலம் ஒன்றை நடத்துவதற்கு புலிகள் இயக்கத்தினர் திட்டமிட்டுள்ளனர்.

22ம் திகதி நடைபெறவுள்ள ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்து கொள்ளுமாறு அமெரிக்காவிலும் கனடாவிலும் உள்ள இலங்கைத் தமிழர்களிடம் புலிகள் அமைப்பினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். கனடாவில் இருந்து பஸ்வண்டிகள் மூலம் நியூயோர்க் நகருக்கு மக்களை அழைத்துச் செல்லவும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. கனடாவில் உள்ள உலகத் தமிழர் இயக்கம் விடுத்துள்ள அறிவித்தலில், பஸ் வண்டிகளில் செல்லுவோர் தமது பெயர்களை பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

தமிழ் ஈழத்தை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கக் கோரியும், ஜனாதிபதி சந்திரிக்கா நியூயோர்க் விஜயம் செய்வதை எதிர்த்தும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தப்படவுள்ளது என்று உலகத் தமிழர் இயக்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஃபிரான்ஸ் நாட்டில் உள்ள ஐரோப்பிய பாராளுமன்றம் முன்பாக 23.10.95 அன்று ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று நடைபெறுகிறது.

புலிகளது ஃபிரான்ஸ் கிளையினால் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு என்ற பெயரில் ஆர்ப்பாட்ட பேரணிக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெறும் தினத்தை, மரணமடைந்த போராளிகளது அஞ்சலி நாளாக அனுஷ்டிக்குமாறும், அன்றைய தினம் கறுப்புப் பட்டிகளை அணிந்துகொள்ளுமாறும் புலிகளது ஃபிரான்ஸ் கிளையினர் கூறியுள்ளனர். ஃபிரான்சில் ஸ்ராஸ்போர்க் நகரில் ஐரோப்பிய பாராளுமன்றம் அமைந்துள்ளது.

# ஜே.ஆர். கிரனைட்டுகள் யாருடையவை?

கொழும்பு ஹவ்லக் வீதியில் ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் இல்லம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்கள் எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை.

தாக்குதலுக்கு உள்ளான இல்லத்தில் வெடிக்காத நிலையில் ஜே.ஆர். கிரனைட்டுக்கள் பொலிசாரால் மீட்கப்பட்டன.

பாதுகாப்பு அமைச்சராக லலித் அத்துலத்முதலி இருந்த போது கைக்குண்டுகளுக்கு ஜே.ஆர்.என்று பெயர் பொறிக்கப்பட்டது.

1990ம் ஆண்டு சென்னையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப்.தலைவர் பத்மநாபாவும், அவரது சகாக்களும் புலிகள் அமைப்பினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். பத்மநாபாவின் இல்லத்துக்குள் கைக்குண்டுகள் வீசப்பட்டன. அக்கைக்குண்டுகளும் ஜே.ஆர். கிரனைட்டுக்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அங்கும் சில கைக்குண்டுகள் வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டன.

பத்மநாபா மீதான தாக்குதலில் ஒரு காரில் வந்த நான்கு இளைஞர்கள் மட்டுமே பங்குபற்றினார்கள். இருவர் கீழே நின்று துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொண்டிருக்க, ஏனைய இருவரும் முதலாவது மாடியிலிருந்த பத்மநாபாவின் இல்லத்தை நோக்கிச் சென்று தாக்குதல் நடத்தினார்கள்.

திரும்பிச் செல்லும்போது சரமாரியாக சுட்டுக்கொண்டே காரில் போனார்கள். அதனால் பொதுமக்கள் பலர் காயமடைந்தனர்.

பத்மநாபாமீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் இதுவரை புலிகள் உரிமை கோரவில்லை.

# புலிகளால் கொல்லப்பட்ட கிளி!

(வர்மா)

யாழ்ப்பாணம் வசாவிளானைச் சேர்ந்தவரும்,கிளிநொச்சியில் வசித்து வந்தவருமான கிளி என்பவர் புலிகளால் மரணதண்டனை விதிக்கப் பட்டுள்ளார்.

ஆரம்பத்தில் சிறு வியாபாரியாக இருந்த கிளி பின்னர் மூன்று லொறிகளுக்கு உரிமையாளரானார்.

மணலாற்றில் உள்ள இராணுவ முகாம்கள் மீது புலிகள் நடத்திய தாக்குதல் தோல்வியில் முடிந்தமைக்கு தகவல் படையினருக்கு- கிடைத்ததே காரணம் என்று புலிகள் கூறியிருந்தனர். புலிகள் இயக்கத்தினரின் சந்தேகப் பார்வையில் கிளியும் சிக்கினார்.

தமக்கு ஒரு புதிய வாகனம் கொண்டு வருமாறு கிளியைப் புலிகள் அணுகினார்கள்.

வவுனியா இராணுவத்தினரிடம் வந்து கிளி கேட்ட போது, வாகனம் கொண்டுபோக முடியாது; என்ஜின் என்றால் கொண்டு போகலாம் என்று கூறப்பட்டதாம். பின்னர் பஜிரோ என்ஜின் ஒன்றை கிளி மூலம் வவுனியாவில் இருந்து தருவித்தார்கள் புலிகள். என்ஜின் கொண்டுவருமளவுக்கு இராணுவத்தினருடன் எப்படித் தொடர்ப்பு வந்தது? என்று கேட்டு கிளி விசாரிக்கப் பட்டார். விசாரணை முடிவில் புலிகளது தாண்டிக்குள காவல் அரணில் வைத்து, கூடியிருந்த மக்கள் முன் கிளி சுட்டுக் கொல்லப்பட்டார்.

# பலத்தை வெளிப்படுத்த புலிகள் திட்டம்
# வடபகுதிக்கு வெளியே தாக்குதல்கள்

மட்டக்களப்பு பதுளை வீதியில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் கடந்த சில தினங்களாக மீண்டும் அப்பகுதியில் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அதனால் கொழும்பு மட்டக்களப்பு பாதை 16ம் 17ம் திகதிகளில் மூடப்பட்டிருந்தது.

கிழக்கில் முன்னர் நிலைக்கொண்டிருந்து வெளியேறிய பகுதிகளுக்கு படையினர் மீண்டும் விரும்பி வருவதை தடுக்கப் புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

சுமார் 3 மணி நேரம் நரைப்பெற்ற மோதலில் ஒரு அதிகாரி உற்பட 13 படை வீரர்கள் பலியானார்கள்.

மட்டக்களப்பு பதுளை வீதியில் உள்ள பன்குடாவெளி, கிலுப்பிடிச்சேனை, பாவட்ட வெட்டுவான், கொடுவாமடு போன்ற பகுதிகளில் உள்ள மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

கிழக்கில் தமது நிலைகளை மீண்டும் விரிவுபடுத்தவும், புலிகளது தாக்குதல் பலத்தை பலவீனப்படுத்தவும் படைத்தரப்பு நாட்டம் கொன்டுள்ளது. அதேவேளை வடக்கில் தற்போதுள்ள சூல்நிலையில், வட பகுதிக்கு வெளியே பாரிய தாக்குதல்கள் நடத்துவது மூலம் தமது இராணுவ பலத்தை வெளிப்படுத்த புலிகளும் திட்டமிட்டுள்ளனர்.

திருமலை துறைமுகத்தில் நடத்தப்பட்ட கடற்கரும்புலித் தாக்குதலும் தமது தரப்பு பலவீனமாகவில்லை என்பதை வெளிப்படுத்த புலிகள் மேற்கொண்ட நடவடிக்கை என்று கூறப்படுகிறது.

யாழ் குடாநாட்டில் படையினரின் இடிமின்னல் நடவடிக்கைகளுக்கு எதிரான புலிகளது பாரிய பதிலடி நடவடிக்கை தோல்வியில் முடிந்திருந்தது.

அதனையடுத்து உடனடியாக வடக்கில் பாரிய தாக்குதலை நடத்தாமல் வடபகுதிக்கு வெளியே புலிகள் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். (மேலதிக விபரங்கள் அடுத்த வாரம்.)

# அதிகாரிகள் நடத்தும் திருவிளையாடல்கள்
# நிர்க்கதியான மக்களுக்கு நித்திய சோதனைகள்

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்புப் பிராந்திய இலங்கை வங்கித் தலைமையகத்தில் வெளிநாட்டு கரன்சி நோட்டுக்களை மாற்றமுடியாதுள்ளது. கரன்சி நோட்டுக்களை மாற்றுவதற்காக இவ்வங்கிக்குச் செல்வோரிடம் வங்கி அதிகாரிகள், குறித்த ஒரு தனியார் நாணய மாற்றுமுகவரின் கடைப் பெயரைச் சிபாரிசு செய்கின்றனர்.

சென்ற 16.10.95 அன்று மேற்படி வங்கிக்கு அமெரிக்கக் கரன்சி நோட்டுக்களை மாற்றுவதற்காக இந்த வங்கியின் "வெளிநாட்டுச் செலாவணி மாற்றும் பகுதிக்குச்" சென்ற போது அங்கிருந்த அதிகாரி இங்கே மாற்றமுடியாது என்று கூறி குறித்த ஒரு தனியார் நாணயமாற்றுமுகவரின் கடைப பெயரைச் சிபார்சு செய்து அங்கே மாற்றுமாறும் அவர்கள் வங்கியைவிட கூடுதல் பெறுமதி தருவார்கள் என்றும் கூறினார். அந்தப் பகுதிக்குப் பொறுப்பான மற்றொரு அதிகாரியும் குறித்த கடையின் பெயரையே உடனே கூறினார். பின்னர் வங்கி முகாமையாளரிடம் சென்ற போது அவரும் குறித்த கடைப் பெயரையே சிபார்சு செய்து அங்கே அதிகப் பெறுமதிக்கு மாற்றலாமென்றும் கூறினார். உங்கள் வங்கியில் ஏன் மாற்ற முடியாது எனக்கேட்டதற்க்கு அவர் திருப்தியான பதில் அளிக்கவில்லை. நாம் இப்போதைக்கு எந்த வெளிநாட்டு கரன்சியையும் மாற்றுவதை நிறுத்தியிருக்கிறோம் என்றார். குறித்த கடையில் சகல நாட்டு கரன்சிகளையும் வங்கியைவிட குறைந்த விலையில் வாங்குகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு இலங்கை வங்கி வெளிநாட்டுக் கரன்சிகளை ஏன் மாற்றமுடியாது என்பது மர்மமாக உள்ளது.

▫▫

ஏறாவூரில் இரவு வேளையில் அவசர சிகிச்சை பெற வேண்டிய நோயாளிகள் வைத்திய அதிகாரியின் தங்கும் விடுதியில் பணம் செலுத்தியே சிகிச்சை பெற வேண்டியுள்ளதாக அறிய முடிகிறது.

சென்ற 16.10.95 இரவு வெந்நீர் பட்டுக் காயப்பட்ட 12 வயதுச் சிறுமியொருத்தியை வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றபோது வைத்திய சாலையிலிருந்த தாதியர். இங்கே சிகிச்சையளிக்க முடியாது வைத்தியர் விடுதிக்குக் கொண்டு செல்லுமாறு கேட்டுள்ளனர். அவ்வாறே வைத்தியர் விடுதிக்கு சிறுமி எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டது. சிகிச்சை செலவாக ரூபா 80/-ச் செலுத்துமாறு வைத்தியர் கேட்டுள்ளார். வைத்திய சாலைக்கும் வைத்தியர் விடுதிக்கும் இடையிலுள்ள தூரம் 100 யார் இருக்கும். இரவில் சிகிச்சைக்காகச் செல்லும் அனைவரும் வைத்தியரிடம் பணம் செலுத்தியே சிகிச்சை பெறவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

▫▫

மட்டக்களப்புப் புகையிரத நிலையத்தில் டிக்கட் பதிவு செய்யச்சென்றபோது டிக்கட் முடிந்துவிட்டது என்று அதிகாரி கூறியுள்ளார். டிக்கட் பெறச் சென்றவர், தான் மட்டக்களப்பின் பிரபல கூட்டணி எம்.பி. ஒருவரின் சொந்தக்காரர் எனக் கூறியதும், டிக்கட் பதியும் அதிகாரி உடனேயே டிக்கட் கொடுத்ததாகவும் தெரிய வருகிறது.

# முல்லையில் சிக்கிய பெண்

கடந்தமாத இறுதியில் முல்லைத்தீவு நாவற்காட்டுக்குள் இரவு நேரத்தில் ஒரு பெண் தனிமையில் நின்று கொண்டிருப்பதைக் கண்ட புலி உறுப்பினர்கள் உடனே துரத்திப் பிடித்தார்கள். பெண் பைத்தியம் போல் நடந்து கொண்டாள். ஆனால் புலிகள் அதற்கு இடங்கொடுக்காமல் பிடித்துக் கொண்டு வந்தபோது இப்பெண் தன்னைப் பிடித்துக் கொண்டு வந்தவர்களைக் கடித்துக்கொண்டு ஓட முற்பட்டாள்.

பின்னர் பெண்ணை எல்லா இடமும் பரிசோதித்தபோது அவளிடம் தொடர்புக் கருவி இருந்ததாக புலிகள் காட்டுகிறார்கள். கல்குலேட்டர் வடிவம் கொண்டதாகவும் சிறியதாகவும் சத்தம் குறைவானதாகவும் செல்டெல்போல் ஏரியலும் இருந்ததாக கண்ணால் கண்டவர்கள் கூறுகிறார்கள். அப்பெண் தற்போது புலிகள் அமைப்பினரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார்.

# காணாமல் போன நோயாளி
# வைத்தியசாலையில் பரபரப்பு

(திருமலை நிருபர்)

அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளி ஒருவர் காணாமல் போயுள்ள சம்பவம் ஒன்று திருமலை மாவட்டத்தில் உள்ள கிண்ணியாவில் நடைபெற்றுள்ளது.

இச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது: 11.10.95 அன்று அசீஸ் முகமட் தாஹிரா என்பவர் கிண்ணியா அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். கடும் குளிர்காய்ச்சல் காரணமாகவே அவர் அனுமதிக்கப்பட்டார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தாஹிராவை அன்றிரவு (11.10.95) காணவில்லை. உறவினர்களும், ஊரவர்களும் கடற்கரையிலும் ஊரின் பல பகுதி களிலும் தாஹிராவைத் தேடினார்கள்.

இது தொடர்பாக தலைமை வைத்திய அதிகாரி ஏ.ஜே.எம்.உவைஸிடம் முறையிட்டார்கள். அவரது பதில் திருப்திகரமாக இருக்கவில்லை. அவரும் தலைமறைவாகிவிட்டார். அதனால் கொதிப்படைந்த ஊர்மக்கள் வைத்தியசாலையை இயங்கவிடாமல் தடுத்திருந்தனர். ஊர்மக்கள் எடுத்த முடிவின்படி 17.10.95 முதல் வைத்தியசாலை இயங்கத் தொடங்கியுள்ளது.

காணாமல் போயுள்ள தாஹிரா சில வாரங்களுக்கு முன்னர்தான் ஒரு குழந்தைக்கு தாயானார். தாஹிரா எங்கே? மர்மம் நீடிக்கிறது.

# இரண்டு மாதச் சம்பளம் வேண்டும்
# முல்லைத்தீவில் புலிகள் கோரிக்கை!

முல்லைத்தீவில் உள்ள அரசாங்க உத்தியோகத்தர்களிடம் புலிகள் நிதி கேட்டுள்ளனர். அவர்கள் எடுக்கும் இரண்டு மாதச் சம்பளத்தினை தருமாறு புலிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சமீபத்தில் முல்லைத்தீவில் நடைபெற்ற கூட்டமொன்றில் புலிகளது நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தி உரையாற்றினார்.

"எங்களுக்கு உதவி செய்ய விரும்பாதவர்கள் உபத்திரவமாவது செய்யாமல் இருங்கள். போராட்டத்திற்கு உங்கள் பிள்ளைகளை அனுப்புகிறீர்கள் இல்லை. நிதி கேட்டு வந்தாலும் சிலபேர் தருகிறீர்கள் இல்லை. என்று பேசிக் கொண்டிந்த தமிழேந்தி ஒரு கட்டத்தில் தன்னையும் அறியாமல் அழுதுவிட்டார்.

# முஸ்லிம் வியாபாரிகளுக்கு புலிகள் பாதுகாப்பு!

(காத்தான்குடி நிருபர்)

கிழக்கில் 1990 களில் வெடித்த தமிழ்,முஸ்லிம் இன மோதல்களைத் தொடர்ந்து மீண்டும் இனங்களிடையே ஐக்கியம் துரிதமாக வளர ஆரம்பித்திருக்கிறது. இதற்குக் காரணமாக அண்மையில் போரதீவு ஸ்ரீபத்திர காளியம்மன் ஆலய வருடாந்த உற்சவ விழாவில் பலநூறு முஸ்லிம் கடைகள் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தன.

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள இப்பகுதியில் 90ம் ஆண்டிற்குப் பின் முதன்முதலாக முஸ்லிம்கள் வியாபார நோக்கத்திற்காகச் சென்றது இதுவே முதற்தடவையாகும்.

அங்கு செல்லமுடியாதிருந்த முஸ்லிம்களை வந்து வியாபாரம் செய்யுமாறு புலிகள் அழைத்தனராம் அதன்பின்னரே முஸ்லிம் வியாபாரிகள். அங்கு சென்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அது மட்டுமன்றி முஸ்லிம் வியாபாரிகளுக்கு எதுவும் நடந்து விடாமல் புலிகள் பாதுகாப்பும் போட்டிருந்தனர் என சில வியாபாரிகள் தெரிவித்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

# சசிகலாவை விலக்க முடியாத ஜெயலலிதா!

## பாமர மக்கள் தீர்ப்பு பஞ்சாயத்து தேர்தலில் தெரியும்?

இந்திய நிருபர் ஏழுமலை



"என்னதான் சொன்னாலும் பிரதமர் நரசிம்மராவுக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதாமீது ஒரு பரிவு இருக்கவே செய்கிறது. இல்லாவிட்டால் தமிழக ஆளுநர் சென்னாரெட்டிக்கும், முதல்வருக்கும் இடையிலான திரைமறைவு சமரசத்திற்கு ஏற்பாடு செய்திருப்பாரோ?" என்று கேட்கிறார்கள் தமிழக அரசியல் பார்வையாளர்கள்.

வளர்ப்பு மகனது திருமணத்தை ஒரு சாட்டாக வைத்து சென்னாரெட்டியோடு வலியப்போய் சமரசம் செய்தவர் ஜெயலலிதாதான். அதிலே பிரதமருக்கு ஒரு பங்குமில்லை என்கிறார்கள் இந்திரா காங்கிரஸ் கட்சியினர்.

அது தவறு; பிரதமர் நரசிம்மராவ் ஒரு புதிரான மனிதர். ஒரு பெண்ணாக இருந்தும் தனித்து நின்று சவால்களை வென்று ஜெயித்தவர் என்பதால் ஜெயலலிதாவை அவர் மதிக்கிறார். சசிகலா மற்றும் சசிகலா குடும்பத்தினர்தான் ஜெயலலிதாவை சூழ்நிலைக் கைதியாக்கியிருக்கிறார்கள் என்று பிரதமர் நினைக்கிறார்.

சசிகலா குடும்பம் சிக்கலில் மாட்டப் போகிறது என்பதை முன்கூட்டியே ஜெயலலிதாவுக்கு தெரிவித்துவிட்டார் நரசிம்மராவ் என்பது ஒரு தரப்பாரின் கருத்து.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் தீவிர விசுவாசிகள் பலர்கூட ஜெயலலிதா-சசிகலா உறவு தொடர்வதை விரும்பவில்லை. ஆனால் அதை வெளியே சொல்லி அம்மாவின் நெற்றிக்கண்ணில் சிக்குவானேன் என்று மௌனமாக இருக்கிறார்கள்.

வீடியோக்கடை நடத்திய சசிகலா இன்று இந்தியாவில் விரல்விட்டு எண்ணத்தக்க கோடீஸ்வரிகளில் ஒருவராகிவிட்டார்.

ஜெயலலிதாவின் தனிமையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டார். சசிகலாவை ஜெயலலிதாவோடு நெருக்கமாகச் செல்ல வைத்தவரே நடராஜன்தான். அவர்தான் சசிகலாவின் கணவர்.

நடராஜனுக்கும் ஜெயலலிதாவுக்கும் அவ்வளவு ஆகாது. ஆனாலும் நடராஜன் இன்றுவரை சசிகலா ஜெயலலிதாவோடு தங்கியிருப்பதுபற்றி வாயே திறக்க வில்லை.

எனவே-நடராஜன் நடிக்கிறார். ஜெயலலிதாவோடு பகையாக நடித்துக் கொண்டு மறைமுகமாக உதவிக் கொண்டிருக்கிறார்.

சசிகலா மூலமாகத் திரளும் சொத்துக்களை இறுதியில் அனுபவிக்கப் போகிறவர் நடராஜன் என்கிறார்கள் விசயமறிந்தவர்கள்.

சசிகலா தானாக கழன்றுகொண்டால் சரி, ஜெயலலிதா விரும்வினால்கூட அவராக முன்வந்து சசிகலாவை துண்டிக்க முடியாது என்று சொல்லப்படுவதில் உண்மையில்லாமல் இல்லை.

ஜெயலலிதா தொடர்பான முக்கிய தகவல்கள், ஆவணங்கள்- சசிகலாமூலம் நடராஜனிடம் பத்திரமாகப் போய்ச் சேர்ந்துவிட்டன. சசிகலாவையோ அவரது குடும்பத்தையோ ஜெயலலிதா கைவிட்டால் அவையெல்லாம் நடராஜன் மூலமாக வெளியே வந்துவிடும். எனவே, ஜெயலலிதாவால் அவர்களை ஒன்றும் செய்ய முடியாது. சசிகலாவின் வற்புறுத்தல் இல்லாமல் சுதாகரனை ஜெயலலிதா தத்தெடுத்திருப்பாரா? ஆக, வசமாக மாட்டிக் கொண்டிருக்கிறார் அவர்.

ஜெயலலிதாவுக்கு ஒரே ஒரு அண்ணன் இருக்கிறார். அவரது பெயர் ஜெயக்குமாரன். அவர் மீது ஜெயலலிதாவுக்கு சிறு வயது முதலே பாசம் அதிகம். சசிகலா நெருங்கிய பிறகு தனது அண்ணன் குடும்பத்தோடு உறவு கொள்ளமுடியாமல் இருக்கிறார் ஜெயலலிதா.

ஆனால், இந்த தகவல்கள் எல்லாம் கிராமப்புற பாமர மக்களால் எந்தளவுக்குப் புரிந்து கொள்ளப்படும்?

எம்.ஜி.ஆரின் மறு வடிவமாக ஜெயலலிதாவை நம்பிக் கொண்டிருக்கும் தமிழகத்து கிராம பாமர வாக்காளர்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்?

அம்மா செய்தால் குற்றமில்லை என்று நினைக்கிறார்களா? அல்லது, வரம்பு மீறிய ஆடம்பரங்களால் அதிருப்தி கொண்டிருக்கிறார்களா? என்பதெல்லாம் மர்மமாகவே உள்ளன.

வெறும், கருத்துக் கணிப்புக்களால் மட்டுமே உண்மையான நிலவரத்தை அளவிட இயலாது. எதிர்வரும் டிசம்பர் 1-3ம் திகதிகளில் தமிழ்நாட்டில் நடைபெறும் பஞ்சாயத்து தேர்தல்கள் மூலம் ஓரளவு விடைகிடைக்கும்.

# ரஜினியின் அடுத்த அறிக்கை


"அரசியலுக்கு எப்போதும் வர மாட்டேன் என்று ரஜினி சொல்லவில்லை. தற்போது வரமாட்டேன் என்றுமட்டும் தானே சொல்லியிருக்கிறார். ரஜினி இன்னொரு அறிக்கை விடப்போகிறார். ஆர்.எம்.வீரப்பனுக்கு தனது ஆதரவு எப்போதும் உண்டு என்று ரஜினி அந்த அறிக்கையில் தெரிவிப்பார்" என்று சொல்லியிருக் கிறது ரஜினியின் நெருங்கிய வட்டாரம்.

ரஜினியின் நடவடிக்கைகளை தமிழக உளவுத்துறை கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக்கொண்டு கவனித்து வருகிறது. அதனால் தினமும் அரசியல் நிலவரங்களை தொலைபேசி மூலமும், முக்கிய விஷயங்களை ஒரு நம்பகமான தூதர் மூலமும் ரஜனியும், ஆர்.எம்.வீரப்பனும் பரிமாறிக்கொள் கிறார்கள்.

ரஜினி ரசிகர் மன்றங்கள் துரிதமாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றன. எம்.ஜி.ஆர். மன்றங்களுக்கு ஆர்.எம்.வீரப்பன் புத்துயிர் கொடுக்க ஆரம்பித்துள்ளார்.

இதற்கிடையே ரஜனி ரசிகர்கள் பலர் அ.தி.மு.க.வில் ஜெயலலிதா முன்னிலையில் இணைந்துவிட்டதாக ஒரு நாடகம் நடத்தப் பட்டது. அவர்கள் ரஜினி ரசிகர்களேயல்ல. போலிகள் என்று ரஜினி ரசிகர் மன்றத்தினர் கூறியுள்ளனர்.

# காட்டூன் மூலை




நன்றி —லங்காதீப

# இறைச்சிப் பிரியர்களின் கேள்வி

(வாழைச்சேனை நிருபர்)

வாழைச்சேனை, ஓட்டமாவடி, மீராவோடை பகுதிகளில் இயங்கிவரும் மாட்டிறைச்சிக் கடைகளில் குறிப்பிட்ட தினத்திற்கு முன்தினம் அறுக்கப்பட்ட இறைச்சியும் விற்பனை செய்யப்படுகின்றது. முதல் நாள் விற்பனைக்காக கொண்டுவரப்பட்ட இறைச்சி மாலைவரை விற்பனை செய்யப்படாமல் எஞ்சுமாயின் அவை குளிர் சாதனப் பெட்டி வைத்திருக்கும் தனியார் வீடுகளுக்கோ, அல்லது தனியார் ஹோட்டல்களுக்கோ கொண்டு செல்லப்படுகின்றன. அன்றிரவு முழுவதும் குளிரூட்டப்பட்ட பின்னர், காலையில் இறைச்சிக்கடைகள் திறக்கப்பட்டவுடன், அன்று அறுக்கப்பட்ட இறைச்சி கடையின் கீழ்ப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டு, முந்திய தினத்தன்று அறுக்கப்பட்டு- குளிரூட்டப்பட்ட இறைச்சி விற்பனை செய்யப்படுகின்றது.

குளிரூட்டிக்கொண்டு வரப்பட்டுள்ள இறைச்சி விற்பனை முடிவடைந்தவுடன் புதிய இறைச்சி வெளியில் எடுக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. அநேகமான கடைகளில் இந்த விற்பனைத் தந்திரமே கையாளப்படுகின்றது. இதே வேளையில் ஏறாவூர்ப் பிரதேசத்தில் விற்பனைக்காக கொண்டுவரப்படும் இறைச்சி, அன்று மாலைவரை விற்பனை செய்யப்படாமல் எஞ்சும்போது, குறைந்த விலையிலாவது இறைச்சி வியாபாரிகள் அவற்றை விற்று முடிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளார்கள்.

காலையில் ஒரு கிலோ அறுபது, எழுபது ரூபாய்க்கு விற்பனை செய்யப் படும் இறைச்சி மாலை மங்கும் வேளை நாற்பது, முப்பது ரூபாய்களாகக் குறைந்து விற்பனை முடிவடைந்து விடுவதை அவதானிக்க முடிகின்றது. இதே நடைமுறையை வாழைச்சேனை, ஓட்டமாவடி, மீராவோடைப் பிரதேசங்களில் இறைச்சிக்கடை நடாத்தும் இறைச்சி வியாபாரிகள் கடைப்பிடித்தால் என்ன? என இப்பகுதி இறைச்சி நுகர்வோர் கேட்கின்றனர்.

# சீரற்ற வீதி திருத்தப்படுமா?

மொனராகலை மாவட்டத்தின் படல்கும்புர பிரதேச சபைக்குட்பட்ட அலுபொத்தையை ஊடறுத்து பல கிராமங்களை அடையும் பிரதான வீதி பல்லாண்டு காலங்களாக குன்றும் குழியுமாக கால் நடைக்குக்கூட அருகதையற்றுக் காணப் படுகிறது.

விசேடமாக தேர்தல் காலங்களில் மட்டும் புனர்நிர்மாணமெனக்கூறி பொது மக்கள் ஏமாற்றப்பட்டாலும் குறிப்பிட்ட சில நாட்களில் பழைய நிலைமைக்கே தள்ளுபடியாவதை காணமுடிகிறது.

எனவே, இனி புதிய அரசாவது சீரான நிரந்தரமான, புனர்நிர்மாணத்தை பெற்றுத்தருமா? என குறிப்பிட்ட அதிகாரிகளை பொதுமக்கள் சார்பாக வேண்டி நிற்கிறேன்.

-மிக்தாம் மொஹமட், படல்கும்புர-


## நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா | 505/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா | 258/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா | 132/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772
கொழும்பு

THINAMURASU VAARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.





## அற்புத மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக ஆவி உச்சாட்டங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்சுமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்சுமி இயந்திரம் தேவையா? ஞான திருஸ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464
FAX 00941342463 EXT 25

தலைமையகம்

மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD
இல 31.32.33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,
FAX 0094523093 EXT 28


# செய்தியாளருக்கு சிறப்பு விருது

(அம்பாறை மாவட்ட நிருபர்)

திகாமடுள்ள மாவட்ட சிங்கள பௌத்த அமைப்பினர், இந்த மாவட்டத்தில் பத்திரிகை, வானொலி, ரூபவாஹினி முதலான தொடர்புச் சாதனங்களின் செய்தியாளர்களாக சேவையாற்றிவரும் சிரேஷ்ட செய்தியாளர்கள் பத்துப்பேருக்கு 'சாகித்திய சூரி' பட்டத்துடன் விருது வழங்கி கௌரவித்துள்ளது.



ஏழு சிங்களவர்களும், இரு முஸ்லிம்களும், இரு தமிழரும் இந்த கௌரவிப்புக்கெனத் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

சிங்கள பௌத்த அமைப்பான இந்த அமைப்பு மேற்படி கௌரவிப்புக்கென இரு முஸ்லிம்களையும், ஒரு தமிழரையும் தெரிவுசெய்ததன் மூலம் இனஒற்றுமைக்கான ஒரு முன்மாதிரியைக் காட்டியுள்ளது.

தமிழ்பேசும் பத்திரிகையாளர்களான ஜனாப்.ஏ.எல்.எம்.சலீம் (நிந்தவூர்), ஜனாப்.எம்.ஏ.பகுர்டீன் (அக்கரைப்பற்று), திரு.வீ.பி. சிவப்பிரகாசம் (அக்கரைப்பற்று) ஆகிய மூவருமே கௌரவிக்கப் பட்ட பத்திரிகையாளராவர்.

இந்த கௌரவிப்புவிழா, திகாமடுள்ள சிங்கள பௌத்த அமைப்பின் தலைவர் திரு.எஸ்.அபேரத்ன தலைமையில் அம்பாறை நகரமண்டபத்தில் நடைபெற்றது.

விழாவில் கூட்டுறவு, மாகாணசபைகள், சுதேச வைத்தியத் துறை அமைச்சர் திரு.அமரசிறி தொடங்கொட, புத்தசாசன பிரதி அமைச்சர் திருமதி.சுமேதா பீ.ஜெயசேன, பாராளுமன்ற உறுப்பினர் திரு.எச்.எம்.வீரசிங்க, திருமதி. லவி கொப்பேக்கடுவ, கண்டி தலதாமாளிகை நிலமே திரு.நிரஞ்சன் விஜயரத்ன ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

கௌரவிக்கப்பட்ட சிரேஷ்ட செய்தியாளரும், அம்பாறை மாவட்ட கரையோர செய்தியாளர் சங்கத்தலைவருமான ஜனாப். ஏ.எல்.எம்.சலீம். கூட்டுறவு மாகாண சபைகள், சுதேசவைத்தியத் துறை அமைச்சர் திரு.அமரசிறி தொடங்கொடவிடமிருந்து தமக்கான விருதைப் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காண்க.

அமைப்பின் தலைவர் திரு.எஸ்.அபேரத்னவும் படத்தில் காணப்படுகின்றார்.


கொழும்பில் உள்ள பிரபல நிறுவனம் ஒன்றிற்கு தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கு கட்டுரைகள் நூல்கள் என்பவற்றை மொழிபெயர்க்கும் திறமையுடையவர்கள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க வேண்டிய முகவரி: விளம்பர இல: T/953மே/பா தினமுரசு வாரமலர் த.பெ.இல.1772 கொழும்பு.


# மத்திய மாகாண அமைச்சர் போர்க்கொடி!

## பற்றாக்குறையை நீக்காவிட்டால் போராட்டம்!

(கண்டி நிருபர்)

மத்திய மாகாணத்தில் தமிழ்மொழி மூலப்பாடசாலைகளில் நிலவும் அபரிமிதமான ஆசிரியர் தட்டுப்பாட்டை நீக்கக்கோரி மத்திய மாகாண தமிழ்கல்வி அமைச்சரே இப்பொழுது போர்க்கொடி தூக்கியுள்ளார்.

சுமார் 2000 ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை மத்திய மாகாணத்தைச் சேர்ந்த கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் நிலவுவதாக கல்விச்சேவை ஆணைக்குழுவுக்கு மத்திய மாகாண சபை சுட்டிக்காட்டியிருந்தது.

என்றாலும் ஆசிரியர் தட்டுப்பாட்டை கல்வி, உயர்கல்வி அமைச்சு நீக்கிய பாடில்லை. இந்தப் பிரச்சனையால் தமிழ் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாக மத்திய மாகாண சபையில் தமிழ்பேசும் உறுப்பினர்கள்- குறிப்பாக மலையக தமிழர் பிரதிநிதிகள் எடுத்துரைத்தனர். ஆசிரியர்கள் நியமனங்களை மத்திய மாகாண சபையின் கல்வி அமைச்சு செய்வதில்லை. ஆசிரியர்களை நியமிப்பதற்கான நிதி ஒதுக்கீடும் மத்திய அரசாங்கமே மேற்கொள்ள வேண்டும்.

என்றாலும் இப்பிரச்சனை தொடர்பாக மத்திய மாகாண கல்வி அமைச்சர் திரு. வீ.புத்திரசிகாமணியும் மற்றும் தமிழ் பேசும் ஆளும், எதிரணியைச் சேர்ந்த உறுப்பினர்களும் மத்திய மாகாண சபையில் இருந்தும் வெளியேறி தமது கண்டனத்தையும் எதிர்ப்பையும் தெரிவித்திருந்தனர்.

கடுமையான ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் தமிழ் மொழிப் பாடசாலைகளின் நலன் கருதி பயிலுநர் ஆசிரியர்களை நியமிக்கும் பொருட்டு போட்டிப்பரீட்சையொன்றையும் கல்வி உயர்கல்வி அமைச்சு பரீட்சைத் திணைக்களத்துடன் இணைந்து 1994ல் நடாத்தியது.

இதன் பெறுபேறுகள் வெளியாகி பல வாரங்களாகின்றன. அவ்வாறிருந்தும் ஆசிரியர் நியமனங்களை வழங்காதது ஏன் என மாகாண சபை உறுப்பினர்கள் குரல் எழுப்புகின்றனர்.

இதற்கு முன்னோடியாக மத்திய மாகாண தமிழ் கல்விஅமைச்சர் திரு.வீ. புத்திரசிகாமணி தாமே முன்னின்று போராட்டம் ஒன்றை ஆரம்பிக்கப் போவதாகவும் கூறியுள்ளார்.

தமிழ்ப்பாடசாலை அதிபர்களும் இதற்கு ஆதரவளிக்கவுள்ளதாக நம்பப்படுகின்றது. மத்திய மாகாண சபையில் ஆசிரியர் தட்டுப்பாடு நிலவும் செய்தி ஏற்கனவே முரசில் வெளியானதும் குறிப்பிடத்தக்கது.

# அமைச்சரின் தொகுதியில் தொலைபேசி கோளாறு!

(காரைதீவு நிருபர்)

கல்முனைப் பிரதேச (067 கோட்நம்பர்) தொலைபேசிகள் பேசுவது மிகவும் தொலைவிலேயே உள்ளது.

வர்த்தக மையமான கல்முனைப் பகுதியில் 1000 தொலைபேசிகள் உண்டு. இவற்றால் மட்டக்களப்புக்குக் கூட தொடர்பு கொள்ள முடியாமலுள்ளது.

எனினும் மட்டக்களப்பு (065) லைன் உள்ள சிலதனியார் ஸ்தாபனங்கள் உடனடியாக பாவனையாளர்களின் தேவையை நிறைவுசெய்கின்றன- கூடிய கட்டணத்தில்.

அந்தப் பெரிய பரிவர்த்தனை நிலையத்தால் கொடுக்கமுடியாத தொடர்பை இந்தச் சிறிய தனியார் நிலையங்கள் எப்படி நிறைவேற்றுகின்றன?

கேட்டால் "ஆக 2 லைன்களே உள்ளன எத்தனைபேருக்கு கொடுப்பது: "டிலே" ஆகும்" என்று "எக்ஸ்சேஞ்" பதில்தரும்.

'பவர்புல் மினிஸ்ர'ரின் தொகுதியான கல்முனையில் இப்படியொரு நிலையா? மக்கள் வினவுகின்றனர்.

கல்முனை தனியார் நிலையத்தின் "பக்ஸ்" கட்டணம் எவ்வளவு தெரியுமா? எந்தப் பக்கமானாலும் ரூ.40/- மலைக்கிறீர்களா? அம்பாறையில் முதற்பக்கம் ரூ.30/- ஏனைய பக்கங்கள் ரூ.10. ஏனிந்த அநியாயம்?



படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# தலைநகரில் கொமாண்டோக்கள்?

## தாக்குதலும்—சந்தேகங்களும்

09.10.95 அன்று இரவு சரியாக 10 மணி 10 நிமிடம். கொழும்பு ஹவ்லொக் றோட்டில் கேட்ட குண்டு வெடிப்புச் சத்தமும், துப்பாக்கி வேட்டொலிகளும் கொழும்பு நகரின் பாதுகாப்பை உலுப்பி விட்டன.

தாக்கப்பட்டது ஈ.பி.டி.பி. தலைவரது இல்லம் என்றாலும், தாக்குதல் நடத்தப்பட்ட முறை தலைநகரப் பாதுகாப்புக்கு நிச்சயம் ஒரு சவால்தான்.

இதுவரை கொழும்பில் நடந்துள்ள குண்டு வெடிப்புக்கள், துப்பாக்கிச் சூடுகள், மனிதக் குண்டுத் தாக்குதல்கள் என்பவற்றிலிருந்து ஹவ்லொக் றோட் தாக்குதல் முற்றிலும் வித்தியாசமானது.

ஈழக் கோரிக்கைக்கு எதிரான தமிழ் பிரமுகர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கொழும்பில் வைத்து சுடப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால், அத் தாக்குதல்களில் ஈடுபட்டவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவானதாகும்.

உதாரணமாக, வட்டுக்கோட்டை தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த தியாகராசாவை 1977ற்கு முன்னர் கொழும்பில் வைத்து தமிழ் மாணவர் பேரவையினர் சுட்டனர். அச் சம்பவத்தில் இரண்டு இளைஞர்கள் மட்டுமே நேரடியாகச் சம்பந்தப்பட்டனர். (தியாகராசா தப்பிக்கொண்டார்)

1978ல் கொழும்பில் வைத்து பொத்துவில் பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினத்தை புலிகள் சுட்டனர். பிரபாகரனும், உமாமகேஸ்வரனும் மட்டுமே அதில் நேரடியாக சம்பந்தப்பட்டனர். (கனகரத்தினமும் காயங்களோடு தப்பினார்)

1990 இல் கொழும்பில் வைத்து சாம் தம்பிமுத்து கொல்லப்பட்டதிலும் மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இளைஞர்களே பங்கு கொண்டனர்.

1989 இல் கொழும்பில் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோர் கொல்லப்பட்ட சம்பவத்தில் புலிகளது உளவுப் பிரிவு பொறுப்பாளர் விசு உட்பட மூன்று பேர் மட்டுமே பங்கு கொண்டனர். மூவரும் கொல்லப்பட்டனர்.

ஆக, குறைந்தளவான நபர்கள் பங்கு கொண்ட தாக்குதலாக இருப்பதாலும், இரண்டு மூன்று நிமிடங்களுக்குள் காரியத்தை முடித்துவிட்டு பறந்து செல்லும் தாக்குதல்களாகவும் அவை நடத்தப்பட்டன.

குறைந்தளவு நபர்கள் பங்கு பற்றுவது தப்பிச் செல்வதும் வசதியாக இருக்கும். ஒரு பஸ்ஸில் தொற்றிக் கொண்டு பயணிகளோடு பயணிகளாகவும் சென்று விடலாம். தவிர, மறைந்து கொள்வதும் சுலபம்.

வாகனங்களைப் பயன்படுத்துவது மாட்டிக்கொள்ள வைத்துவிடும். சாம் தம்பிமுத்து கொலையில் சம்பந்தப்பட்ட இளைஞர்களில் ஒருவர் பின்னர் பொலிஸில் மாட்டியதற்கு அவர் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் ஒரு காரணமாகும்.

கொழும்பில் நடைபெற்ற குண்டு வெடிப்புக்கள், மனிதக் குண்டுத் தாக்குதல் என்பவை தனிநபர் ஒருவர் நேரடியாகப் பங்கு கொள்ளும் தாக்குதல் நடவடிக்கைகளாகவே அமைந்திருந்தன.

மேற்கண்ட தாக்குதல் நடவடிக்கைகளை தடுக்க முடியவில்லை என்று பொலிஸாரை மீதோ படையினர் மீதோ ஒரேயடியாகக் குறைசொல்ல முடியாது.

தனிநபர் நடவடிக்கைகளை சர்வதேச ரீதியில் பிரபலமான அமெரிக்கப் பொலிஸாரால்கூட தடுக்க முடியவில்லை. அங்கு நடந்த குண்டுவெடிப்புக்களே அதற்குச் சாட்சி.

சம்பவம் நடந்த பின்னர் குற்றவாளிகளை இனம்கண்டு மடக்குவதில் தான் மேற்கண்ட நடவடிக்கைகளில் பொலிஸாரின் திறமை வெளிப்பட முடியும்.

நம்நாட்டில் பல குண்டுவெடிப்புக்களில் ஒரு சிலவற்றில் மட்டுமே பொலிஸாருக்கு வெற்றி கிடைத்தது. உதாரணமாக, கூட்டுப் படை நடவடிக்கைத் தலைமையகத் தாக்குதலுக்குப் பின்னணியில் இருந்த வரதன் என்பவரை பொலிஸார் இனம் கண்டு கொண்டனர். ஆனாலும் உயிரோடு பிடிக்க முடியவில்லை.

ஆனால் அமெரிக்காவிலும், இந்தியாவில் பம்பாயிலும், நடைபெற்ற குண்டுவெடிப்புகளின் சூத்திரதாரிகள் இனம் காணப்பட்டு கைது செய்யப்பட்டார்கள்.

ராஜீவ் கொலையில்கூட சம்பந்தப்பட்டவர்கள் மடக்கப்பட்டார்கள். எனினும் சிவராசனையும், சுபாவையும் உயிரோடு பிடிக்க முடியவில்லை. ஆனால் கொலை நடவடிக்கை குறித்து பூரணமான விபரங்களை விசேஷ புலனாய்வுப் பிரிவு திரட்டியிருந்தது.

எப்படியோ பெரும் தாக்குதல்களைப் பலர் சேர்ந்து நடத்த முடியாத சூழ்நிலையிலும், அவ்வாறு நடத்தினாலும் இலக்கை எட்ட முடியாத என்ற நிலையிலும்தான் தனிநபர் அல்லது மிகச் சிலர் பங்கு கொள்ளும் நடவடிக்கைகள், தற்கொலைத் தாக்குதல்கள் என்பவை நடத்தப்படுகின்றன.

இதுவரை, அதாவது 09.10.95ற்கு முன்பு வரை, கொழும்பில் பலர் சேர்ந்து பங்கு கொள்ளும் தாக்குதல்கள் நடத்த முடியாது. அவ்வாறு நடத்தினாலும் சம்பந்தப்பட்டவர்கள் திரும்பிச் செல்ல முடியாது என்ற நிலைமை காணப்பட்டது.

இன்னும் தெளிவாகச் சொல்வதானால், மறுதரப்போடு ஒரு மோதலை நடத்து மளவிற்கு எந்தவொரு ஆயுத அமைப்பும் துணியாது என்றே நம்பப்படுகிறது.

ஏனெனில், அவ்வாறு மோதலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது, குறிப்பிட்ட பகுதியை படையினர் சுற்றி வளைத்து விடுவார்கள்; தாக்குதல் நடத்திய வர்கள் தப்பிச் செல்ல முடியாது.

எனவே-தற்கொலைத் தாக்குதல்கள் அல்லது குண்டு வெடிப்புக்கள் நடைபெறக்கூடும் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அனைத்தையும் பொய்யாக்கி விட்டு 10 நிமிட மோதலையும் சந்தித்து, தாக்குதலை முடித்துக் கொண்டு ஒரு குழு பத்திரமாகத் திரும்பிச் சென்றிருக்கிறது.

அதுவும், ஒரு வேனில் வந்து அதே வேனில் திரும்பிச் செல்ல முடிந்திருக்கிறது. குறைந்தது பத்துப் பேராவது அக் குழுவில் இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது.

கொமாண்டோ தாக்குதல் என்றழைக் கப்படும் அதிரடித் தாக்குதல் உத்தியில் நன்கு பயிற்சி பெற்றவர்கள் தாக்குதலில் பங்கு கொண்டுள்ளனர்.

வெடிகுண்டுகளைப் பயன்படுத்து வதிலும் தேர்ச்சி இருந்திருக்கிறது. வாயில் கதவை குண்டு வைத்துத் தகர்த்திருக் கிறார்கள். அருகிலிருந்த வாகனங்கள் அதிர்வில் தூக்கி வீசப்பட்டிருக்கின்றன. குண்டு வைத்தவர்கள் சேதமில்லாமல் தப்பித்து, உள்ளே புகுந்திருக்கிறார்கள்.

இல்லக் கதவின்முன் வெடிகுண்டை வைத்துவிட்டு சிறிது தூரம் ஓடிப்போய் ரிமோட் கொண்ரோலில் குண்டை வெடிக்க வைத்திருக்கலாம். அல்லது தூரத்திலிருந்து வெடிகுண்டு மீது கைக்குண்டை வீசி குண்டை வெடிக்கச் செய்திருக்கலாம். குண்டுச் சத்தமும், துப்பாக்கி வேட்டுக்களும், கைக்குண்டு வீச்சுக்களும் எதிர்த்தரப்பை திடீரென்று திகைப்பூட்டும். அந்தத் திகைப்பைப் பயன்படுத்தி தாக்கிவிட்டு மீள்வதே திட்டமாக இருந்தது.

அப்படியிருந்தும் டக்ளஸ் தேவானந்தாவும், அவரது பாதுகாவலர்களும் தப்பிக் கொண்டதுதான் பெரிய ஆச்சரியம்.

எப்படித் தப்பினார்கள்? பின்புற வழியாகத் தப்பிச் செல்ல முடியும் என்று தாக்குதல் நடத்தியவர்களுக்கு முன்கூட்டியே தெரிந்திருக்காதோ?

தெரிந்திருந்தது. மிகத் துல்லியமாக தாக்குதல் திட்டம் வகுத்துக் கொண்டு வந்தவர்களுக்கு அதுமட்டும் எப்படித் தெரியாமல் போகும்?

குண்டை வைத்து கதவை உடைத்ததும் மாடியிலிருந்த டக்ளஸ் தேவானந்தாவின் அறையை நோக்கிச் சுட்டுக்கொண்டே ஓடினார்கள். மாடிப் படிக்கட்டின் கீழே நின்று அவர்களைச் சுட்டுத் தடுத்திருக்கிறார் தேவானந்தாவின் பாதுகாவலரான ரகு.

அதே நேரம் தேவானந்தாவின் அறையிலிருந்து பின்பக்கமாகவுள்ள பகுதிக்கு ஓடியிருக்கிறார்கள் இரண்டு பேர். தேவானந்தாவின் அறையின் பின்பக்கமாக எப்போதும் ஒருவர் 'சென்றி'யில் நிற்பதுண்டு. அவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கிறார். அவர் சரமாரியாகச் சுட்டுக் கொண்டிருக்க, இன்னொரு பாதுகாவலர் தேவானந்தாவின் அறைக்கு அருகிலுள்ள சுவரின் மேலே நின்று துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கிறார்.



அதனால் வந்தவர்கள் தாமதிக்க வேண்டியதாகி விட்டது. அந்தத் தாமதம் டக்ளஸ் தேவானந்தா பாதுகாப்பாக வெளியேறப் போதுமானதாக இருந்தது.

அதே சமயம் தாக்குதல் நடத்த வந்தவர்களும் பதில் தாக்குதலை எதிர்பார்க்கவில்லை. சத்தம் கேட்ட அதிர்ச்சியில் முன்புறம் வழியாக, அல்லது பின்புறம் மூலமாக தப்பி ஓடுவார்கள். அப்போது சுட்டுவிடலாம் என்றே நம்பியிருக்கிறார்கள்.

ஆகவே துப்பாக்கிச் சமரில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது குறிப்பிட்ட நேரம் தாண்டியதால் உடனே திரும்பியிருக்கிறார்கள்.

ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் தாக்குதலை முடித்துக் கொள்ள வேண்டும். மேற்கொண்டு தாமதிக்கக் கூடாது என்பதே அதிரடித் தாக்குதலின் விதிகளில் ஒன்றாகும்.

டக்ளஸ் தேவானந்தாவின் அறைக் கதவைத் திறந்து உட்பிரவேசிக்கக்கூட தாக்க வந்தவர்களுக்கு நேரம் போதவில்லை. அறைக் கதவில் மட்டுமே இரு சூடுகள் விழுந்திருக்கின்றன. ஆனால் அறையை நோக்கிச் செல்லாமல் அவர்களைத் தடுத்த தேவானந்தாவின் பாதுகாவலர் ரகு கொல்லப்பட்டார்.

அவரது பிஸ்டல் பொலிஸாரால் எடுக்கப்பட்டு, பரிசோதிக்கப்பட்டபோது அதற்குள் ஒரேயொரு குண்டு மட்டுமே பாக்கியிருந்தது.

எதிர்பார்ப்புக்கு மீறிய சில காரியங்கள் நடைபெற்றதால் தாக்க வந்தவர்களும் பதட்டப்பட்டுள்ளனர். கைக்குண்டுகளை 'கிளிப்' கழற்றாமல் கண்டபடி வீசி எறிந்துள்ளனர். (கிளிப் கழற்றினால் மட்டுமே கைக்குண்டு வெடிக்கும்)

தாக்குதலைச் சுலபமாக முடித்துவிட்டு கட்டிடத்தைத் தகர்க்க, தேவானந்தாவின் இல்லத்தின் வலது புறமாக வெடிகுண்டு வைக்கப்பட்டிருந்தது. அதனையும் வெடிக்கச் செய்யாமல் திரும்பிச் சென்றுள்ளனர். அக்குண்டுதான் அன்றிரவே படையினரால் வெடிக்க வைக்கப்பட்டது. இரண்டாவது தடவையும் நகரை உலுக்கவும் செய்தது.

'கிளிப்' கழற்றப்படாத கைக்குண்டுகள் பல 9ம் திகதி இரவும் 10ம் திகதி காலையிலும் கண்டெடுக்கப்பட்டு வெடிக்க வைக்கப் பட்டன.

அது மட்டுமல்ல, கொல்லப்பட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினர்களது ஆயுதங்கள்கூட எடுத்துச் செல்லப்படவில்லை.

பச்சை நிற வேனில் வந்து, அதே வேனில் திரும்பிச் செல்லும்போது, தாக்குதல் குழுவைச் சேர்ந்தவரது ஒரு பிஸ்டல் கீழே விழுந்திருக்கிறது. அதை எடுக்க அவர் குனிந்தபோது வேன் நகர்ந்துவிட்டது.

அப் பிஸ்டலை எடுத்து பொலிஸாரிடம் ஒப்படைத்ததாக கூடியிருந்தவர்கள் கூறுகிறார்கள். பிஸ்டலை யார் வாங்கினார்கள் என்பது இதுவரை தெரியவில்லை.

ஆக, தேடிச் சென்ற இலக்கை எட்ட முடியாவிட்டாலும், கொழும்பில் நடைபெற்றுள்ள மிகப் பாரிய முதலாவது கொமாண்டோ தாக்குதல் அதுதான்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப் பட்டுள்ள நிலையில், வேன் ஒன்றில் வந்து 10 நிமிடம் தாக்கிவிட்டு பத்திரமாக திரும்பிச் சென்றுள்ளமை லேசுப்பட்ட காரியமல்ல.

தாக்குதல் நடத்தப்பட்ட முறையை விட தாக்குதல் நடத்தியவர்கள் திரும்பிச் செல்ல முடிந்ததுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியம்.

இதனால் பல சந்தேகங்கள் பரவலாக எழுப்பப்பட்டுள்ளன. ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா, புலிகள் மீது, எவ்வித சந்தேகமும் இல்லாமல் குற்றம் சாட்டுகிறார். ஆனால், வெளியே உள்ள அபிப்பிராயம் அதற்கு நேர்மாறாக இருக்கிறது.

ஈ.பி.டி.பி. சமீபகாலமாக எடுத்துவரும் நிலைப்பாடும் அந்தச் சந்தேகங்களுக்கு ஒரு காரணமாகும்.

பிரேமதாசா ஆட்சிக் காலத்தில் புலிகளை மட்டுமே குறை கூறிக் கொண்டிருந்த ஈ.பி.டி.பி., தனக்கு பாராளுமன்றத்தில் கிடைத்த 9 ஆசனங்களின் அரசியல் பலத்தை வைத்து வித்தியாசமான தோற்றம் எடுக்கத் தொடங்கியது.

வடபகுதியில் நடைபெறும் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் குறித்து கடுமையாக சாடத் தொடங்கியது. அரசு முன்வைத்த தீர்வு யோசனைகளையும் குறை கூறியதோடு உடனடியாக மாற்று யோசனையையும் முன்வைத்தது.

இறுதியாக, அவசரகால சட்ட வாக்கெடுப்பிலும் கலந்து கொள்ளாமல் ஒதுங்கிக் கொண்டது. வடக்கே போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அங்கே என்ன நடக்கிறது என்று தெரியாமல் நாம் எப்படி வாக்களிக்க முடியும்? என்று கேட்டிருந்தார் டக்ளஸ் தேவானந்தா.

இவையெல்லாம் அரசுக்கும் ஈ.பி.டி.பி.க்கும் இழுபறி நிலை இருப்பதை வெளிப்படுத்தியதால் ஈ.பி.டி.பி.க்கும் புலிகளுக்கும் இடையிலான பிணக்குக் குறித்து மக்கள் மறந்து போனார்கள்.

விஷயம் என்னவென்றால், ஈ.பி.டி.பி. வடக்கில் ஏற்படும் அனர்த்தங்கள் குறித்துப் பேசினாலும் புலிகளுக்கு எதிரான நிலைப் பாட்டைக் கைவிடவில்லை.

அதேபோல, ஈ.பி.டி.பி.யோ வேறு எந்த தமிழ் கட்சிகளோ வடக்கு-கிழக்கு நிலவரம் குறித்து பேசினாலும்கூட, அக்கட்சிகள் துரோகமானவை என்ற நிலைப்பாட்டை புலிகளும் கைவிடவில்லை.

இன்னொரு விஷயம் மிக முக்கியமானது.

தம்மைத் தவிர வேறு யாரும், அது அரச தரப்பாக இருந்தாலும் சரி, தமிழ் கட்சிகளாக இருந்தாலும் சரி, தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறுவதை புலிகள் அனுமதிக்கப் போவதில்லை.

ஆகவே, புலிகளுக்கு எதிராகப் பேசுவது மட்டும்தான் புலிகளை ஆத்திரமூட்டும் என்று கருத முடியாது.

அதற்கு உதாரணம், செப்டம்பர் மாத விடுதலைப் புலிகள் பத்திரிகையில் டக்ளஸ் தேவானந்தா, நீலன் திருச்செல்வம், மு.சிவசிதம்பரம் ஆகியோரை வசைபாடி புலிகளது ஆஸ்தான கவிஞர் புதுவை இரத்தினதுரை 'வியாசன்' என்ற பெயரில் எழுதிய கவிதையாகும்.

இத்தனைக்கும் நீலன் திருச்செல்வம், திரு.சிவசிதம்பரம் ஆகியோர் புலிகளைப் பற்றி வெளிப்படையாகப் பேசுவதே கிடையாது.

எனவே-புலிகள் இப்போது ஏன் ஈ.பி.டி.பி. மீது தாக்க வேண்டும்? அவசியமேயில்லையே என்ற வாதம் அடிபட்டுப் போய்விடுகிறது.

ஆனால், தாக்குதல் நடத்தியவர்கள் எப்படித் தப்பிச் சென்றார்கள்? சம்பவம் நடைபெறும் திசையை சத்தங்கள் மூலம் தெரிந்து கொண்டும் பொலிஸாரோ, படையினரோ ஏன் அப்பகுதியை சுற்றி வளைக்க முடியவில்லை என்பது அடுத்த கேள்வி.

உண்மையில் சம்பவ இடம் நோக்கி ஒரு பொலிஸ் ரோந்துப் பிரிவு சென்றது. தாக்குதல் குழுவினர் அதன்மீதும் சுட்டிருக்கிறார்கள்.

அதுதவிர சம்பவம் நடைபெற்ற ஹவ்லொக் றோட்டிலிருந்து நுகேகொட செல்லும் பாதையில் இடது புறம் பொலிஸ் சென்றிகள் எதுவுமே இருக்கவில்லை.

ஆனால், வலது புறத்தில் நின்ற பொலிஸார், உடனடியாக இடதுபுறத்தில் மாறிநின்று வாகனங்களை தடுக்காமல், சம்பவ இடத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த வாகனங்களை தடுத்துக் கொண்டிருந்ததுதான் வேடிக்கை.

அதாவது நகருக்குள் செல்லும் வாகனங்கள் தடுக்கப்பட்டதே தவிர, நகரில் இருந்து வெளியே செல்லும் வாகனங்கள் உடனடியாக தடுத்து சோதனையிடப்படவில்லை.

நுகேகொட பக்கமாகவே தாக்குதல் குழு சென்றதாக நேரில் கண்டவர்கள் கூறியுள்ளனர். ஆக, நகருக்கு உள்ளே வரும் பாதைகளில்தான் சிக்கல். நகருக்கு வெளியே சுலபமாக போய்விடலாம் என்பதை முன்கூட்டியே ஒத்திகை பார்த்திருக்கலாம்.

எனவே-தப்பிச் செல்ல முடிந்ததை மட்டும் வைத்து ஒரு முடிவுக்கு வந்துவிட முடியாது.

ஆனால், தாக்குதலில் ஈடுபட்டவர்கள் பயன்படுத்திய 'பச்சை வேன்' இதுவரை சிக்காததுதான் ஆச்சரியம். சகலரது கண்ணிலும் மண்ணைத் தூவிவிட்டு எப்படி மறைந்திருக்கிறது?

தாக்குதல் நடத்தியவர்கள் புலிகளாக இருந்தால் தலைநகர நிலவரம் குறித்து அரசு கவலைப்பட்டேயாக வேண்டும்.

கொழும்பில் நினைத்த நேரத்தில், நினைத்த முறையில் அதிரடித் தாக்குதல் நடத்த முடியுமானால், அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா கூறியதுபோல, அது "அரசுக்கு பெரிய அச்சுறுத்தல்" என்பதில் ஐயமேயில்லை.

புலிகளது கொமாண்டோக்கள் ஆயுதங்களோடும், வாகனத்தோடும் தலைநகரில் மறைந்து கொள்ள முடியும் என்ற நினைப்பே பல முக்கியஸ்தர்களின் தூக்கத்தை கெடுத்துவிடப்போவதும் உண்மை.

எப்படியோ, தலைநகரப் பாதுகாப்பு குறித்து அரசு திருப்திப்பட்டிருந்தால், அதற்கு திருஷ்டி பட்டதுபோல் அமைந்து விட்டது தேவானந்தா இல்லத் தாக்குதல்.

நாரதர்



கொழும்பு விடுதி ஒன்றுக்குள் சோதனையிடப் போவதாக் கூறிக் கொண்டு நுழைந்த கும்பல் ஒன்று லாச்சியை மட்டுமே சோதனையிட்டுப் போட்டு, உள்ளே இருந்ததை சுருட்டிக் கொண்டு போட்டுதாம். பிறகு விசாரித்து பார்த்தா வந்தது போலிகளாம். சோதனை மேல் சோதனை தான்.

யாழ்ப்பாணத்திலை ரெண்டு எழுத்தார் நிதி வசூல் செய்யினமல்லோ. படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்-யுவதிகளைத்தான் திரட்டலில் இறக்கிவிட்டிருக்கினமாம். காலையில் 8 மணிக்கு தொடங்கி பகல் 11 மணிவரையும் ஒரு ரவுண்ட். 11 மணிக்கு திரட்டின நிதியை ஒப்படைச்சுப் போட வேணும். பிறகு 2 மணியிலிருந்து மாலை 5மணிவரை ரெண்டாவது ரவுண்ட். ரெண்டு எழுத்து பொறுப்பாளர் ஒருவரின் கவனிப்பிலை திரட்டல் நடக்குமாம்.

முல்லையில் ஒரு ஊர்வலம் நடத்த திட்டமிட்டுப் போட்டு இரவு ஒரு மணிக்கு வீடு வீடாகப் போய் அறிவிச்சவையாம். மறுநாள் காலை 8 மணிக்கு ஊர்வலம் தொடங்கி சென்று கொண்டிருக்க 8 1/2 மணிக்கு பறவை வந்து முட்டை போட்டதாம். இரவு தான் அறிவிச்சது அதுக்குள்ளை எப்படி தகவல் போனது எண்டு ரெண்டு எழுத்தார் குழம்பிப் போச்சினமாம். ஒரு பொறுப்பாளர் சொன்னாராம் "இனிமேல் உடனடியாக கூட்டிக்கொண்டு வந்துதான் ஊர்வலம் நடத்த வேணும்."

## அதிரடி ஐயாத்துரை

கொழும்பிலை நடந்த கொமாண்டோ தாக்குதலுக்குப் பிறகு அதிகார மட்டத்திலையும் கடும் யோசனை ஏற்பட்டிருக்குதாம். தங்களுக்கு தரப்பட்ட பாதுகாப்பை உயர்த்தச் சொல்லிப் பலர் கேட்டிருக்கினமாம்.

சில செய்திகள் எப்படியெல்லாம் திரிபடைகிது பாருங்கோ. ஜனநாயக கட்சித் தலைவரது இல்லத்துக்குப் பக்கத்திலை பொலிஸ் காவல் நிலை இருந்தது. அடிக்க வந்தவை தங்களை இராணுவத்தினர் எண்டு அடையாளம் காட்டினவை எண்டு செய்தியள் பார்த்திருப்பியள். ஒரு விஷயம் தெரியுமோ? அந்த இல்லத்துக்குப் பக்கத்திலை அப்படி ஒரு பொலிஸ் காவல் நிலையே கிடையாது. தொப்பி ஒண்டு கிடந்ததல்லோ, அது பாவிக்கப்படாத புத்தம் புதிது. வழமையாக தொப்பி பாவிக்கிற ஆட்கள் எண்டால் புதுசா ஏன் செய்து கொண்டு வரவேணும்? எங்கையோ உதைக்குதல்லோ...?

கிளிநொச்சியில் அதிகாரமுள்ள அதிகாரியாக இருப்பவர் தனது "பஜிரோவை" வவுனியாவில் தான் வைத்திருந்தவராம். ஏதோ கெட்ட நேரம் கிளிநொச்சிக்கு கொண்டுபோயிருக்கிறார். ரெண்டு எழுத்தார் வந்து வாங்கிக் கொண்டு போயிட்டினமாம். திருப்பித் தரச்சொல்லி கேட்டவராம். தரலாம் ஒரு பிரச்சனையும் இல்ல. வேறை ஒரு நல்ல வாகனமாக கொண்டுவந்து தந்து போட்டு பஜிரோவை கொண்டு போங்கோ எண்டு சொல்லிப் போட்டினமாம். தில்லைக்கு வந்த தொல்லை. 'நடராஜா நட' எண்டு சொல்லாமல் சொல்லிப் போட்டினம்.

கூட்டான கட்சியின் நீலமானவர் தமிழக சபாநாயகரைப் பிடிச்ச கதைச்சவராமல்லோ. மக்கள் பாதிப்பை தடுக்கமுடியாதோ எண்டு சபாநாயகர் கேட்டவராம். அதுக்கு நீலமானவர் சொன்னாராம் "அது உங்கள்-கையிலைதான் இருக்கு" தமிழ்நாட்டு சட்டசபையிலை நடக்கிற சண்டையைக் கூட அவராலை தடுக்க முடியேல்லை. அவரிட்டைப் போய் பெரிய பெரிய வார்த்தையெல்லாம் பேசலாமோ? சரி, ஒரு முகத்துக்காக அப்படிச் சொன்னாலும் அதை ஏன் சீரியசான விஷயமா பத்திரிகைகளுக்கு சொல்லவேணும்?

கிழக்கின் சிங்கத்தார் கனடாவிலை இருந்து வெளிக்கிட்டு மீண்டும் லண்டனுக்குப் போய் தரித்தவராம். புறப்படலாம் எண்டு ரெடியாக கொழும்பு தாக்குதல் செய்தி காதிலை விழுந்ததாம். அதாலை புறப்படும் திகதியை பொட்டெனத் தள்ளிவைச்சவராம்.

மலையக தனித்துவ தலைவர் விவகாரத்திலை பச்சைக் கட்சியின் ஆங்கிலப் பத்திரிகை ஒண்டு கிளறல் நடத்திக் கொண்டிருக்குதாம். காலி துறைமுக குத்தகை விவகாரம் பற்றி விலாவாரியாக அலசப்படுகிறதாம். தலைமை சொல்லாமல் நடக்குமோ?

ஸஃபீ அம்ரோஹி எழுதிய கவிதையில் இருந்து ஒரு துளி. விரும்புவோர் பருகலாம்.

"காதலி, வா!
இந்த மின்னலைப்
பங்கிட்டு கொள்வோம்.
வெளிச்சம் உனக்கு
துடிப்பு எனக்கு!



படிப்பகம்

www.padippakam.com

# உரிமை கோராத அரசியல் படுகொலை!

49

## இந்தியாவின் திட்டம்

பூட்டானின் தலைநகரான திம்புவில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் கூட்டணியை பங்குகொள்ளாமல் செய்வது தான் சகல தமிழ் இயக்கங்களின் நோக்கமாகவும் இருந்தது.

ஆனால், இந்திய அரசு வேறு விதமாகக் கணக்குப் போட்டது.

இயக்கங்கள் மட்டுமே பேச்சிலே கலந்து கொண்டால் தமிழர் தரப்பிலிருந்து தீவிரமான நிலைப்பாடுதான் பேச்சு மேசையில் போடப்படும்.

மிதவாத தலைமையும் கலந்து கொண்டால் சூடு அதிகமாகாமல் பார்த்துக் கொள்ளலாம்.

அது மட்டுமல்லாமல், இலங்கைத் தமிழர் விவகாரத்தில் 'தீவிரவாத இயக்கங்கள்' மட்டுமே தனிச் செல்வாக்கு செலுத்துவதையும் இந்திய அரசு அவ்வளவாக விரும்பியிருக்கவில்லை.

என்றாலும்கூட, ஜே.ஆர்.அரசை பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவரும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்த கூட்டணியால் ஒரு போதும் முடியாது என்பதும் இந்தியாவுக்குத் தெரிந்தே இருந்தது.

இயக்கங்களுக்கு ஆயுதமும், பயிற்சியும் வழங்கியதை இந்தியா மறுத்துக் கொண்டிருந்தமை ஒரு இராஜதந்திரமே தவிர, பரமரகசியமல்ல.

எனவே இயக்கங்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியாதபோது, ஜே.ஆர். இந்தியாவிடம் வந்தேயாக வேண்டும்.

'அவர்களை நிறுத்தச் சொல்லுங்கள்' என்று கேட்டேயாக வேண்டும் என்று இந்தியா கணக்குப் போட்டிருந்தது.

கணக்குப் பொய்க்கவில்லை. தனித்து நின்றோ, இந்தியாவோடு முரண்டு பிடித்தோ இயக்கங்களின் நடவடிக்கைகளை அடக்கிவிட முடியாது என்பதை ஜே.ஆர். நன்கு புரிந்து கொண்டார்.

எனவே-இந்தியப் பிரதமர் ராஜீவோடு நட்பை வளர்த்துக்கொள்ள ஆரம்பித்தார்.

உள்நாட்டுப் பிரச்சனை என்ற நிலையில் இருந்து, வெளிநாட்டு மத்தியஸ்தத்தோடு தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை என்றாவதற்கு இனப்பிரச்சனை தீவிரமானதை ஜே.ஆர். ஏற்க வேண்டியதாகி விட்டது.

பற்றும் கொண்டவர். கூட்டணித் தலைவர்கள் மத்தியிலேயே சோவியத் யூனியனுக்கு சார்பான போக்கைக் கொண்டிருந்தவரும் அவர்தான்.

பொதுத்தேர்தல் வந்தால் தமது தொகுதிக்கு செல்லாமலேயே வெற்றி பெறக்கூடியவர்களில் ஒருவர் தர்மலிங்கம்.

இருவரும் கொழும்பு வந்து அரசியல் கட்சி பிரதிநிதிகளைச் சந்தித்தார்கள்.

ஆலாலசுந்தரம் பேட்டிகள் கொடுத்துக் கொண்டிருந்தார். போர் நிறுத்தத்தை அரசு சரிவர அமுல் நடத்தும் என்று நம்புவதாகக் கூறிக் கொண்டிருந்தார்.

கூட்டணி மட்டுமே தமிழர் தரப்பில் இருந்து அக் காலகட்டத்தில் போர்நிறுத்தத்தை விரும்பிய ஒரே ஒரு அமைப்பாகும்.

போர்நிறுத்தம் வெற்றியளித்தால் ஆயுதப் போராட்டம் நிரந்தரமாக நிறுத்தப்பட்டுவிடும். அதன்பின்னர் தமது அரசியல் நடவடிக்கைகளைத் தொடர தடைகள் இருக்காது என்பது கூட்டணியினரது நினைப்பு.

ஆனால், சம்பவங்கள் அவர்களது நினைப்புகளுக்கு மாறாகவே நடந்து கொண்டிருந்தன.

## நேரடி எச்சரிக்கை

திம்பு பேச்சுவார்த்தையில் கூட்டணியினர் கலந்துகொள்வதை தடுக்க முடியவில்லை என்பதால், மாற்று நடவடிக்கை பற்றி நான்கு இயக்கக் கூட்டமைப்புக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

நான்கு இயக்கங்களும் திம்பு பேச்சுவார்த்தையில் தமது நிலைப்பாட்டை முன்வைப்பது என்றும், அதற்கெதிராக கூட்டணி செயற்படக்கூடாது என்று எச்சரிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.


திம்பு பேச்சில் கலந்துகொள்ள அமிர்தலிங்கம் புறப்பட்டு சென்றுவிட்டார்.

யாழ்ப்பாண தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் சென்னையில் இருந்தார்.

அவரை நேரில் அழைத்து கூட்டமைப்பின் நிலைப்பாட்டை தெரிவிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

முடிவெடுக்கப்பட்டவுடன் ரெலோ தலைவர் சிறீ சபாரத்தினம், "யோகேஸ்வரனை இப்போதே அழைத்து எமது நிலைப்பாட்டை சொல்லிவிடலாம். கூப்பிடுங்கள்" என்றார். கூட்டத்தில் கலந்து கொண்ட பிரபாகரனும் அதனை வலியுறுத்தினார்.

ஈரோஸ் பாலகுமார் உடனடியாக



கண்டுபிடித்து வரத் தாமதமாகிவிட்டது" என்றார் யோகேஸ்.

இயக்கத் தலைவர்கள் யாருமே வாய் திறக்கவில்லை. அன்ரன் பாலசிங்கம் மட்டுமே கூட்டமைப்பின் கருத்தை விளக்கினார்.

மறுநாள் இருவரும் பிணமாக வீதியில் கிடந்தார்கள்.

## யார் காரணம்?

கொலைக்கு காரணம் யார் என்று எவருக்குமே தெரியவில்லை.

புலிகள் இயக்கத்தினர் செய்திருக்கலாம்

இனவாதப் பூதம் தமிழினத்தை அழிக்கக் கிளம்பிய போதும், இவர்கள் பாராளுமன்ற ஆசனங்களையும் பதவிகளையும் கட்டிப் பிடித்தபடி, அரசுத் தலைவர்களுக்கு துதிபாடிக் கொண்டிருந்தார்கள்.

கூட்டணித் தலைவர்கள் புரிந்த மாபெரும் தவறு என்னவென்றால், தமிழ் புரட்சிவாத இளைஞர் பரம்பரையை அந்நியப்படுத்தி வந்தமையாகும். தேசிய சுதந்திரத்துக்காக நாம் வரித்துக்கொண்ட புரட்சிகர ஆயுதப் போராட்ட வரலாற்றுக் கட்டாயத்தையும் அதன் அரசியல் முக்கியத்துவத்தையும் கூட்டணி புரிந்து கொள்ளவில்லை. எம்மை பயங்கரவாதிகள், தீவிரவாதிகள் என்று வர்ணித்தனர்.

இவர்கள் செய்தது எல்லாம் எமது ஆயுதப் போராட்டத்தை ஒரு அரசியல் அழுத்தமாக பிரயோகித்து அரசிடம் சலுகைகளை வேண்டி சமரசப் பேச்சுக்கள் நடத்தியதுதான்.

## இந்திய ஆதரவு

நாமே போராடி நமது விடுதலையை வென்றெடுக்க வேண்டும் என்ற

# இந்தியத் 'தலைமீடும்' பிரபாவின் நிலைப்பாடும்

"நாங்கள் தீவிரவாதக் குழுக்களல்ல. அரசியல், இராணுவ இயக்கங்களாக இருக்கிறோம். போரில் மட்டுமல்ல, பேச்சுக்களிலும் நாம் வல்லவர்கள். எங்களுக்காக வேறு யாரும் பேசத் தேவையில்லை" என்று தனது பேச்சை ஆரம்பித்தார் அன்ரன் பாலசிங்கம்.

"நான்கு அடிப்படை அம்சங்களை நாங்கள் திம்பு பேச்சுவார்த்தையில் முன்வைக்கப் போகிறோம். அதற்கு மாறாக வேறு எந்த திட்டத்தையும் முன்வைக்க வேண்டாம் என்று அமுதருக்கு தெரிவித்து விடுங்கள்" என்று தனது நீண்ட விளக்கத்தின்

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

என்றே பொதுவாக நம்பப்பட்டது.

சென்னையில் கூட்டமைப்புக் கூட்டம் நடந்தபோது ஈரோஸ் பாலகுமார் பிரபாவிடம் கேட்டார்; "நீங்கள்தான் போட்டதாகச் சொல்லுகிறார்கள். உண்மையோ?"

அதற்கு பிரபா சிரித்துக் கொண்டே சொன்னார், "சிறியின் பெடியள்தான் செய்தது என்றும் ஒரு கதை".

சிறியும் அப்போது கூட்டமைப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தார். அவரும் சிரித்துக் கொண்டே, "நாங்கள் செய்யவில்லை" என்று கூறிவிட்டார்.

ரெலோ இயக்கத்தை தவிர, ஈ.பி.ஆர்.எல்.எஃப், ஈரோஸ் இரண்டும் புலிகள் தான் காரணம் என்று நம்பிக் கொண்டிருந்தன.

ரெலோ செய்திருக்கும் என்று புலிகளைத்தவிர, யாருமே சந்தேகப்படவில்லை.

ரெலோ இயக்கத்தின் முக்கிய தளபதியாக இருந்த தாஸின் தலைமையில்தான் இருவரும் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்களில் ஆலால் பற்றி யாருமே அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. தர்மலிங்கம் கொல்லப்பட்டது குறித்தே பரவலான கவலை தெரிவிக்கப் பட்டது.

அமரர் தர்மலிங்கம் புளொட் தலைவர் சித்தார்த்தனின் தந்தையார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திய இராணுவம்

இதற்கிடையே கூட்டணியினர் மேற்கொண்ட மற்றொரு நிலைப்பாட்டையும் குறிப்பிட்டேயாக வேண்டும்.

"இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற இந்திய இராணுவத்தை உடனே அனுப்ப வேண்டும்" என்று கலைஞர் கருணாநிதி திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார்.

அந்த நேரத்தில் சென்னையில் இருந்த அமிர்தலிங்கம் ஒரு பேட்டியில், இந்தியா தனது இராணுவத்தை அனுப்ப வேண்டும் என்று தனது பங்குக்கு கூறிவைத்தார்.

பேட்டியைக் கண்ட புலிகள் இயக்கத்திற்குப் பொறுக்க முடியவில்லை.

உடனடியாகப் பிரபாகரன் ஒரு அறிக்கை வெளியிட்டார்.

அந்த அறிக்கையின் ஒரு பகுதி இது;

"எமது பழைய பாராளுமன்ற தலைமை- எதிரியைப் புரிந்து கொள்ளும் ஆற்றலும், அரசியல் ஞானமும் அற்றதாக இருந்ததுதான் எமக்கு இந்த துர்க்கதி ஏற்படக் காரணமாகும்.

அரச பயங்கரவாதம் கூர்மையடைந்து

# திம்பு பேச்சும் கூட்டணிக்கு எச்சரிக்கையும்

அதன் வெளிப்பாடுதான் இந்திய தலைநகரில் இரு நாட்டு தலைவர்களும் நடத்திய உச்சிமாநாடு.

அதனைத் தொடர்ந்துதான் பூட்டானில் திம்பு பேச்சுவார்த்தைக்கு திட்டமிடப்பட்டது.

## அமிர் உத்தரவு

இக்காலகட்டத்தில் சென்னையிலிருந்த அமிர்தலிங்கம் யாழ்ப்பாணத்தில் இருந்த கூட்டணித் தலைவர்களோடு தொடர்பு கொண்டார்.

பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகப் போகின்றன. வடக்கு-கிழக்கில் உள்ள கூட்டணித் தலைவர்கள் மௌனமாக இருந்தால், பேச்சுவார்த்தையில் கூட்டணியின் பங்கு சிறு அளவில் மட்டுமே என்று மக்கள் நினைத்து விடுவார்கள்.

அரசியல் பேச்சுவார்த்தைகளில் வல்லவர்கள் என்ற எண்ணமும் அடிபட்டுப் போய்விடும்.

ஆங்கிலப் புலமையில் கெட்டிக்காரர்கள். பேச்சுவார்த்தைகளில் சாணக்கியர்கள். அனுபவசாலிகள் என்று தம்மைப் பற்றி மக்களிடம் ஒரு கருத்தை ஏற்படுத்தியிருந்தவர்கள் கூட்டணித் தலைவர்கள்.

போராளி இயக்கங்கள் இலங்கை இனப்பிரச்சனையில் தீவிரமானதும், தீர்க்கமானதுமான பங்கை வகித்தபோதும், "பேச்சுவார்த்தைக்கு கூட்டணி, போருக்கு இயக்கங்கள்" என்று ஒரு தவறான அபிப்பிராயம் இருக்கவே செய்தது.

திம்பு பேச்சில் இயக்கங்கள் தமது அரசியல் வெளிப்பாட்டையும் காட்டி விட்டால், தமக்குள்ள ஒரேபிடியும் போய் விடும் என்று கூட்டணித் தலைமையினர் கவலை கொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்த கோப்பாய் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.ஆலாலசுந்தரம், மானிப்பாய் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் ஆகிய இருவரையும் உடனே கொழும்புக்கு செல்லுமாறு கூறினார் அமிர்தலிங்கம்.

ஆலாலசுந்தரம் ஊழலுக்குப் பேர் போனவர். ஆனால், அவர்தான் அப்போது கூட்டணியின் நிர்வாகச் செயலாளர்.

தர்மலிங்கம் நேர்மையானவர். சோஷலிசக் கருத்துக்களில் மிகுந்த ஈடுபாடும்,



மு. ஆலால சுந்தரம்.

தொலைபேசியில் தொடர்பு கொண்டு யோகேஸ்வரனுடன் பேசினார்.

"இங்கே பிரபா, சிறீ, பத்மநாபா எல்லோரும் இருக்கிறார்கள். உங்களை உடனடியாகச் சந்திக்க வேண்டும். வாருங்கள்" என்று கூட்டமைப்பு அலுவலக முகவரியைச் சொன்னார்.

தனியாக வர யோகேஸ்வரனுக்கு ஒரு தயக்கம். "திரு. தங்கத்துரையும் என்னோடு இருக்கிறார். அவரையும் அழைத்து வரலாமா?" என்று கேட்டார் யோகேஸ். "சரி" என்றுவிட்டார் பாலகுமார்.

"அவர்கள் வந்ததும் தம்பிமுறை சொல்லி அழைத்து சமாளிக்கப் பார்ப்பார்கள். அதற்கெல்லாம் இடம் வைக்காமல் எமது முடிவைக் கண்டிப்பான குரலில் கூறிவிடவேண்டும்" என்று அனைவரையும் உஷார்படுத்தினார் சிறீ சபாரத்தினம்.

"பாலசிங்கம் அண்ணர் எமது கருத்தைச் சொல்லட்டும். நாம் எதுவும் பேசாமல் சீரியஸாக இருப்போம்" என்றார் பிரபாகரன்.

அரைமணி நேரத்தில் ஓட்டோ ஒன்றின் மூலம் கூட்டமைப்பு அலுவலகத்திற்கு வந்து சேர்ந்தனர் யோகேஸ்வரனும், தங்கத்துரையும்.

எதிர்பார்த்தது போலவே இருவரும் வாய்கொள்ளாத சிரிப்போடு தோன்றினார்கள்.

"லேட்டாகப் போச்சோ? முகவரியை

இறுதியில் கூறினார் பாலசிங்கம்.

## 'மாறாகப் பேசினால்...?'

அப்போது சிறீ சபாரத்தினம் கண்டிப்பான குரலில் கூறியது இது:

"எங்களுக்கு மாறாக திம்புவில் அமுதர் பேசுவதாக இருந்தால், திரும்பிவரும் யோசனையை விட்டுவிடச் சொல்லுங்கள். வேண்டுமானால் அவர் திம்புவிலேயே இருந்து கொள்ளட்டும்".

யோகேஸ்வரன் ஆடிப்போனார்.

"அமிர் அண்ணா ஒருநாளும் உங்களுக்கு விரோதமாகச் செல்லமாட்டார். உங்கள் முடிவுதான் கூட்டணியின் முடிவும். நீங்கள் நான் சொல்வதை நூறுவீதம் நம்பலாம்" என்று சொன்னார் யோகேஸ்வரன்.

"நம்புவதும், நம்பாமலிருப்பதும் அமுதர் திம்புவில் நடந்து கொள்வதைப் பொறுத்தது. நீங்கள் உடனடியாக அவரைத் தொடர்பு கொண்டு, நாங்கள் சொன்னதைத் தெரிவித்து விடுங்கள்" என்றார் பிரபா.

இயக்கத் தலைவர்களை சமாதானப் படுத்திவிட்டு யோகேஸ்வரனும், தங்கத்துரையும் சென்றனர்.

யோகேஸ்வரன் இன்றில்லை. திரு. தங்கத்துரை திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருக்கிறார்.

எச்சரிக்கையை வாய்மூலமாக மட்டும் தெரிவித்தோடு நிறுத்திக் கொள்ள விரும்பவில்லை சிறீ சபாரத்தினம்.

'யாழ்ப்பாணத்தில் உள்ள கூட்டணி முக்கியஸ்தர்கள் இருவரை தீர்த்துக்கட்டினால்தான் கூட்டணி ஒழுங்காக நடந்து கொள்ளும்' என்று அவர் நினைத்திருக்க வேண்டும்.

எனவே, 'ரெண்டு பேரைப் போடுங்கள்' என்று யாழ்ப்பாணத்திற்கு கட்டளை பறந்தது.

'யாரைப் போடலாம்' என்று யாழ்ப்பாண ரெலோ பொறுப்பாளர் தேடினார்.

மறுபடியும் அரசியல் களத்தில் குதித்திருந்த ஆலாலசுந்தரமும், தர்மலிங்கமும் தான் கண்ணில் தெரிந்தார்கள்.

இரவோடு இரவாக ரெலோவின் இரு குழுவினர் புறப்பட்டனர். ஒரே நேரத்தில் இருவரையும் கடத்திச் சென்றார்கள்.

"பேச வேண்டியிருக்கிறது எம்மோடு வாருங்கள்" என்று சொல்லியே அழைத்துப் போனார்கள்.




திம்பு பேச்சு 'ஐலண்ட்' கார்ட்டூன்

தன்நம்பிக்கை இவர்களிடம் இல்லை. இதனால்தான் இந்திய இராணுவப் படையெடுப்புக்கு இவர்கள் அழைப்பு விடுக்கிறார்கள்.

**எமக்கு இந்தியாவின் உதவி அவசியம். இந்தியாவின் ஆதரவும் அவசியம். இந்தியாவின் நல்லெண்ணம் அவசியம்.**

நாம் முதலில் இந்தியாவிடம் எமது தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவு பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

எமது மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறு வலியுறுத்த வேண்டும். தமிழீழ தனியரசே எமது பிரச்சனைக்கு திட்டவட்டமான தீர்வு என்பதை எடுத்துரைக்க வேண்டும்.

இந்தியாவின் நல்லாதரவைப் பெறுவதைவிட்டு, எமது பிரச்சனையை தீர்த்து வைக்குமாறு இந்தியாவிடம் கைநீட்டி நிற்பது அரசியற் சாணக்கியம் ஆகாது."

அதுதான் பிரபா விடுத்த அறிக்கை.

இந்தியா நேரடியாக படை அனுப்பினால் தமிழீழத்திற்கு குறைந்த தீர்வை ஏற்க வேண்டி வரலாம் என்பதை உணர்ந்து பிரபா முன்வைத்த நிலைப்பாடு: 'படை அனுப்ப வேண்டாம். உதவி செய்தால் போதும்'.

## பேச்சில் சிக்கல்

திம்பு பேச்சுவார்த்தை பற்றி இலங்கைப் பத்திரிகைகள் உட்பட வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் பல நம்பிக்கையான கருத்துக்களை வெளியிட்டு வந்தன.

அதே நேரம் திம்பு பேச்சை புத்திசாலித்தனமாக முறித்துக் கொள்ளக்கூடிய ஒரு தருணத்திற்காக இயக்கங்கள் காத்திருந்தன.

தருணம் வந்தது.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# அணுகுண்டுத் தாக்கத்தைவிட பூதாகாரமான பூசல்கள்

அலசுவது – இராஜதந்திரி

வடக்கு-கிழக்கு பிரச்னை தொடர்பாக ஆட்சியாளர்கள் இன்று கொண்டுள்ள நிலைப்பாடு என்னவென்பது பற்றி எவருக்குமே எதுவும் புரியாதிருக்கின்றது.

வடக்கே இருந்து கிடைக்கும் தகவல்கள், யுத்த அழுத்தங்களால் அவஸ்தைப்படும் மக்களை பொருளாதாரத் தடைகள் பூதாகாரமாக வாட்டிவதைக்கின்றன என்று தெரிவிக்கின்றன.

தென்னிலங்கையில் சந்திரிகா ஆட்சியாளர்கள் தமது ஓராண்டுப் பதவிக்காலப் பூர்த்தி பற்றி பிரஸ்தாபித்து வருகின்றனர். ஆனால் ஜனாதிபதி சந்திரிகாவும் அவரது பொதுஜன ஐக்கிய முன்னணிக் கட்சியும் ஆட்சிப்பீடமேறி ஓராண்டு காலம் மட்டும் பூர்த்தியாகவில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், பொது ஜன முன்னணி அரசாங்கத்துக்குமிடையே ஏற்பட்ட தொடர்புக்குக்கூட ஓராண்டு பூர்த்தியாகியுள்ளது.

இருந்தபோதிலும் இத்தொடர்பு காத்திரமாகவும், ஆரோக்கியமாகவும் இறுகுவதை விடுத்து மோசமான முறையில் அறுந்து போயிருக்கக் காணப்படுகின்றது.



கடந்த ஆண்டில் இடம்பெற்ற பொதுத்தேர்தல், ஜனாதிபதித்தேர்தல் என்பவற்றின்போது சமாதானம், சமாதானம் என்ற முழக்கமே எங்கும், எதிலும் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

நாட்டு மக்கள் அனைவருமே இந்த நாட்டைப் பீடித்துள்ள யுத்த பீதி அகன்று, புதியதோர் சகாப்தத்தை புதிய ஆட்சியாளர்கள் ஆரம்பிப்பார்கள் என்றே எதிர்பார்த்தனர்.

நாட்டு மக்களின் எதிர்பார்ப்புக்கு இசைவாகவே சந்திரிகா ஆட்சியாளர்களும் தமது பிரசார இயந்திரங்களை இயக்கிவிட்டிருந்தனர். ஆனால் இன்று நினைத்தது வேறு; நடந்தது வேறொன்று என்ற நிலையே ஏற்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கில் இன்று அரசியல் பிரச்னை ஒரு புறமும், மனிதாபிமானப் பிரச்னை மறுபுறமுமாக புடைத்தெழுந்திருக்கின்றன.

யுத்தக்கெடுபிடிகள், பேரினவாதப் பிடிவாதங்கள் என்பவற்றால் அரசியல் தீர்வு என்ற விடயம் முட்கொடி யொன்றின் மீது விழுந்த சேலை போன்றுள்ளது.

இந்நிலையில் அரசியல்தீர்வைக் கொண்டுவருவதில் எதனையுமே செய்ய முடியாத ஆட்சியாளர்கள், வடக்கு-கிழக்கின் மனிதாபிமானப் பிரச்னைகளைக்கூட சுமுகமாகத் தீர்க்கமுடியாதவர்களாக இருக்கின்றனர்.

வடக்கு-கிழக்கின் அரசியல் பிரச்னை மிகவும் சிக்கலானது என்பதனையும், இதனை இலகுவில் தீர்க்கமுடியாது என்பதனையும் சமாதானத்தின் மீது நம்பிக்கை கொண்டவர்கள் நன்கு அறிவார்கள். ஆயினும் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு ஓர் அரசியல் தீர்வுதான் சிறந்த பரிகாரம் என்பதனையே அனைவரும் தெளிவாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

இருந்தபோதிலும் அரசியல் தீர்வுக்கான முயற்சிகள் உறைந்து போயுள்ளன. ஜனாதிபதி, மற்றும் அவரது உயர்மட்ட சகாக்களின் பேச்சுக்கள், அறிக்கைகளை நோக்கும்போது யுத்தமே வடக்கு-கிழக்கில் தொடர்ந்து நீடிக்கும் என்பதனை ஊகிக்க முடிகின்றது.

எல்.ரி.ரி.ஈயினருக்கும், பொதுஜன ஐக்கிய முன்னணியினருக்குமிடையிலான உறவு முறிவடைந்து தற்போது ஆறுமாதங்களாகின்றன.

இந்த ஆறுமாதகாலத்தில் இரு தரப்பினரையும் மீண்டும் ஒரு நேர்த்தியான சமரசமுயற்சிகளுக்கு உடன்படச் செய்யும் நடவடிக்கைகள் இடம் பெறாதிருக்கின்றன.

ஆயினும் இந்த இருசாராரும் ஓர் உடன்பாட்டுக்கு வராதவரை வடக்கு-கிழக்குப் பிரச்னை தொடர்ந்து நீண்டு கொண்டேயிருக்கும்.



“கொழும்பில் பாதுகாப்பை பலப்படுத்தும் வகையில் ஆட்சியாளர்கள் பெருமளவில் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ள போதிலும், இந்த ஏற்பாடுகளுக்கு சவால்விடும் சம்பவமாகவே ஈழமக்கள் ஜனநாயகக் கட்சித்தலைவர் திரு. டக்ளஸ் தேவானந்தா மீதான கொலை முயற்சி விளங்கியிருக்கின்றது.”

## மத்தியஸ்தத்துக்கு வர விரும்பும் பிரான்ஸ், பிரிட்டன்

## உயிர் வாழும் உரிமையை இழந்துவரும் தமிழ் மக்கள்

அண்மையில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் திரு.லக்ஷ்மன் கதிர்காமர் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் 50வது கூட்டத்தொடரில் உரையாற்றியிருந்தார்.

இக்கூட்டத்தொடரில் உலகின் பலவேறு நாடுகளையும் சேர்ந்த வெளிநாட்டமைச்சர்கள் பங்குபற்றியிருந்தனர். பிரிட்டிஷ், பிரான்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டமைச்சர்களும் ஐ.நா.கூட்டத்தொடரில் பங்குபற்றியதுடன் திரு.லக்ஷ்மன் கதிர்காமரையும் சந்தித்து உரையாடியிருந்தனர்.

பிரிட்டிஷ், பிரான்ஸ் வெளிநாட்டமைச்சர்கள் திரு.லக்ஷ்மன் கதிர்காமரிடம் இலங்கை இனப்பிரச்னைத் தீர்வில் மத்தியஸ்தம் செய்ய தமது நாடுகள் தயாராக இருப்பதாக தெரிவித்திருந்தனர்.

ஆனால் திரு. லக்ஷ்மன் கதிர்காமர் பிரான்ஸ், பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர்களின் இந்த மத்தியஸ்தம் குறித்த நிலைப்பாட்டை வெறுமனே "நன்றி" (THANK YOU) என்று மட்டும் கூறி ஏற்றுக்கொண்டாரே தவிர, எவ்வகையில் இலங்கையில் ஒரு தீர்வுக்கு அவர்கள் ஒத்துழைக்க முடியுமென்பதைத் தெளிவுபடுத்தவில்லை.

இலங்கையின் ஆட்சியாளரைப் பொறுத்தவரை எல்.ரி.ரி.ஈயினர் ஒரு மோசமான பயங்கரவாதிகளாக இருக்கலாம். ஆனால் வெளிஉலகத்தைப் பொறுத்தவரை எல்.ரி.ரி.ஈயினரது பங்களிப்பு ஒரு சமாதானத் தீர்வுக்கான இன்றியமையாததாக இருக்கின்றது.

இதன் காரணமாகவே இலங்கைப் பிரச்னையைச் செவிமடுக்கும் சர்வதேச சமூகத்தினர் அப்பிரச்னையைத் தீர்த்துவைப்பதில் தமது மத்தியஸ்தத்தை வழங்கத் தயாராக இருப்பதாக தெரிவித்து வருகின்றனர்.

எனவே உள்நாட்டில் யுத்தக் கெடுபிடிகள், இனவாதிகளின் மிரட்டல்கள் என்பவற்றுக்கு முகங்கொடுத்துவரும் ஆட்சியாளரும், மறுபுறத்தே எல்.ரி.ரி.ஈயினரும் வெளிஉலகம், சமாதானத்தீர்வுக்கு மிகுந்த ஒத்துழைப்பை நல்குவதற்கு தயாராக இருப்பதை உணரவேண்டியவர்களாகின்றனர்.

இதேவேளை திரு. லக்ஷ்மன் கதிர்காமர் ஐ.நா.கூட்டத்தொடரில் உரையாற்றியபோது ஐ.நா.பாதுகாப்புச் சபையினரால் தமது விதிமுறைகளுக்கு உடன்படாத நாடுகள் மீது போடப்படும் பொருளாதாரத் தடைகளையும் கடுமையாகச் சாடியிருந்தார்.

ஆனால் தமது சின்னஞ்சிறிய நாட்டில் வடக்கு-கிழக்கில், குறிப்பாக வடக்கே யாழ் குடாநாட்டின் மீது போடப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகள் குறித்து திரு. லக்ஷ்மன் கதிர்காமர் ஏன் கரிசனைப்படவில்லை என்பது புதிராகவே இருக்கின்றது.

கடந்த ஓரிரு வருடங்களாக யுத்தங்களால் சின்னாபின்னப்பட்டுப் போயிருந்த பொஸ்னியாவில்கூட தற்போது 'மாமூல்' வாழ்க்கை மீண்டும் ஏற்படும் சூழ்நிலைகள் தோன்ற ஆரம்பித்துள்ளன.

மின்சாரம், நீர்விநியோகம், போக்குவரத்து என்பன படிப்படியாக சீரடைவதற்கான அறிகுறிகள் தோன்றியுள்ளன. ஆனால் வடக்கே கடந்த ஐந்து வருடங்களுக்கும் மேலாக பொருளாதாரத்தடைகள் ஏற்படுத்திய தாக்கம் பலமானதாகவே இருக்கின்றது.

யுத்தக் கெடுபிடிகளினால் பாதிக்கப்பட்டவர்கள் தவிர, பொருளாதாரத் தடைகளினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கையும் பாரியதாகவே இருக்கின்றது.

ஷெல் வீச்சுக்களும், குண்டுவீச்சுக்களும் மட்டும் இன்று குடாநாட்டவரைப் பலியெடுக்கவில்லை.

பசி, பட்டினி, நோய்பிணி என்பவையும் கொடிய யுத்த இழப்புகளுக்கு நிகராக இழப்புகளை ஏற்படுத்தி வருகின்றன.

இக்கட்டத்தில் அரசியல்தீர்வை கொண்டுவர முடியாது போனாலும், வடபகுதியினரின் மனிதாபிமானத் தேவை களைக் கூட பூர்த்தி செய்யமுடியாத வர்களாக ஆட்சியாளர்கள் இருக்கின்றனர்.

எனவே இன்றைய சூழ்நிலையில் அரசியல் உரிமைகளைக் கோரிய வடக்கு-கிழக்கு மக்கள் உயிர் வாழும் உரிமையை விரைந்து இழந்து வருவதையே அவதானிக்க முடிகின்றது.

இதே சமயம் கொழும்பில் பாதுகாப்பை பலப்படுத்தும் வகையில் ஆட்சியாளர்கள் பெருமளவில் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ள போதிலும், இந்த ஏற்பாடுகளுக்கு சவால்விடும் சம்பவமாகவே ஈழமக்கள் ஜனநாயகக் கட்சித்தலைவர் திரு. டக்ளஸ் தேவானந்தா மீதான கொலை முயற்சி விளங்கியிருக்கின்றது.

கொழும்பு நகரில் பலத்த பாதுகாப்புடன் இருந்துவரும் அரசியல் பிரமுகர்களில் ஒருவரே திரு.டக்ளஸ் தேவானந்தா. இவர் மீதான கொலைமுயற்சி, கொழும்பில் எத்தகைய பாதுகாப்பை மேற்கொண்டுள்ள போதிலும், 'ஆயுத பாணிகள்' தமது இலக்குகளை அடைவதில் மிகவும் கூர்மையாகவே இருக்கிறார்கள் என்பதையே புலப்படுத்துகின்றது.

ஏனெனில் திரு. டக்ளஸ் தேவானந்தாவைக் கொலைசெய்ய முயன்றவர்கள் அவரது படுக்கையறை வரை சென்றுள்ளனர். அத்துடன் அவரது மெய்ப்பாதுகாவலர்கள் நால்வரையும் சுட்டுக் கொன்றுள்ளனர்.

எனவே இச்சம்பவம் அரசாங்கத்துக்கும், அதன் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் ஒரு பெருஞ்சவால் விட்டிருப்பதையே உணரமுடிகின்றது.

அத்துடன் இந்நாட்டில் எவருமே, சாதாரண குடிமகனாக இருந்தால் என்ன, ஆளணிகளைக் கொண்டிருப்பவர்களாய் இருந்தாலென்ன தகுந்த பாதுகாப்புடன், அமைதியாக வாழமுடியாதிருப்பதையும் இச்சம்பவம் புலப்படுத்துகின்றது.

கடந்தவாரம் கொழும்பிலுள்ள பிரெஞ்சு தூதரகத்தின் முன்பாக கொழும்பைச் சேர்ந்த பெண்கள் அமைப்பொன்று ஆர்ப்பாட்ட நடிவடிக்கை ஒன்றை மேற்கொண்டிருந்தது.

இந்த ஆர்ப்பாட்டம் கொழும்பில் இடம்பெற்ற போதிலும், ஆர்ப்பாட்டத்துக்குரிய விடயம் பிரான்ஸ் நாட்டுடன் சம்பந்தப்பட்டதாகும்.

தென்பசுபிக் பிராந்தியத்தில் பிரான்ஸ் நடத்த உத்தேசித்திருக்கும் அணுகுண்டுப் பரிசோதனையைக் கண்டித்தே அந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

அணுகுண்டு மோசமானது; கர்ணகடூரமானது என்பதை முழு உலகமும் நன்கறியும்.

இரண்டாம் உலகப்போரில் அணுகுண்டுகள் ஜப்பானில் ஏற்படுத்திய நாசம் அகிலத்தையே அதிரச்செய்திருந்தது.

எனவே அத்தகைய அணுகுண்டு நாசம் உலகில் மீண்டும் ஏற்பட்டுவிடக் கூடாதென்பதிலே உலக சமூகம் விழிப்பாக இருந்து வருகின்றது.

இருந்தபோதிலும் ஒரே தடவையில் அணுகுண்டு ஒன்று வெடித்து ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தையே இன்று உலகில் இன, பிரதேச பூசல்களைக் கொண்டுள்ள நாடுகள் கால, காலமாக கொண்டிருக்கக் காணப்படுகின்றன.

இலங்கையும் இத்தகைய நிலைக்கு ஒரு விதிவிலக்கல்ல.

கடந்த 12 வருடகால யுத்தம் இலங்கையில் 50 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களை பலியெடுத்துள்ளது. மேலும் ஆயிரக்கணக்கானவர்களை ஊனமாக்கியுள்ளது. கோடிக்கணக்கான சொத்துக்களை ஏப்பம் விட்டுள்ளது.

எனவே இவ்வாறு மரணத்துடன் தொடர்ந்து வாழ்வதா? அல்லது அத்தகைய வாழ்க்கையிலிருந்தும் விடுபடுவதா? என்பதை தீர்மானிக்க வேண்டிய தருணம் தற்போது தோன்றியுள்ளது.

இதற்கு விடைகாணப்படாதவரை ஓர் 'இருள்மயமான' எதிர்காலத்துக்கு முகங் கொடுக்கவேண்டிய நிலை தோன்றிவருவதை உணர்ந்து கொள்ளமுடிகின்றது.


படிப்பகம்

www.padippakam.com

கார்லோஸ்–
உலகைக் கலக்கியவன். தனி ஒரு நபராக சாகசங்கள் படைத்தவன்.
நம்பவே முடியாத அதிசய மனிதனாக கருதப்பட்டவன்.
பாலஸ்தீன விடுதலைக்காக போராடிய வெனிசுலா நாட்டுக்காரன்.
அவனது சாகசங்களின் தொகுப்பு இது! இத் தொடர் முடியும் போது நீங்களே தீர்மானிக்கலாம்–
கார்லோஸ் நல்லவனா?
கெட்ட வல்லவனா?



# கார்லோசும் 4 கார்க் குண்டுகளும்

## மனித வெடிகுண்டு
## தருவது ரசிகன்

ஜப்பான் வர்த்தக நிலையம் முன்பாக தனது மோட்டார் சைக்கிளை நிறுத்திய கார்லோஸ் சற்று நிதானித்தான்.

பொலிஸ் நடமாட்டம் இருக்கிறது என்பதை, சற்று தூரத்தில் நிறுத்தப் பட்டிருந்த பொலிஸ் கார்களை வைத்து புரிந்து கொண்டான்.

அதேநேரம் உள்ளே இருந்து மரிகோ யமாமோட்டோ பொலிசாரால் அழைத்து வரப்பட்டுக் கொண்டிருந்தாள்.

இப்போது உடனே கிளம்பிச் சென்றால் பொலிசார் சந்தேகப்படுவார்கள். கார்லோஸ் ஒரு சிகரெட் எடுத்து பற்ற வைத்துக்கொண்டு கட்டிடத்திற்குள் சென்றான்.

எதிரே பொலிசார் மத்தியில் வந்து கொண்டிருந்த யமாமோட்டோவும், கார்லோசும் தற்செயலாகப் பார்ப்பதுபோல பார்த்துக் கொண்டனர். நான்கு விழிகளும் ஒரு நொடியில் சந்தித்து மீண்டன.

யமாமோட்டோ துணிச்சலான பெண். யமாமோட்டோ அழகான பெண். ஆனால் யமாமோட்டோ ஜப்பான் செம்படையின் ஆள் என்று யாருமே சந்தேகப்பட்டதில்லை.

யமாமோட்டோ வேலைக்குச் சேர்ந்ததில் இருந்து இன்று கைதுசெய்யப் படும்வரை ஒருநாள் கூட புரட்சி பற்றிப் பேசியதில்லை.

யமாமோட்டோ செக்ஸ் பற்றி பேசுவாள். யமாமோட்டோ தனது ஆண் நண்பர்கள் பற்றி சக ஊழியர்களோடு பகிர்ந்து கொண்டு ஜோக்கடிப்பாள்.

யமாமோட்டோ கைதுசெய்யப் பட்டதும் வர்த்தக நிலைய ஊழியர்களுக்கு அதிர்ச்சியிலும் அதிர்ச்சி.

"யமாமோட்டோவை ஏன் கைது செய்கிறீர்கள்?"

"கைதுசெய்யாமல், ஒரு பயங்கரவாதியோடு கைகுலுக்கவா சொல்கிறீர்கள்?"

"வட் டு யூ மீன்?"

"இந்தப் பூனை பால் குடிக்காது என்று நினைத்துக் கொண்டிருந்தீர்கள். அதனால் அதிர்கிறீர்கள். யமாமோட்டோ ஜப்பான் செம்படையின் முக்கிய புள்ளி. போதுமா?"

பொலிஸ் அதிகாரி சொன்னதை நம்ப முடியாமல் கூட்டம் திகைத்து நிற்க, யமாமோட்டோ பாதுகாப்போடு அழைத்துச் செல்லப்பட்டாள்.

பாரிசிலுள்ள ஜப்பான் செம்படை உறுப்பினர்களுக்கான தகவல்கள், செய்திப் பரிமாற்றங்கள் அனைத்தும் யமாமோட்டோ மூலமே பரிமாறப்பட்டு வந்தன.

பொலிசாரின் தீவிர கவனிப்பில் யமாமோட்டோ உண்மைகளைச் சொல்லி விடுவாள் என்று கார்லோஸ் நினைத்தான்.

யமாமோட்டோ கைதுசெய்யப்பட்டதை அடுத்து 10 ஜப்பானியர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர். அதில் இருவர் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

பத்திரிகைகளில் பொலிசார் தெரிவித்த செய்தி கொட்டை எழுத்தில் பிரசுரமாகியிருந்தது.

*"பாரிசிலுள்ள ஜப்பான் செம்படையினர் அனைவரையும் கைது செய்துவிட்டோம்"*

என்று பொலிஸ் தவறான கணிப்பில் உறுதியாகச் சொல்லியிருந்தது.

செய்தியைப் படித்த கார்லோசுக்கு உற்சாகமாக இருந்தது.

ஜப்பான் செம்படைக்கும் பாலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையிலே உள்ள தொடர்பை பாரிஸ் பொலிசாரால் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஆகவே, பாரிசில் நடத்த திட்டமிட்டுள்ள தாக்குதல்களும் தெரிய வந்திருக்காது.

கார்லோஸ் தனக்கு வந்த உற்சாகத்தை மாஸ்மெலாமீது கொண்டாடினார்.

அந்த 26 வயது அழகி கார்லோஸின் உற்சாகத்தால் திணறிப்போனாள்.

"பிரேக் இல்லாத கார்மாதிரி இருக்கிறாய் நீ! என்ன அத்தனை சந்தோசம்?"





என்று கேட்டாள்! கார்லோஸின் சட்டையை அவனில் இருந்து அகற்றிக் கொண்டே.

மாஸ்மெலாவின் ரீ சேர்ட்டை அவளது கழுத்து வழியாக வெளியேற்றிக் கொண்டே, கார்லோஸ் சொன்னான்: "இன்று நீ மிக அழகாகத் தெரிகிறாய்; அதுதான்."

**வா**டகைக் கார் நிறுவனமொன்றில் 4 கார்கள் கார்லோசால் தெரிவு செய்யப்பட்டன.

தரமான கார்களாக இருந்தால்தான் யாருக்கும் சந்தேகம் வராது. அதனால் 4 கார்களையும் தரமான கார்களாக தானே நேரடியாகப் போய் தெரிவு செய்தான் கார்லோஸ்.

ஒரே நேரத்தில் மூன்று பத்திரிகைக் காரியாலயங்களில் கார்க் குண்டு வெடிக்க வைக்கப்பட வேண்டும்.

பாரிஸ் தொலைக்காட்சி நிலையத்தையும் அவற்றோடு சேர்த்து தகர்த்துவிட வேண்டும்.

கார் குண்டுகளை கார்லோஸ் தனது கைப்பட தானே தயாரித்தான்.

கார்களில் இருந்து ஒரு துளிக்காற்றுக் கூட வெளியேற முடியாதளவுக்கு சிறு-சிறு நீக்கல்களும் அடைக்கப்பட்டன.

கார்களை கொண்டு சென்று குறித்த இடத்தில் நிறுத்திவிட்டுவர நான்கு பேர் அமர்த்தப்பட்டனர்.

1974 ஆகஸ்ட் 3ம் திகதி நான்கு கார்களும் புறப்பட்டன. கையசைத்து வழியனுப்பிவிட்டு, மணிக்கட்டில் நேரம் பார்த்தான் கார்லோஸ்.

நேரம் இரவு 10 மணி. இன்னும் ஒரு மணி நேரத்தில் பாரிஸ்நகரம் அதிரப் போகிறது. குறைந்தது 100 பேராவது சாகப் போகிறார்கள். இஸ்ரேலுக்கு உதவும் நாடுகள் கதி கலங்கப் போகின்றன. கார்லோஸ் நினைத்துக் கொண்டான்.

'எல் ஆர்ச்சிர்' என்னும் மாத சஞ்சிகை, 'எல் அவுரோர்' என்னும் தினசரி, 'மினிற்' என்னும் வார சஞ்சிகை, மூன்று காரியாலயங்கள் முன்பாகவும் கார்கள் நிறுத்தப்பட்டன.

பாரிஸ் தொலைக்காட்சி நிலையம் முன்பாக நாலாவது கார் குண்டை சுமந்தபடி நின்றுகொண்டிருந்தது.

குண்டுகளில் பொருத்தப்பட்ட கடிகார முட்கள் 11 மணியைத் தொட ஆயத்தமாகி, மெல்ல நெருங்கி...நெருங்கி... தொட்டு விட்டன.

....டமால்.....
.....டமால்....
....டமால்....

மூன்று கார் குண்டுகளும் துல்லியமாக வெடித்தன.

தொலைக்காட்சி நிலையம் முன்பாக நிறத்தப்பட்ட கார் மட்டும் 'வெடிக்க மாட்டேன்' என்று அடம்பிடித்துக் கொண்டு நின்றது. கடிகாரத்தை பொருத்தியதில் ஏற்பட்ட தவறால் கோளாறு.

தொலைக்காட்சி நிலையக் கார்குண்டு வெடித்திருந்தால், உள்ளே இருந்த 100 க்கு மேற்பட்டவர்கள் பலியாகி இருப்பார்கள்.

குண்டுகள் வெடித்து பத்திரிகைக் காரியாலங்கள் மூன்றும் ஒரே நேரத்தில் தாக்கப்பட்டதால் பாரிஸ் நகரமே அதிர்ந்து போனது.

கடும்பாதுகாப்பு மத்தியிலுள்ள நகருக்குள் குண்டு பொருத்தப்பட்ட நான்கு கார்கள் எப்படி வரமுடியும் என்று பொலிசார்மீது கண்டனங்கள் பாய்ந்தன.

தொலைக்காட்சி நிலையம் முன்பாக நிறுத்தப்பட்ட கார் பொலிசாரால் மீட்கப் பட்டது. வாடகைக் கார் உரிமையாளரை மட்டும் பொலிசாரால் பிடிக்க முடிந்தது.

பாரிசில் இஸ்ரேலிய ஆதரவு பத்திரிகை காரியாலயங்கள் மீதான தாக்குதல்களுக்கு பாலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணி (P.F.L.P) உரிமை கோரியது.

PFLP தளபதி டாக்டர் வாடி ஹாட்டாடுக்கு கார்லோஸின் திறமையில் நம்பிக்கை ஏற்பட்டது.

"கார்லோஸ் பெண்களோடு சுற்றுகிறான். பெண்களோடு கூத்தடிக்கிறான்" என்று PFLP உளவுப்பிரிவு மூலம் வாடி ஹாட்டாட் அறிந்து வைத்திருந்தார்.

ஏற்கனவே இலண்டனில் கார்லோஸ் பங்குகொண்ட இரண்டு தாக்குதல்கள் தோல்வியில் முடிந்தமையால் தளபதி வாடி ஹாட்டாட் கார்லோஸ்மீது முழு நம்பிக்கை கொள்ளவில்லை.

இப்போது பாரிஸ் தாக்குதல்கள் வெற்றிகரமாக முடிந்தமையால் வாடி ஹாட்டாட், கார்லோஸ் தனிப்பட்ட பல வீனங்கள் சிலவற்றை இழக்க முடியாத, ஆனால் சிறந்த தாக்குதல் வீரன் என்று முடிவு செய்துவிட்டார்.

தளபதி வாடி ஹாட்டாட் தனது அடுத்த திட்டத்தை வகுத்தார்.

பிரான்சில் சிறை வைக்கப்பட்டுள்ள ஜப்பான் செம்படை இயக்கத் தலைவர் யமடாவை மீட்க வேண்டும்.

ஜப்பான் செம்படை, பாலஸ்தீன போராட்டத்திற்கு பல வழிகளில் உதவி வருகிறது.

எனவே-ஜப்பான் செம்படைக்கு PFLP தனது நன்றியை யமடாவை மீட்டெடுப்பது மூலம் தெரிவித்துக் கொள்ளலாம்.

தளபதி வாடி ஹாட்டாட் தனது திட்டத்தை பாரிசிலுள்ள கார்லோசுக்கு தெரியப்படுத்தினார்.

திட்டத்தை செயற்படுத்தும் பொறுப்பு கார்லோஸிடம் ஒப்படைக்கப்பட்டது.

பொறுப்பை ஒப்படைத்த போதும் கார்லோஸுக்கு சில நிபந்தனைகளை விதித்தார் தளபதி வாடி ஹாட்டாட்.

நிபந்தனைகளை கேட்ட கார்லோஸ் வெறுப்படைந்தான்.

(தொடர்ந்து வரும்)

# ஒரு வித்தியாசமான பேட்டி

## "உன்னைவிட நான் ஒன்றும் மோசமில்லை"

**ச**ப்பாத்து விளம்பரத்திற்காக சுத்தமான உடம்போடு போஸ் கொடுத்து பெரும் சர்ச்சை கிளப்பியவர்கள் மது சாப்ரேயும் அவரது காதலர் மிலிண்ட் சோமனும். போஸ் கொடுப்பதில் மட்டுமல்ல, பேட்டி கொடுப்பதிலும் இருவரும் ஒரு கலக்குக் கலக்கியிருக்கிறார்கள்.

பம்பாய் சினிமா இதழ் ஒன்று வித்தியாசமான பேட்டிக்காக இருவரையும் அணுகியது. அதாகப்பட்டது "இருவரும் அந்தரங்கமாக உரையாட வேண்டும். அதை நாம் பதிவு செய்து வாசகர்களுக்கு கொடுப்போம்" என்றார்கள். இருவரும் உடனே ஓ.கே. சொல்லிவிட்டார்கள். அந்த உரையாடலில் இருந்து ஒரு பகுதி.

**மிலிண்ட்**–பேபி உன்னை நான் எப்போதாவது ஏமாற்றி இருக்கிறேனா?

**மது**–ஏன் இல்லை. பல தடவை அப்படிச் செய்திருக்கிறாய். பிறகு என்னிடம் வந்து ஒட்டிக்கொண்டு 'பேபி பேபி, உலகத்தில் உன் ஒருத்தியைத்தான் நான் காதலிக்கிறேன்' என்று புளுகித் தள்ளியிருக்கிறாய்.

**மிலிண்ட்**– சரி-சரி, விட்டுத்தள்ளு. என்னிடம் உனக்குப் பிடிக்கிற கவர்ச்சி அம்சம் என்ன?

**மது**–முதன் முதலில் பல விஷயங்கள் பிடித்திருந்தன. வர, வர எதுவுமே பிடிக்கவில்லை.

**மிலிண்ட்**– நாம் முதலில் எப்போது சந்தித்தோம், ஞாபகம் வருகிறதா?

**மது**–அகமதாபாத்தில்... நீ என்னைத் தொடமுயற்சி சொய்தாய். பளாரென்று ஒரு அறை வாங்கிக் கொண்டாய். அதை நீ மறந்தாலும் நான் எப்படி மறக்க முடியும்?

**மிலிண்ட்**–ஏய்... ஏய்... அபாண்டமாகப் பேசுகிறாய்.



மது–மிலிண்ட்

**மது**–நீதான் புளுகுணி. பேபி உனக்கு மிக அழகான தோல். தொட்டால் எத்தனை வழுவழுப்பு என்று தெரிந்துவிடும் என்றெல்லாம் உளறவில்லை நீ?

**மிலிண்ட்**–இருக்கலாம். நான் அப்போது கொஞ்சம் குடிபோதையில் இருந்தேன்.

**மது**–இதுவும் பொய். அப்போது நீ அப்பாவிப் பையன்போல் நடித்தாய்.

**மிலிண்ட்**–ஒரு விஷயத்தை அப்படியே அமுக்கிவிட்டாயே? அப்போது நாம் இரண்டு பேரும் தனியாக தாழ் போட்ட ரூமுக்குள்ளேதானே இருந்தோம்.

**மது**–ஏய்... மறுபடியும் புதுப்புழுகை அவிழ்த்து விடுகிறாய். அந்தநாள் பூராவும் என்னை வசியம் செய்வதில் குறியாக இருந்தாய். பக்கத்தில் வந்து படுக்கையில் சாய்ந்து கொண்டாய். சரி, பார்க்கலாம் என்னதான் விஷமம் செய்துவிடுவாய் என்று நானும் பேசாமல் இருந்தேன்.

**மிலிண்ட்**–நான் அசந்து தூங்கிவிட்டது உனக்கு பெரிய ஏமாற்றமாக போய்விட்டதில்லையா?

**மது**–எனக்கு எந்த ஏமாற்றமும் இல்லை. எனக்கு ஒரு போய் பிரண்ட் இருந்தான்.

**மிலிண்ட்**–அடி சக்கை. அப்போ நீயும் என்னைப் போல்தான்.

**மது**–உன்னளவு மோசமில்லை. கண்ணில படுகிறவர்களை யெல்லாம் காதலிப்பது உன் ஸ்ரைல்.

**மில்ண்ட்**–ஆனாலும் நீதான் என் பெஸ்ட் பிரண்ட். நாம் இருவரும் ஒருவருக்காகவே ஒருவர் பிறந்திருக்கிறோம்.

**மது**–மிலிண்ட் நிஜமாகவே சொல்கிறேன். நீ என்னை எப்படிக் கவர்ந்தாய் என்றே புரியவில்லை!

**மிலிண்ட்**–அதுதான் காதல் என்பது. முடிவில்லாத நிரந்தரக் காதல். சிரஞ்சீவிக் காதல்.

எப்படி, வித்தியாசமான போட்டிதானே.

# கட்டிலில் ஒரு பன்றி!

## கட்டழகியின் அனுபவம்

**ஆ**டெட்டி ஸ்க்ரூபி. வயது, 22. மிஸ் தென் ஆபிரிக்காவாக தெரிவு செய்யப் பட்டவர்.

அழகுராணியை காதலித்துக் கைபிடித்தார் வில்லி ஜீபெட் என்னும் செல்வந்தர். இருவரும் தேனிலவுக்கு சென்றனர். அங்குதான் அழகிக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. அதனை அழகி ஸ்க்ரூபியே சொல்லுகிறார்.

"புதுத் தம்பதியான நாங்கள் மிக ஆசையாகப் படுக்கையில் ஆரத்தழுவிக் கொண்டிருந்த போது, திடீரென்று கதவைத் தள்ளிக்கொண்டு ஒரு உருவம் எட்டிப் பார்த்தது. நான் நடுங்கிப் போனேன்.

அந்த உருவம் எட்டிப் பார்த்ததோடு நில்லாமல் ஒரு ஹைஜம்ப் செய்து படுக்கையில் வந்து விழுந்து எங்கள் இருவருக்கும் இடையே படுத்துக் கொண்டது. அது ஒரு காட்டுப்பன்றி.

காட்டுக்குள் இருந்து வீட்டுக்குள் வந்துவிட்டதோ என்று நினைத்து நான் அலறிவிட்டேன்.

அவரோ எதுவிதப் பரபரப்பும் இல்லாமல் அதை தடவிக் கொடுத்தபடி "பயப்பிடாதே, இது என் செல்லக் குட்டி" என்று கூறினார்.

என்னுடைய இரண்டாண்டு திருமண வாழ்வில் காண்டா மிருகங்களால் துரத்தப் பட்டிருக்கிறேன். சிங்கங்களால் தாக்கப் பட்டுள்ளேன். காட்டுப்பன்றியோடு தூங்கியிருக்கிறேன்.



ஒரு தடவை எனக்கும் என் கணவருக்கும் இடையே பெரிய முரட்டுச் சிங்கம் ஒன்று படுத்திருந்தது. நான் ஒவ்வொரு முறையும் அவரை நெருங்கிய போதும் அது என்னைப்பார்த்து கர்ஜித்தது. அவரோ அதை ஒரு ஜோக்காகவே இரசித்தார்" என்கிறார் அழகி.

என்றாலும் இப்போது எல்லாம் பழக்கமாகிவிட்டதாம். "ஒரே குடும்பமாகி விட்டோம்" என்கிறார் அழகி. துணிச்சல் தான்!

# அமெரிக்காவில் திருமணம்

**இ**ந்தி நடிகை மீனாட்சி சேஷாத்திரி (டூயட் பட நாயகி) பிரபல தொழிலதிபர் ஹதீஸ் என்பவரை அமெரிக்காவில் வைத்து திருமணம் செய்து கொண்டார்.

எப்படியோ மோப்பம் பிடித்து அச்செய்தியை பத்திரிகைகள் வெளியிட்டன. மீனாட்சி சேஷாத்திரியின் அம்மா பலமான மறுப்பறிக்கை விட்டார். "என் மகளா, எனக்குத் தெரியாமல் திருமணமா? நோ... நெவர். இருக்காது. அப்படி இருக்கவும் கூடாது" என்றார்.

இப்போது அம்மா முகத்தில் கிலோக் கணக்கில் கரி. மீனாட்சி சேஷாத்தியின் திருமணப் புகைப்படங்கள் வெளியாகி விட்டன. பத்திரிகைகளில் படங்களைப் பார்த்துவிட்டு மயக்கம் போட்டு விழுந்து விட்டாராம் தாய்க்குலம்.



**இவ்வாரம் 'ஹலோ டாக்டர்' விடுப்பில் சென்று விட்டார். வரும் வாரம் உங்களைச் சந்திப்பார்.**

# சாமி சொன்னா பலிக்குமா?

**ஜோ**திடம் சொல்லியே அரசியல் தலைவர்கள் பலரையும், சர்வதேசக் கோடீஸ்வரர்கள் பலரையும் தனது சட்டைப்பையில் வைத்துக் கொண்டவர் சந்திராசுவாமி.

ஜிம்மி காட்டரின் அம்மாவுக்கு சொன்னாராம், 'உன்பிள்ளைதான் அமெரிக்கா ஜனாதிபதி' என்று. காட்டர் ஜனாதிபதியானார்.

இந்திரா, ராஜீவ், சந்திரசேகர், நரசிம்மராவ் போன்ற இந்திய முன்னாள்,



இந்நாள் தலைவர்களுக்காக அரசியல் வீரிய வேள்விகள் நடத்தினார்.

புருனை சுல்தானுக்கு குழந்தை வரம் கொடுத்தாராம்.

இப்படியெல்லாம் புகழப்படும் சந்திராசுவாமி டிசம்பர் 21.1991 இல் 'இந்திய ருடே' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியொன்று நம்மிடம் மாட்டியது. படித்துப் பாருங்கள்:

**கேள்வி**-ராஜீவ்காந்தியின் வருங்காலம் எப்படியிருக்கிறது?

**சந்திராசுவாமி**-பிரகாசமாக இருக்கிறது.

**கேள்வி**-அவர் உயிருக்கான கண்டங்கள்?

**சந்திராசுவாமி**-கண்டமெல்லாம் முடிந்துவிட்டது. இனி அவருக்கு இயற்கையான சாவுதான்!



படிப்பகம்

www.padippakam.com

# நண்பனே-எனது உயிர் நண்பனே!

இங்கிலாந்தில் உள்ள மிஸ்டர் பவுலுக்கு பல நண்பர்கள் இருந்தார்கள். யாருமே நல்ல நண்பர்களாக நடந்து கொள்ளவில்லையாம். வெறுத்துப்போய் இருந்தவர் ஒரு கரடியாரை எடுத்து வளர்க்கத் தொடங்கினார். கரடியாரும் சமர்த்துப் பிள்ளையாக வளர்ந்து, பவுலுக்கு நல்ல நண்பராகிவிட்டார். தோற்றத்தில் மாறுபாடு இருந்தாலும், பழக்க வழக்கத்தில் மனிதர் போலவே நடந்துகொள்ள கரடியாருக்கு கற்றுக்கொடுத்திருக்கிறார் பவுல். படத்தைப் பார்த்தாலே தெரிகிறதல்லவா! புகைப்படக்காரரைக் கண்டவுடன் சோம்பலாக கொட்டாவி விட்டுக் காட்டுகிறார் கரடியார். விளம்பரம் என்றால் அலர்ஜியாம். ஆனால்..... சில மனிதர்களுக்கோ.....



# இவர்தான்(டா) பொலிசு!



தகவல் பெட்டி

# கழுதையின் காதலுக்கு ஜே!


தமிழ் நாட்டில் ஒசூர் என்னும் பகுதியில் ஒரு ஆச்சர்யம், விஷயம் யாதெனில், ஒசூரில் உள்ள அ.தி.மு.க கட்சிப் பிரமுகர் ஒருவர் குதிரை வளர்த்து வந்தார். (வளர்ப்புக் குதிரை) குதிரை கர்ப்பமானது. பிரமுகருக்கு மகா சந்தோஷம். குட்டிக் குதிரைகள் கிடைக்கப்போகிறது என்று காத்துக்கொண்டிருந்தார். குதிரையும் ஏமாற்றவில்லை. 18 குட்டிகள் போட்டுக்கொடுத்தது. கடைசியாக சமீபத்தில் 19 வது குட்டி போட்ட போதுதான் பிரமுகரின் வீடு மட்டுமல்ல, ஊரே ஆச்சரியப்பட்டது. காரணம்குதிரை போட்டது கழுதைக்குட்டி. வியப்போடு விவகாரத்தை அலசியபோது சமீபகாலமாக கழுதையொன்று அந்த குதிரையோடு சுற்றிய விஷயம் தெரியவந்ததாம்.

குதிரை போட்டுள்ள கழுதைக் குட்டி முழுக்க முழுக்க கழுதைக்குணத்தோடு இருக்கிறதாம்.

ஒசூரில் குதிரை வளர்ப்பவர்கள் பலர் தங்கள் குதிரைகளை கண்காணிப்பாக பராமரிக்க ஆரம்பித்துள்ளார்களாம்.

காதல் மன்னனான கழுதை விடயத்தில் உஷாராக இருக்கிறார்கள்.






# கண்ணுக்குள் என்ன இருக்கு?

கண்ணுக்குள் பதிவு செய்யப்பட்ட காட்சியை கமராவால் கிளிக் செய்து படத்தை பெரிதுபடுத்திப் பார்த்தபோது, அட.... மரங்கொத்திப் பறவை! கமராவின் சாகசத்தால் கண்ணுக்குள் நடத்திய படப்பிடிப்பு இது. ஒரு காட்சியைப் பார்க்கச் சொல்லிவிட்டு, பார்க்கும் விழித்திரையை கமராவால் 'கிளிக்' பண்ணி இப்படியான படங்களை நீங்களும் சுட்டுப்பார்க்கலாம். உன் விழிகளுக்குள் என்ன இருக்கு? நேரில் காணும் காட்சி எதுவோ அதுதான் இருக்கிறது. ஆனால் இது காதலர்களுக்கு பிடிக்காத வசனமாக்கும்.

ஊர்வலம்,ஆர்ப்பாட்டம், போராட்டம் என்றால் கட்டுப்படுத்தும் பொறுப்பில் இருப்பவர் பொலிஸ்காரர். அந்தப் பொலிஸ்காரரே போராட்டம் என்று புறப் பட்டுவிட்டால் அவரை யார்தான் கட்டுப் படுத்துவது? ! மெக்சிக்கோ நாட்டில் உள்ள சுதந்திர நினைவுச் சின்னம் அருகே ஒரு மரச் சிலுவையில் தன்னைக் கட்டிக் கொண்டு புது முறையான போராட்டம் நடத்துகிறார் ஒரு பொலிஸ்காரர். எதற்கு போராட்டம்? மெக்சிக்கோ நாட்டில் லஞ்சம் வாங்கும் பழக்கம் பொலிசாரிடம் கடுமையாகப் பரவிவிட்டதாம். (அட.....அங்குமா?) அதை எதிர்த்துத்தான் கிளம்பியிருக்கிறார் இந்த சுத்தமான பொலிஸ்காரர். இன்னமும் உலகில் நேர்மையானவர்கள் இருக்கத்தான் செய்கி றார்கள்.

சுத்தம் சுகம் தரும், அதாவது கைச்சுத்தம்.

# நாங்களும் வரலாமா?




அமெரிக்காவில் உள்ள ஒரு தொடர்மாடிக் கட்டிடத்தில் நான்கு நாய்க் குட்டிகள். ஒரே நேரத்தில் ஒரே திசையில் அப்படி என்னதான் பார்க்கின்றன. கீழே குழந்தைகள் கும்மாளமிட்டு விளையாடுகிறார்கள். விளையாட்டைப் பார்த்தவுடன் தாமும் அதில் கலந்து கொள்ள ஆசை வந்துவிட்டது. நான்குக்கும் ஒரே உணர்வு. ஒரே ஆசை. எனவே ஒரே பார்வை. அதே நேரத்தில் 'கிளிக்' செய்த கமராக்காரருக்கு 'சபாஷ்' போடலாம்.

# காம்பு ஒன்று-காய் மூன்று

ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகள் பிறப்பது பற்றி முரசு வாசகர்கள் அறிவீர்கள். ஆச்சரியம் மனித இனத்தில் மட்டும்தானா? படத்தில் இருப்பது ஒரே காம்பில் முளைத்திருக்கும் மூன்று கத்தரிக்காய்கள்.

தமிழ்நாட்டில் சென்னையில் உள்ள மாம்பலம் பகுதியில் இந்த அதிசயக் கத்தரிக்காய் முளைத்திருக்கிறது.





படிப்பகம்

www.padippakam.com

## சரத் கண்டனம்

'நாட்டாமை' படத்தை தயாரிப்பாளரின் அனுமதி பெறாமல் ஜெ.ஜெ.ரிவியில் காட்டி விட்டார்கள். ஜெ.ஜெ.ரிவி. ஜெயலலிதாவின் சம்பந்தமுள்ள நிறுவனம். அப்படியிருந்தும் ஒரு விழாவில் ஜெ.ஜெ.ரிவிமீது கண்டனம் தெரிவித்துவிட்டாராம் சரத்குமார்.

## சொந்த விஷயங்கள்

'புள்ள குட்டிக்காரன்' படத்தைத் தந்துவிட்டு ஓய்வெடுத்து வருகிறார் பார்த்திபன். அவரது அடுத்த படமான 'பிரியமானவளே' படத்தில் தனது குடும்ப விவகாரங்களை அலசிக் காட்டப் போகிறாராம். அதற்கு வசதியாக மனைவி சீதாவை மீண்டும் நடிக்க வைக்கப்போகிறார்.

## ஹொலிவூட் நியூஸ்
## வசூலில் சாதனை

ஹொலிவுட் பட உலகில் வசூல் சாதனையில் தற்போது சக்கைபோடும் படம் 'பேட்மேன் ஃபோர் எவர்'. தொழில்நுட்ப ரீதியிலும் பல சாதனைகளை இப்படம் செய்துள்ளது. 'ஜூராசிக் பார்க்' படத்தின் வசூலை இது மிஞ்சிவிடும் என்று நம்பப்படுகிறது. முன்னர் வெளியான 'பேட்மேன் ரிட்டன்ஸ்' ஆகிய படங்களையும் வசூலில் தூக்கிச் சாப்பிவிட்டது 'பேட்மேன் ஃபோர் எவர்'.

## காதோடு சொல்கிறோம்

**போ**தையின் பெயர்கொண்ட நடிகை இந்திக் ஹீரோக்கள் சில[illegible] வைத்திருக்கிறாராம். வாரத்தில் குறைந்தது மூன்று ஹீரோக்களோடு சே[illegible] முடிகிறதாம். சந்திப்புக்கள் யாவும் நட்சத்திர விடுதிகளில் மட்டும்.

'**வ**ள்ளி' படத்தில் வில்லனாக நடித்தவருக்கு ஹீரோ சான்ஸ் கொடுத்திரு[illegible] நடிகை. அதாவது வில்லன் உண்மையில் காதலராகிவிட்டார். வேகத்தடையே இ[illegible] காதல்.

'**ப**ம்பாய்' இறக்குமதிகள் வாங்கும் சம்பளத்தைவிட, பந்தாச் செலவுதான் (வில்லங்கமான) வகைகளுக்கும், கும்மாள விவகாரங்களுக்கும் தயாரிப்பாள[illegible] அழவேண்டியிருக்கிறதாம். சில தயாரிப்பாளர்கள் மட்டும் ஒரு கல்லில் இரு மாங்க[illegible] (அதென்ன- யோசியுங்கள்!)

'**பா**' நடிகர் நடிக்க அவரது குரு 'பா' நடிக இயக்குநர் கதையெழுதிய [illegible] போகிறது. 'பா' நடிகரோ மீண்டும் மவுசு ஏற்பட்ட ருசியில் சென்னையின் கட[illegible] பிரதேச நட்சத்திர ஹோட்டல்களில் அறை எடுத்துத் தங்கத் தொடங்கிவிட்[illegible] (தனியாகவல்ல)

'**வி**'யில் தொடங்கும் மூன்றெழுத்து நடிகைக்கு மாலையானதும் தெரிவதில்லையாம். (கண்ணில் எந்தக் கோளாறும் கிடையவே கிடையாது) தெரியாவிட்டால்தான் படவாய்ப்புக்களை கெட்டியாகப் பிடித்துக்கொள்ள முடி[illegible] ஏதாவது புரிகிறதா. புரியாவிட்டால் நீங்கள் ரியூப் லைற்றுக்கள்.



நாசர்-ஊர்வசி
படம் : அருவாவேலு

## விஷ்ணு ஹிட்

விஜய்-சங்கவி ஜோடி நடித்துள்ள 'விஷ்ணு' படம் ஹிட்டாகியிருக்கிறது. சங்கவியின் கவர்ச்சியே படத்தின் முதுகெலும்பு. அதனால் தற்போது விஜய்-சங்கவி ஜோடி நடித்துவரும் 'கோயமுத்தூர் மாப்ளே' படத்தில் நெருக்கமான காட்சிகளை நிறையவே சேர்த்திருக்கிறார்களாம்.



## செந்தில் வேண்டும்

'முத்து' படத்தில் ரஜினி நகைச்சுவையை அதிகம் கலக்கவைத்திருக்கிறார். செந்தில், வடிவேலு இருவரும் ரஜினிக்குப் பக்கத்துணை. ஆனாலும் செந்திலுக்கு கொஞ்சம் கனமான இடம். செந்தில் கண்டிப்பாக வேண்டும் என்று சிபாரிசு செய்தவரே ரஜினிதானாம்.

## கலைக் குடும்பம்

மாதுரி மறுத்து விட்டதால் பிரபுதேவாவுக்கு ஜோடியாய் நடிக்க ஏ.வி.எம். நிறுவனம் புதிதாய் இறக்குமதி செய்திருக்கும் நட்சத்திரம் கஜோல். இவருக்கு கஜ்லா என்றும் ஒரு செல்லப் பெயர்.

ஐம்பது ஆண்டு காலமாக கலைச்சேவையில் ஈடுபட்டிருக்கிறது கஜோலின் குடும்பம். பாட்டி ஷோபனா, அந்தக் காலத்தில் ராமராஜ்யா என்ற படத்தில் சீதையாக நடித்தவர் (காந்தி அடிகள் கூட இப்படத்தைப் பார்த்தாராம்). அம்மா தனுஜாவும் சித்தி நூத்தனும் பிரபல நடிகைகள்.

## சல்மானின் பொழுது போக்கு

நடிகை சோமி அலியை விதம் விதமான கோணங்களில் படமெடுத்துத் தள்ளுகிறார் சல்மான் கான். அதுதான் பொழுது போக்காம். சோமி அலி வீட்டு மொட்டை மாடியில் அடிக்கடி காணப்படுகிறாராம் சல்மான் கான்.

## அர்ஜூனுக்கு கமல்

'இந்தியன்' படத்தில் தனக்குரிய 'மேக் அப்'பை தானே போட்டுக் கொள்வதோடு அர்ஜூனுக்கும் மேக்-அப் போடும் பொறுப்பையும் செய்கிறார் கமல். அதனால் அர்ஜூனுக்கு எக்கச்சக்க சந்தோசம்.

## தில்லு முல்லு ராஜாக்கள்

தெலுங்கு திரையுலகில் வசூலை வாரி இறைத்த படம் போக்கிரிராஜா. அதனை தமிழில் மொழிமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். 'போக்கிரி ராஜா' என்ற பெயரில் ரஜினி நடித்த படம் ஒன்று தமிழில் ஏற்கனவே வந்துவிட்டது. அதனால் தெலுங்கு 'போக்கிரி ராஜா' தமிழில் 'தில்லு முல்லு ராஜாக்கள்' என்ற பெயரில் வெளிவரப்போகிறது.

வெங்கடேஷ், ரோஜா, விசித்ரா, மோகன்ராஜ் ஆகியோர் நடித்துள்ளனர். தமிழில் வைரமுத்து, மு.மேத்தா ஆகியோர் பாடல்களை எழுதியுள்ளனர். இசை, ராஜ்கோட்டி. திரைக்கதை, வசனம், இயக்கம், வி.சி.குகநாதன். வெங்கடேஷ் இரட்டை வேடத்தில் நடித்திருக்கிறார்.



யுவராணி
படம் : மாப்பிள்ளை மனசு பூப்போல

## கலப்படமில்லாத இளைஞர்கள்

சரத்குமார் மூன்று வேடங்களில் நடிக்கும் படம் 'அரவிந்தன்' என்பது தெரிந்த செய்தி தானே. 'அரவிந்தன்' படத்தில் மற்றொரு சிறப்பு. அதில் பணியாற்றும் முக்கிய கலைஞர்கள் பலர் கலப்படமில்லாத இளைஞர்கள். இயக்குநர் நாகராஜன், ஒளிப்பதிவாளர் ஆர். ரத்தினவேல், இசையமைப்பாளர் யுவன் சங்கர் ராஜா (இளையராஜாவின் 15வயது மகன்) என்று ஒரே இளைஞர்பட்டாளம். அவர்கள் அனைவரையும் சென்னையில் ஒரு விழா நடத்தி அட்டகாசமாக அறிமுகப்படுத்தி விட்டார்கள். அரவிந்தன் படத்திலும் சரத்குமாருக்கு ஜோடியாக நடிக்கிறார் நக்மா. இரகசியப் பொலிஸ் படத்தில் நக்மா கொடுத்த ஒத்துழைப்பால் அவருக்காக சிபாரிசு செய்திருக்கிறார் சரத்குமார்.



## மினி சினி

* ரஜினியின் 'முத்து' படத்தில் 'பொதுவாக என் மனசு தங்கம்...' என்று முரட்டுக்காளையில் இடம்பெற்ற பாடலை மீண்டும் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

* பிரபு மலையாளத்தில் நடித்து வரும் 'காலாபாணி' படத்தில் பிரபுவுக்கு ஜோடியாக செரீன் என்ற புதுமுகம் நடிக்கிறார்.

* ஆர்.கே.செல்வமணி தயாரிக்கும் 'ராஜாளி' படத்திற்கு பிரபல இந்தி இசையமைப்பாளரான அனுமாலிக் இசையமைக்கிறார். இவர் இசையமைக்கும் முதல் தமிழ்ப்படம் இதுதான்.

* 'பம்பாய்' பட ஒளிப்பதிவாளர் ராஜீவ்மேனன் இயக்கத்தில் பிரபுதேவா கதாநாயகனாக நடிக்கும் படமொன்றை ஏ.வி.எம்.நிறுவனம் தயாரிக்கிறது. இப்படத்தில் அரவிந்தசாமியும் நடிக்கவுள்ளார்.

* சத்யராஜ் நடிக்கும் 'அடிமை' படத்தில் இரண்டு கதாநாயகிகள் நடிக்கவுள்ளனர். ஒருவர்- ராவளி. இன்னொரு நாயகியாக நடிக்க மனிஷா கொய்ராலாவை அணுகியுள்ளனர்.

* கே.டி.குஞ்சுமோன் தயாரிக்கும் 'காதல் தேசம்' படத்தில் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான், 'ஹலோ டாக்டர்...' என்ற பாடலைப் பாடியுள்ளார்.

* 'சின்னப்பண்ணை' படத்தை அடுத்து பாலகிருஷ்ணா நடித்து வெளிவரவுள்ள மொழிமாற்றுப்படம் 'வீராதி வீரன்'. தெலுங்கில் 'மாத்தோ பெட்டுக்கோ' என்ற பெயரில் வெற்றிபெற்ற இப்படத்தில் இரட்டை வேடத்தில் நடித்துள்ளார் பாலகிருஷ்ணா.

* ரமேஷ் அரவிந்த்-ரேவதி-ஹீரா நடிக்க பாலுமகேந்திரா இயக்கும் இந்திப்படமான 'அவுர் ஏக் ப்ரேம் கஹானி'யில் ரமேஷ் அரவிந்தின் நான்கு வயது மகள் நிஹாரிகா நடிக்கிறார்.

* கைவசம் படங்கள் எதுவுமின்றி இருக்கும் பானுப்பிரியா சிறிய இடைவெளிக்குப் பின் தமிழில் தோன்றவுள்ளார். இவர் தெலுங்கில் நடித்த படமொன்று தமிழில் 'வாங்க பங்காளி' என்ற பெயரில் வரவுள்ளது.

* விஜயகாந்த் நடிக்கும் 'தாயகம்' படத்தில் விஜகாந்திற்கு ஜோடியாக ரஞ்சிதா நடித்துள்ளார். இப்படத்தில் முக்கிய வேடமொன்றில் மோகினி நடித்திருக்கிறார்.

* பிரபுதேவா தமிழில் நடித்துள்ள 'இந்து' இந்தியில் 'ஆஜ்கா ரோமியோ' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வருகிறது.

* நடிகர்கள் இயக்குநர்களாகிக் கொண்டிருக்கம் இந்நேரத்தில் இயக்குநர் ஒருவர் நடிகராகவுள்ளார். அவர் வேறு யாருமல்ல. 'கிழக்கு வாசல்', 'சின்னக் கவுண்டர்' உட்பட பல வெற்றிப் படங்களை இயக்கிய ஆர்.வி.உதயகுமார்தான்.

## செலவில் சாதனை

ஹொலிவுட் படங்களில் அதிக செலவில் தயாரான படங்களின் பட்டியல் இது: 1962ல் எலிசபெத்டெய்லர், ரிச்சர்ட் பர்டன் நடித்து வெளியான 'கிளியோபாத்ரா' படம்தான் ஹொலிவுட் வரலாற்றில் அதிக செலவில் முதன் முதலில் தயாரான படம். அப்போது 42 மில்லியன் டொலர்கள் செலவானது. தற்போதைய மதிப்பில் 213 மில்லியன் அமெரிக்க டொலர்கள்.

ஜீராசிக் பார்க் படத்திற்கு செய்யப்பட்ட செலவு 65 மில்லியன் அமெரிக்க டொலர்கள்.

'ட்ருலைஸ்' படத்திற்கு 120 மில்லியன் அமெரிக்க டொலர்கள்.

தற்போது 'வோட்டர் வேர்ல்ட்' படத்திற்கு 175 மில்லியன் அமெரிக்க டொலர்கள்.

குறைந்தது 50 கோடிக்கு மேல் படமெடுத்தால்தான் ஹொலிவுட்டில் ஒரு மதிப்பு.

## விவாகரத்துக்கு 400 கோடி!

'வோட்டர் வேல்ட்' படத்தில் நடித்து வருகிறாரே கெவின் காஸ்ட்னர். அவர் சில மாதங்களுக்கு முன்னர் தனது மனைவி சிண்டியை விவாகரத்துச் செய்தார். அதற்காக கெவின் காஸ்ட்னர் கொடுத்த விலை என்ன தெரியுமா? சொன்னால் நம்ப மாட்டீர்கள், 400 கோடி ரூபா! யப்பா!

விஜய்
படம் : கோயம்புத்தூர் மாப்ளே



படிப்பகம்

www.padippakam.com

வலையில் சிக்க
அவரைக்காண
...ராராம் பிரியமான
...மல் வளர்கிறதாம்
...கமாம். குடிபான
...ள்தான் கொட்டி
அடிக்கிறார்களாம்.
பரவாயில்லாமல்

## சுரேஷ் திருமணம்

நடிகர் சுரேஸ் தனது மனைவியான நடிகை அனிதாவை விவாகரத்துச் செய்திருந்தார் அல்லவா! சமீபத்தில் திருப்பதியில் வைத்து பெங்களூரைச் சேர்ந்த மகுந்தா என்னும் பெண்ணை திருமணம் செய்துள்ளார் சுரேஸ். தற்போது 'நான் ஒரு இந்தியன்' உட்பட சில படங்களில் நடித்து வருகிறார் சுரேஸ்.

## ஜெயராமின் நிபந்தனை

ஜெயராம் ஒரு படத்தில் நடிப்பதானால் உடனடியாக சில நிபந்தனைகளைப் போடுகிறாராம். கதாநாயகி முன்னணி நடிகையாக இருக்க வேண்டும். இயக்குநர் பிரபலமானவராக இருக்கவேண்டும். கதை பிடிக்க வேண்டும். நல்ல பசையுள்ள தயாரிப்பாளர் வேண்டும். உஷார் பேர்வழிதான்.

# சி னி வி சி ட்



அர்ஜுன்-ரோஜா
படம் : ஆயுத பூஜை

## ஹொலிவூட் நியூஸ் — 875 கோடியில் ஒரு படம்

ஹொலிவூட்டில் மிகப் பிரபலமான நடிகர் கெவின் காஸ்ட்னர். சகல விதமான பாத்திரங்களிலும் முத்திரை பதித்தவர். அவரே நடித்து இயக்கிய படம் 'டான்சஸ் வித் த வொல்ஃவ்ஸ்'. (ஓநாய்களோடு நடனம்). அந்தப் படத்திற்கு பல விருதுகள் கிடைத்தன. அமெரிக்காவையும் ஒரு கலக்குக் கலக்கியது.

தற்போது கெவின் காஸ்ட்னர் நடித்துவரும் படம் 'வோட்டர் வேர்ல்ட்' (தண்ணீர் உலகம்). பெயர் மட்டுமல்ல செலவும் தண்ணீர் மாதிரிப் பாய்கின்றது. படத்தின் பட்ஜெட் 875 கோடி ரூபாய்கள். அதாவது 175 மில்லியன் டொலர்.

ஏற்கனவே ஆர்னால்ட் ஸ்வாஸ்நேக்கர் நடித்த 'ட்ருலைஸ்' படத்தின் பட்ஜெட் 120 மில்லியன் டொலர். அதனை மிஞ்சிவிட்டது 'வோட்டர் வேர்ல்ட்'. அமெரிக்க வரலாற்றில் மிகப்பெரும் செலவில் உருவாகும் படம் என்ற விளம்பரத்தோடு தயாராகிவருகிறது. படத்தின் இயக்குநர் கெவின் ரெனோல்ட்ஸ். இயக்குநருக்கும் கெவின் காஸ்ட்னருக்கும் இடையே பலத்த கருத்து வேறுபாடு. 'குட்பை' சொல்லிவிட்டு விலகிவிட்டார் இயக்குநர். இப்போது கெவின் காஸ்ட்னர்தான் படத்தையும் இயக்கி நடித்துக் கொண்டிருக்கிறார்.

நடுக்கடலுக்குள் ஒரு அரங்கம் அமைத்து படப்பிடிப்பு நடத்த மட்டும் 300 கோடி ரூபாய் செலவாகியுள்ளது. (அமெரிக்க டொலர் ஒன்று நம்நாட்டு பெறுமதிப்படி 50 ரூபாய்).

## கதை என்ன?

...ஸ்வர்யாராய்-மோகன்லால் நடிக்கும் 'ஆனந்தம்' படத்தின் கதை பற்றி ...று ஊகங்கள் அடிபடுகின்றன.
...டிகர் சஞ்சய்தத்தின் கதையைத்தான் இயக்குநர் மணிரத்னம் படமாக ...ப்போகிறார் என்று சொல்கிறது ஒரு தகவல். மணிரத்னம் மட்டும் ...றக்கிறாரே இல்லை.

## எல்லாமே ஓ.கேயா?

சில இயங்குநர்களும் கதாசிரியர்களும் முதலில் நன்றாக கதை சொல்லுகிறார்கள். பின்னர் படம் எடுக்கும்போது கதை வேறாகிவிடுகிறது. இப்படி பல ஹீரோக்கள் வருத்தப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பல ஹீரோயின்களும் புலம்பியிருக்கிறார்கள்.

ஆனால், அர்ஜுன் கொஞ்சம் வித்தியாசமானவர். கதையை முதலில் கேட்கிறார். பிடித்துவிட்டால் நடிக்கச் சம்மதிக்கிறார். 'ஸ்கிரிப்ட்' முழுமையாக முடிந்த பின்னரே நடித்துக்கொடுக்க ஆரம்பிக்கிறார். வருமுன் காக்கிறார் அர்ஜுன்.

## 'நண்பிகளும் நண்பர்களே' மதுபாலா சொல்லுகிறார்

...ஜா', 'ஜென்டில்மேன்' போன்ற படங்களில் நடித்து பிரபலமானபின்னர் ... போனார் மதுபாலா.
... படவுலகில் மதுபாலா பற்றி ஏகப்பட்ட கிசு-கிசுக்கள்.
... ஆண் நண்பர்கள் தொடர்பாக ஒளிவுமறைவில்லாமல் பேசுகிறார் மதுபாலா.
...ள் ஆண்கள் என்பதால் நமக்குள் தப்பான நோக்கங்கள் இருக்கும் என்று நினைப்பது ...ரையுலகிலும், வெளியிலும் எனக்கு ஆண் நண்பர்கள் இருக்கிறார்கள். என் வீட்டாருக்கும் ...ம் தெரியும். என் குணமும் தெரியும் என்கிறார் மதுபாலா.
...ல் நடக்கும் டிஸ்கோ நடனங்களுக்கு செல்கிறார் மதுபாலா. தன் ஆண் நண்பர்களோடு ...கைகோர்த்து ஆடுகிறார் என்பது மற்றொரு கிசு-கிசு.
மதுபாலா என்ன சொல்கிறார்? கைவசம் பதில் ரெடி! "அங்கு நான் போவதில் என்ன தப்பு? ...ாகவல்ல, இளம் பெண் என்ற நிலையில்தான் செல்கிறேன்" என்று சொல்கிறார் மதுபாலா.
...வின் ஆசைகள் இரண்டே இரண்டுதானாம். இந்தியில் நம்பர் 1 நடிகையாக வேண்டும். ...ந்து வாங்க வேண்டும். (சற்றுப் பெரிய ஆசைகளோ?)

## ரவீணாவின் புதிர்

...கேஷாத்திரியின் இரகசிய திருமணச் செய்தியை சினிவிசிட் வெளியிட்டதல்லவா. ...து உறுதியாகிவிட்டது. (திருமணப் போட்டோ அடுத்த முரசில்).
...கிசு-கிசுவில் சிக்கியுள்ள மற்றொரு இந்திநடிகை ரவீணா ராண்டன். (முகப்பில் ...ாள்ளுங்கள்). இந்தி நடிகரும், கவர்ச்சியான ஹீரோவுமான அக்ஷய்குமாரை ...ந்து கொண்டார் என்பது பரவலான செய்தி.
...ர் வீட்டிலும் தடல்புடலான வரவேற்பு. மணமகளுக்கு பலலட்சம் ரூபாய் ...நகைகளை வாரி வழங்கியிருக்கிறராம் அக்ஷய்குமாரின் அம்மா.
...ரும், ரவீணாவும் இப்போதுதான் புகழேணியில் கிடுகிடுவென்று ...ப்பதால் திருமணச்செய்தி அடக்கி வைக்கப்பட்டிருக்கிறதாம்.
'நோ, யார் சொன்னது?' என்று ஆரம்பத்தில் கேட்டவர், ...காமன்ற்ஸ்' என்று நழுவி புதிர் போட்டுக் கொண்டிருக்கிறார்.

## அறைந்தார் கவுண்டமணி

சென்னையில் ஒரு நடிகரின் பிறந்த நாள் விழாவில் திடீர் கலாட்டா. கலாட்டாவின் நாயகன் கவுண்டமணி. நடிகரின் பிறந்தநாளுக்கு கவுண்டமணியும் அவருக்கு பல படங்களில் நகைச்சுவை வசனம் எழுதிய கே.வி.தங்கமும் வந்திருந்தனர். நகைச்சுவைக் காட்சிகள் பாராட்டப்படுவதற்கு யார் காரணம்? நடிப்பவர்களா, வசனம் எழுதுபவர்களா? என்று கிளம்பிய சர்ச்சை அடிதடியில் முடிந்துவிட்டது. எழுத்தாளர் தங்கத்தை பளார் பளார் என்று அறைந்துவிட்டாராம் கவுண்டமணி.

...ம்மாதான்!
...ன் கவர்ச்சி அமர்க்களப் ...டிருக்கிறார் ...ரு புறத்தில் ... பண வசூல் ...மர்க்களப் ...டிருக்கிறார். ... ஒரு ரூபாய் ...ச்சு. 'சங்கவி ...று கண்டிப் ...வார் அம்மா. ...யில் நிற்கும். ...லுத்தினால்

...ண்ணீர்
...து வசூலுக்கு ...ல் ஓடிக் ...படம் 'தாய்க் ...மே!' படத்தின் ...டியராஜன். ...ங்கம் சென்று ...மர்ந்து படம் ...டம் பார்த்த ...நகிப் போய் கண்டவுடன் விட்டாராம்


முகப்பில் — கார்த்திக்
படம்—தொட்டாசிணுங்கி



மோகனா
படம் : என் ஆசை தங்கச்சி

## வித்தியாசமான பெயர்

தமிழில் மட்டுமல்ல மலையாளத்திலும் படங்களுக்கு வித்தியாசமான பெயர் சூட்டுகிறார்கள். மம்முட்டியும்- பிரியாராமனும் நடித்து வரும் படத்தின் பெயரைக் கேளுங்கள். 'நம்பர் ஒன் சினேகதீரம் பெங்களூர் நார்த்'. என்ன வித்தியாசமாக இல்லையா?



பாண்டியராஜன்- வினய் பிரசாத்
படம் : தாய்க்குலமே தாய்க்குலமே

## ரஜினியின் புதிய படம்

'முத்து' முடிவடைந்து விட்டதால் ரஜினியின் அடுத்த படம் என்னவென்று கேள்வி எழுந்துள்ளது. இதுவரை ரஜினி முடிவெதுவும் செய்யவில்லை. 'முத்து' வெளியாகி ஓடட்டும் பின்னர் சொல்கிறேன் என்றுவிட்டார் ரஜினிகாந்த். தீபாவளி வெளியீடாக ரிலீசாகிறது முத்து.

பிரபல படத்தயாரிப்பு நிறுவனங்கள் ரஜினியின் முடிவுக்காகக் காத்திருக்கின்றன. ரஜினி வழக்கம்போல மௌனமாக இருக்கிறார். வழக்கம்போல திடீரென்று தனது முடிவை அறிவிப்பார். எதற்கும் தீபாவளி கடக்கவேண்டும்.


படிப்பகம்

# தோல்வி அடைந்தால் என்ன செய்வீர்கள்?

வெற்றியும் தோல்வியும் வாழ்க்கையில் யாருக்கும் உண்டு. ஒருவருக்கு எப்போதும் வெற்றியும், இன்னொருவருக்கு எப்போதும் தோல்வியும் வராது! வெற்றி வரும் போது சந்தோஷப்படுபவர்கள் இல்லாமல் இருக்க முடியாது; ஆனால், தோல்வி வரும்போது அதைத் தாங்கிக் கொள்ளும் மனப்பக்குவம் சிலருக்குத்தான் உண்டு.



இந்த விஷயத்தில் நீங்கள் எப்படி?

சுயசோதனை வைத்து உள்ளோம். உங்களை நீங்களே 'செக்' பண்ணிக் கொள்ளுங்கள்!

'சரி,' எவ்வளவு என்பதை மட்டும் கணக்கிட்டுக் கொள்ளுங்கள்!

ஆரம்பிக்கலாமா?

## சுய பரிசோதனை

1. நானும் நண்பன்/நண்பியும் 'பிளான்' போட்டு ஒரு வேலையில் இறங்குகிறோம்.... திடீரென நண்பன்/நண்பி பின்வாங்கி விட்டால் முடங்கிவிட மாட்டேன். வேறு திட்டம் போட்டு, என்னை 'பிஸி'யாக்கிக் கொள்வேன்!

2. போட்டியை கண்டு கொண்டிருக்கும் போது, வெற்றி முழக்கம் கேட்டதும் மயிர்க்கூச்செறியும் சுபாவம் என்னிடம் உள்ளது. தலைமுடி சிலிர்த்துக் கொள்ளும்.

3. ஒரு சிக்கலை தீர்க்க நான் தீட்டிய திட்டம் பலன் அளிக்கவில்லை என்றால் உடனடியாக தீர யோசித்து அடுத்த வழியில் இறங்குவேன்.

4. விபத்து பற்றியோ தனக்கு உள்ள நோய் பற்றியோ நண்பன்/நண்பி சொல்லும் போது மவுனமாகக் கேட்டுக் கொள்வேன். நானாக மூக்கை நுழைத்து துருவித் துருவி கேட்கமாட்டேன்.

5. நான் வேலை செய்யும் கம்பெனி நிர்வாகியை எனக்கு பிடிக்கவில்லை என்பதற்காக, அவர் முதுகில் குத்தும் பழக்கமோ, புறம்பேசும் பழக்கமோ எனக்கு இல்லை.

6. பதவி உயர்வு கிடைக்கவில்லை என்பதற்காக, 'நான் பெண்ணாக இருப்பதால் கிடைக்கவில்லை' என்றோ, 'எனது தலையெழுத்துதான் காரணம்,' என்றோ சொல்லமாட்டேன்.

7. பிரபலமான ஒருவரைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். அதற்காக அவரைப்பற்றி பரபரப்பாக, 'டிவி'யிலோ, பத்திரிகைகளுக்கோ பேட்டி கொடுத்து பணம் சம்பாதிக்கும் நோக்கம் எனக்கு கிடையாது. அந்தப் பெரிய மனிதர் மீது வெறுப்பு இருந்தாலும், பணத்தேவை இருந்த போதிலும், இப்படி தவறாக செயல்பட மாட்டேன்.

8. எந்த மோசமான பிரச்சனையாக இருந்தாலும் முழுமையாக வெற்றி காண முடியாவிட்டாலும் ஓரளவு வெற்றி கிடைக்கும் என்று நம்புபவன் நான்.

9. எனக்கு தலைவலி இருக்கிறது என்பதை அனாவசியமாக அலட்டிக் கொண்டு வெளிக்காட்டிக் கொள்ள மாட்டேன். மாத்திரை போடும் போதுதான் மற்றவர்கள் அறிந்து கொள்ள முடியும்.

10. சினிமா தியேட்டரில் எனக்கு கிடைத்த 'சீட்' மோசமாக இருந்தாலும், மூட்டைப்பூச்சி கடித்தாலும், கண்டு கொள்ளமாட்டேன்.

11. வாழ்க்கையில் எனக்கு ஏற்படும் சரிவுகளின் போது, என்னை தூக்கி விட அடுத்தவர் உதவ வேண்டும் என்று காத்திருக்க மாட்டேன்.

12. பள்ளி விழாவில் அணி வகுப்பு நடக்கும் போது என் குழந்தை முதலாம் வரிசையில் நிறுத்தப்படவில்லை என்றால் அதற்காக பள்ளி நிர்வாகிகளிடம் சென்று முறையிட மாட்டேன்.

**எத்தனை 'சரி'. கணக்கிட்டு விட்டீர்களா? இதோ விடைகள்:**

## மதிப்பெண்

☛ 9–12. **'சரி':** பக்குவத்துக்கு பெயர் பெற்றவர் நீங்கள். முடிந்தவரை முதிர்ச்சியுடன் சிந்திப்பீர்கள். அவசரப்பட மாட்டீர்கள். மற்றவர்கள் உங்களைக் கண்டு வியப்படைவார்கள். மற்றவர்கள் தவறு செய்தால் அதைத் தட்டிக் கேட்பீர்கள். ஆனால், நீங்கள் ஒன்றை உணர்ந்து கொள்ள வேண்டும். தவறு செய்து விட்டதாக எண்ணி நேரத்தை வீணாக்குவதோ, மனதில் புலம்புவதோ கூடாது. பக்குவமாக செயல்படுங்கள். உங்களால் வெற்றி கொள்ள முடியும்.

5–8. **'சரி':** எதற்கும் தைரியமாக செயல்படுவீர்கள். நீங்கள் வகுத்த பாதையில் சரியான தீர்வு கிடைக்கவில்லையே என்பதற்காக நீங்கள் வருந்துவீர்கள். எனினும் மனதிற்குள் திடமான எண்ணம் இருந்து கொண்டே இருக்கும். பிரச்சனையை எப்படித் தீர்ப்பது என்று, மேலும் மேலும் சிக்கல் வந்தாலும் எதிர்த்து நிற்பீர்கள்.

0–4. **'சரி':** சாதாரண ஜலதோஷம் வந்து விட்டால் கூட அது எல்லாருக்கும் தெரிந்து விடும். நீங்கள் வெற்றி அடைந்தாலும், தோற்றாலும் வெளிப்படையாக கருத்து தெரிவிப்பீர்கள். தோற்றால் புலம்புவீர்கள். வென்றால் முழுமையான மகிழ்ச்சியை தெரிவிப்பீர்கள். உங்களுக்கு ஒரு யோசனை: எந்தக் காரியமானாலும் திடமாக செயல்படுங்கள். புலம்பிவிடாதீர்கள். உங்களால் எதுவும் முடியும்.

# லேடீஸ் ஸ்பெஷல்

# வாடகை அம்மா தமிழ் நாட்டில் சாதனை

இந்தியாவிலேயே முதன் முறையாக வாடகைத்தாய் மூலம் மூன்று குழந்தைகள் பெற்ற அதிசயம் சென்னை ஆஸ்பத்திரியில் நடந்தது.

குழந்தைப்பாக்கியம் இல்லாதவர்கள் தற்கால மருத்துவத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் காரணமாக சோதனைக் குழாய் முறை, கிப்ட் முறை சொப்ட் முறை மற்றும் தொழிலதிபரின் மனைவியின் கருவகங்களில் இருந்து முதிர்ந்த கரு முட்டையை எடுத்து தந்தையின் உயிர் அணுக்களோடு அதைச் சேர்த்து டாக்டர்கள் வாடகைத்தாயின் 2 கரு இணைக் குழாய்களில் செலுத்தினார்கள். புருட்டி எனப்படும் புதிய முறையில் இச்சாதனையை அவர்கள் செய்து முடித்தார்கள்.



வாடகைத்தாய் குழந்தைகளுடன் டாக்டர்கள் கமலா செல்வராஜ், விஜயாகணேஷ், பாலசுப்பிரமணியம்

பல்வேறு வழிகள் மூலம் குழந்தைகள் பெற்று வருகிறார்கள்.

இப்படிப் பல முறைகள் இருந்தாலும் தற்போது, 'புருட்டி' என்னும் புதிய முறையில் சென்னையில் வாடகைத்தாய் ஒருவர் ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகள் பெற்றுள்ளார்.

இது பற்றிய விபரம் வருமாறு:

சென்னையைச் சேர்ந்த தொழில் அதிபர் ஒருவருக்கு 5 ஆண்டுகளுக்கு முன் திருமணம் நடந்தது. இவருடைய மனைவி முதன் முதலாக கருவுற்று அவருக்குப் பிரசவ சமயம் வந்ததும் ஆஸ்பத்திரியில் அவரைச் சேர்த்தார். அப்போது அவருக்குக் கடுமையான இரத்தப்போக்கு ஏற்பட்டது.

இதனால் டாக்டர்கள் அவரது கர்ப்பப் பையை அகற்றினார்கள்.

குழந்தையும் அப்போது இறந்து விட்டது. ஆனால் அதிஷ்டவசமாக அவருடைய கருவகம் (ஓவரி) தப்பித்தது.

இதனால் கருமுட்டை உற்பத்தி பாதிக்கப்படவில்லை.

இந்தக் கருமுட்டை உதவியோடு குழந்தை பெற்றுக்கொள்ள தம்பதியினர் விரும்பினார்கள்.

இதற்காக வாடகைத்தாயைத் தேடினார்கள். அதிஷ்டவசமாக தொழிலதிபர் மனைவியின் தோழியே இதற்குச் சம்மதித்தார்.

தோழிக்கு திருமணமாகி ஏற்கனவே ஒருபெண் குழந்தை இருப்பது குறிப்பிடத்தக்கது. நுங்கம்பாக்கத்தில் உள்ள ஜி.ஜி.மருத்துவமனையில் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தோழி (வாடகைத் தாய்) மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

கடந்த 21ம் திகதி வாடகைத் தாய்க்கு அறுவைச் சிகிச்சை நடந்தது. மூன்று ஆண் குழந்தைகள் இவருக்குப் பிறந்தன.

இதில் முதல் குழந்தை 1.6 கிலோ எடையும், இரண்டாவது குழந்தை 1.43 கிலோ எடையும், மூன்றாவது குழந்தை 1.61 கிலோ எடையும் இருக்கிறது. மூன்று குழந்தைகளும் தற்போது ஆரோக்கியமான நிலையில் உள்ளன. அவை உண்மையான தாய் தந்தையரிடம் (தொழிலதிபரிடம்) ஒப்படைக்கப்பட்டன.

இது குறித்து டாக்டர்கள் கமலா செல்வராஜ்,விஜயா கணேஷ், பாலசுப்ரமணியம் ஆகியோர் கூறியதாவது: இதற்கு முன்னால் ஏற்கனவே 'வாடகைத்தாய்' மூலம் மகப் பேறு அடையும் சாதனை எங்கள் மருத்துவமனையில் முதன்முதலாக நிகழ்த்தப் பட்டு இருக்கிறது. ஆனால் 'கிப்ட்' முறையில் செய்யப்பட்டது. தற்போது 'புருட்டி' எனப்படும் புதிய முறையைப் பயன்படுத்தி இதை நிகழ்த்தி இருக்கிறோம்.

குறிப்பாக வாடகைத்தாய் மூலம் ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகள் பிறந்தது இந்தியாவிலேயே இதுதான் முதல் தடவை.

குழந்தைகளை ஏற்கனவே உண்மையான பெற்றோர்களிடம் ஒப்படைத்து விட்டோம். குழந்தைகளுக்கு தற்போது புட்டிப்பால் கொடுக்கப்படுகிறது. வாடகைத்தாய் இன்னும் ஒரு வாரத்தில் அனுப்பப்படுவார்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

டாக்டர் கமலா செல்வராஜ் நடிகர் ஜெமினி கணேசனின் மகள்.

புருட்டி முறையில் குழந்தை பெறும் முறையை கண்டுபிடித்தவர் கமலா செல்வராஜ்தான்.

# உள்ளே ⇨ வெளியே

1. தரையைக் கழுவும் போது, தண்ணீரில் சிறிது உப்பையும் கரைத்து விட்டு கழுவினால் இலையான் போன்றவை வராது.

2. பித்தளை விளக்குகளைப் புளிபோட்டு விளக்குவதைவிட சாம்பலுடன் கொஞ்சம் சொட்டாக மண்ணெண்ணெய் விட்டுக் கலந்து அதை வைத்துத் தேய்த்தால் பளபளப்பாகும்.

3. சப்பாத்துக்கள் பளபளப்புடன் இருக்க வேண்டுமானால் இரவு சப்பாத்துக்கள் மேல் சோடா உப்பை கொஞ்சம் எல்லாப்பக்கங்களிலும் படுமாறு தூவி விட்டுக் காலையில் துடையுங்கள்-பளபளப்படையும்.



4. எருக்கஞ் செடியின் இலைப்பாலை எடுத்து முள் குத்திய வாயில் போட்டு வந்தால் சீழ் வைக்காது.

5. ரவையில் வண்டு, புழு, பூச்சிகள் வராமல் இருக்க, ரவையை வாணலியில் போட்டு சிவக்க வறுத்து வையுங்கள். இனி அப் பக்கம் பூச்சி, புழுக்கள் . வரவே வராது.

6. துணிகளில் இரத்தக்கறை ஏற்பட்டால் உப்பைக் கரைத்து அதைக் கறையில் தேய்த்தால் கறை நீங்கும்.

7. வெல்லப்பாகு காய்சசும் பொது, வெல்லப்பாகு அழுக்காகத் தெரிந்தால் கொஞ்சம் பாலை விடவும். அழுக்கு இலேசாக மிதந்து வரும்.

8. பருப்பு வேகும் போது ஒரு செத்தல் மிளகாயை அதில் போட்டு விட்டால், வேகமாக வந்து விடும்.

9. பிளாஸ்டிக் சாமான்களை உப்பு கலந்த நீரில் கழுவினால் துர்வாடை வீசாது.

10.குக்கரில் உள்ள ரப்பர் வளையம் தளர்ந்து போனால் ஃபிரிட்ஜில் இரண்டு நாட்கள் போட்டு எடுத்து விடுங்கள். சரியாக இறுகிவிடும்

11.யன்னல் கதவுகள், கம்பிகளைத் துடைக்கும் போது துணியில் கொஞ்சம் துளிகள் மண்ணெண்ணெய் கலந்து துடைத்தால் தூசி அகலும்,பளபளப்பு கிடைக்கும்.

12. வீடுகளுக்கு வாரம் ஒரு முறை சாம்பிராணி காட்டினால் நோய்க் கிருமிகள் வராது. கொசுத்தொல்லையும் குறையும்.

# நகை அலங்காரம்

கூந்தல் அலங்காரம் செய்து கொள்வது மட்டும் போதாது. கூந்தல் அலங்காரத்திற்கு ஏற்றவாறு அணிகலன்களையும் அணிய வேண்டும். அவ்வாறு அணிந்தால்தான் அழகு மெருகேறி பிரகாசிக்கும்.

வட்டமாகக் கொண்டை போட்டு, அதன் மீது வலையைச் சூட்டி முடி, கூந்தல் அலங்காரத்தை முடித்தீர்களானால் அழகாக இருக்கும். கல் வைக்காத வேலைப்பாடுகள் நிறைந்த தட்டையான அமைப்புடைய தங்கத் தோட்டை அணிந்தால் அழகு அதிகரிக்கும்.

ஒற்றைச்சடை போட்டுக்கொள்ளும் பெண்கள் கழுத்தில் மெல்லிய தங்கச்சங்கிலியையும், காதுகளில் கல்பதித்த அகலமில்லாத தோடுகளை அணிந்து கொண்டால் எடுப்பாக இருக்கும்.

உச்சந்தலையில் உயரமான கொண்டை போட்டுக் கொண்டால் கல்பதித்த அகலமான தோடு அணிவது முகத்தின் அழகை மட்டுமன்றி பொதுவான உடல் அழகையும் வெளிப்படுத்தும்.

குதிரை வால் பின்னல் போட்டுக் கொள்ளும் பெண்கள், காதுகளில் வளையம் அணிந்து கொண்டால் எடுப்பாக இருக்கும்.



பெண்கள் இரட்டைப் பின்னல் போட்டுத் தொங்க விட்டுக் கொண்டால், காதுகளில் ஜிமிக்கி அணிந்து கொள்வது எடுப்பாக இருக்கும்.


தினமுரசு — அம்மன் ஜுவல்ஸ்

பரிசுக் கூப்பன்

இல 09

தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

* முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
* 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* முரசு 116 முதல் தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அறிவுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.


## மகளிர் மட்டும் பரிசுப்போட்டி

முதல் பரிசாக தங்க நகையை பரிசாகப் பெறும் அதிஷ்டசாலி இவர்தான்.

திருமதி.எஸ்.மேரி பிலோமினா
குணானந்த மாவத்தை
ஹுனுப்பிட்டிய
வத்தளை.

25 அதிஷ்டசாலிகளில் பத்து பேரின் பெயர்,விபரம் சென்ற முரசில் வெளியாகியது. ஏனைய பதினைந்து அதிஷ்டசாலிகளின் பெயர்,விபரம் இதோ:

11. என்.எம்.பசீமா பேகம்
பெரிய முல்லை, நீர்கொழும்பு.
12. திருமதி.மாலதி சுப்ரமணியம்
பிரதான வீதி, நோர்வூட்.
13. நிர்மலா மகாமணி
குந்தகலை தோட்டம், நமுனுகுல.
14. எம்.ஏ.லைலா, கெசல்வத்தை, பாணந்துறை.
15. செல்வி. சுமதி முத்துக்குமாரு
சனல்லேன், திருக்கோணமலை
16. திருமதி. பதூரியா பாரூக்
மல்லவாப்பிட்டிய, குருநாகல்
17. திருமதி.எஸ்.ரஞ்சித மேரி
ஞானசூரிய சதுக்க ஒழுங்கை,மட்டக்களப்பு.
18. பாகிரா நிஜாம், புத்தளம் வீதி, சிலாபம்.
19. செல்வி . ஷெரீன் ஸபீனா
தென்னக்கும்புர,கண்டி.
20. திருமதி.ரஞ்சினி குலசேகரன்,
இலங்கை வங்கி, அப்புத்தளை.
21. ராதியா ஹமீட்,
மின்சார நிலைய வீதி, காத்தான்குடி-5.
22. வி.கோகில வாணி, பூங்கா வீதி, கந்தப்பளை.
23. பாத்திமா பிமாலா,
திஹாரிய, கலகெடிஹென.
24. செல்வி.சாந்தினி சுப்ரமணியம்
4ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11.
25. செல்வி.எஸ்.எம்.சிபானா,
மஹாகம, பாணகமுவ.

## ஸ்போர்ட்ஸ் வர்ணிக்கப் போகும் முன்னாள் வீரர்கள்

# கபில் — சாஸ்திரி — கவாஸ்கர்

**1996ம்** ஆண்டு பெப்ரவரி மாதம் வில்ஸ் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளது. இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகள் சேர்ந்து நடத்தும் இந்தப் போட்டியில் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள், தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகள் கலந்து கொள்கின்றன.

இந்தப்போட்டியை வர்ணனை செய்வதற்கு முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் ரிச்சி பேனாட், இயன் சேப்பல், கிரேக் சேப்பல், மைக் ஹோல்டிங்,போனி காவியர் ஆகியோருடன் இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் கவாஸ்கர், கபில் தேவ், ரவி சாஸ்திரி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.



சாஸ்திரி:

ட்ரான்ஸ் வேல்ட் டெலிவிஷன் நிறுவனம் உலகக் கோப்பை போட்டியை ஒளிபரப்பும் உரிமையை வாங்கியிருக்கிறது. அதன் மூலம் பல கோடி ரூபாய்கள் லாபம் கிடைக்கும். வர்ணனையாளர்களும் நல்ல பணம் சுளையாகப் பெறுவார்கள்.

## இந்த வருடத்தில் இதுவரை கிரிக்கெட் உலகில் நடந்த சில சங்கதிகள்

இங்கிலாந்திலுள்ள பக்கிங்காம் நகரில் ஒரு கிரிக்கெட் போட்டி நடந்து கொண்டிருந்தது. பீல்டிங் செய்ய பத்து வீரர்கள் தான் இருந்தார்கள். பதினோராவது வீரருக்குப் பதிலாக ஒரு நாயை நிறுத்தி வைத்தார்கள். அது பந்தை சூப்பராக தடுத்துக்கொண்டிருந்ததாம்.

ஐரோப்பாவில் இங்கிலாந்தில் மட்டுமே கிரிக்கெட் பிரபலமாக இருந்துவருகிறது. ஏனைய ஐரோப்பிய நாடுகளில் தற்போதுதான் கிரிக்கெட் பிரபலமாகி வருகிறது. சமீபத்தில் ஐரோப்பிய ஓபன் கிரிக்கெட் போட்டியில் போலந்துடன் ஜெர்மனி மோதியது. போலந்து வெற்றி பெற்றது.

சமீபத்தில் இங்கிலாந்து நாட்டில் நடைபெற்ற போட்டியில் இந்திய வீரர் ஆஷிஷ் கபூர் ஐம்பது ஓவரில் 300 ரன்கள் அடித்திருக்கிறார்.

அணியின் மொத்த ரன்கள் 375. 300 ரன்கள் குவித்த ஆஷிஷ் கபூர் ஒரு பந்து வீச்சாளர்.

www.padippakam.com



# தேன் கிண்ணம்



## வந்ததே தீபாவளியென்று....!

நரகாசுரனின் மரணத்திலே
நானில மகிழ்வு கொண்டதினால்
தரணியில் மாந்தர் வாழ்வினுக்கு
தீபம் ஏற்றும் நாளொன்று-
வந்ததே தீபாவளியென்று!

கொடுமை புரிந்தவன் அழிந்ததினால்
அடிமை வாழ்வும் ஒழிந்ததென்று
போற்றிப் புகழும் நாளொன்று
வந்ததே தீபாவளியென்று!

சுற்றங்கள் கூடிக் களிப்பதற்கும்
குற்றங் குறைகள் மறைவதற்கும்
சுமைகள் துவளா நாளொன்று
வந்ததே தீபாவளியென்று!

கோடி அணிந்து களிகூர்ந்து
கூடி விருந்து பகிர்வதற்கு
தீபங்கள் ஒளிரும் நாளொன்று
வந்ததே தீபாவளியென்று!

கோபங்கள் களையும் போதினிலே
தாபங்கள் உளமதில் தானமிடும்
இனிமை நிறைந்த நாளொன்று
வந்ததே தீபாவளியென்று!

அகிலா குணராஜா
கொழும்பு-05

## பூமாடுகள்

சுதந்திர உழவுக்கு
சுற்றிச் சுற்றி
ஏரிழுத்தவர்கள் நாங்கள்;
அறுவடைக்குப் பின்னும்
சுற்றிச் சுற்றி
சூடு மிதித்தவர்கள் நாங்கள்!

கண்களே இல்லாத சாக்குகளில்
பொதுக்கிய நெல் மணிகளை
மூட்டைகள் மூட்டைகளாக
வீடுவரை
சுமந்து வந்தவர்களும் நாங்கள்!

எமது பசிக்கு
அவர்கள் தந்தது
வைக்கோல் மட்டுமே!
அதையும்
சுமந்து கொடுத்தவர் நாமே!

நாங்கள் பூக்களாகப்
பிறப்பிக்கப்பட்டவர்கள்!

வாடி விழுந்தாலும்
மண்ணில்
ஆயிரமாய் உயிர்ப்பதற்கு!
பூக்களுக்கும்
பூமியில் புஷ்பிக்க
சுதந்திரம் வேண்டும்!

மாவை வரோதயன்.

## நீ என்னோடிருந்தால்...

காதலி.....
நீ என்னோடிருந்தால்
நிலவைப் பெயர்த்து
உன் முகத்திற்கு
மஞ்சள் பூசுவேன்!

மின்னும் தாரகை எடுத்து
உந்தன்
சேலைக்கு
வண்ணந்தீட்டுவேன்!

வான நீலத்தை
உறிஞ்சி
உந்தன்
விழிக்குள் விட்டு
அழகு பார்ப்பேன்!

வளைந்த
மேகத்தைப் பிடித்து
உந்தன்
தேகத்தில்
ஒட்டிவைப்பேன்!

சுட்டெரிக்கும்
சூரியனை
தொட்டெடுத்து
உந்தன்
கூந்தலுக்குள் செருகி
படம் பிடிப்பேன்!

விலகிச் செல்லும்
நிழலைப் பிடித்து
உனக்கு குடைபிடிப்பேன்!

ஹப்புத்தளையூர் எம்.லெனாட்குமார்.

## கிழக்கிலிருந்து ஒரு கண்ணீர் அஞ்சலி



வடக்கிலங்கையில்
வருந்திக் கொண்டிருக்கும்
இதயங்களுக்காக..........
கிழக்கிலிருந்து
இது......
கண்ணீர் அஞ்சலி....!

உறவு சொல்ல முடியாமல்
உதிர்ந்து கொண்டிருக்கும்
உயிர்களுக்காக
உள்ளத்தில்
உதிரம் கொட்ட
நான் உட்கார்ந்திருக்கிறேன்.......

இந்த (த்)
தெருப்பாடகனின்
தேடல்களுக்குள்
ஒரு
கண்ணீர்தேசத்தைத்தான்
உங்களுக்காக
சேமித்து வைத்திருக்கிறேன்........

யுத்தம் பற்றி
யுகம் யுகமாய்
கசியும்
உங்களின்
ஒவ்வொரு
கணங்களுக்குமாய்
நான்
இதயம்
கதறி
அழுகிறேன்....

ஷெல் அடிப்புக்களால்
செல்லரித்துப் போன
வாழ்க்கை........
ஒவ்வொரு பொழுதிலும்
ஓங்கி ஒலிக்கும்
ஒப்பாரிச் சத்தங்கள்........
எல்லாம்
முகாரிக் கூச்சல்களாய்
எங்கோ ஒரு மூலையில்
முடங்கிக் கிடக்கிறது........

தூரத்திலிருந்து
துக்கம் விசாரிக்க
உங்கள் பக்கம்
நிமிஷத்திற்கு நிமிஷம்
என் கவிதைகளும்
நீண்டு கொண்டு தான்
இருக்கும்.

இந்த
ஆயுத ஆதிக்கத்திற்கு
இன்று
நீங்கள் என்றால்
நிச்சயம்
நாளை
நாங்களும் தான்.

ஆ.சுதா சேகர்-பொத்துவில்.05.

## விழுந்தது எங்கே!

சண்டைக் கோழிகளின்
கொக்கரிப்பில்
சமாதானச் சிறகுகள்
முடமாகி விட
விரிந்த
மலர்களின் உதடுகள்
ஒவ்வொன்றாக
உதிர
விடிவெள்ளி பூத்த
வானம்
விழுந்தது எங்கே..!

நா. இலட்சமணராசா.



## உயரப் பறப்போம்



எனது
கிரணங்களுக்கு
உன்
இதயத்தில்
பாதைகளை உருவாக்கு!
நடந்து திரிவதற்கல்ல,
நிலைத்து நிற்பதற்கு!
★★
என்
இமைச்சிறகுகள்
படபடக்க
உனக்குள் ஒரு
வானத்தை எழுப்பு!
★★
சிரித்து மயக்கும்
உன்
கன்னக் குழியில்
நான் நடந்து போக
ஒரு பாலம் போடு!
★★
உன் மௌன
வளையங்களுக்குள்
சேகரிக்கும்
பரிணாமங்களை
அரியாசனத்தில்
அமரச்செய்!
★★
உன் உதடுகளில்
பூசி மெழுகும்
புன்னகையை
நிர்வாணமாய்
வெளித்தள்ளு!
★★
உன்
திருமுகத்
திருவிழாவில்
பல்லவியை
ஒரம் கட்டி
புது அகராதி எழுது!
★★

பவனி வரும்
பனிக்காற்றை
உன்
சுவாசத்தில்
பந்தி போட்டு
பத்திரப்படுத்தி வை!
★★
உன்
விழிகளைச் சுற்றி
இமைகளால்
பரண் கட்டாதே!
என்
பார்வை பரிதவிக்கும்!
★★
என் கனவுகளுக்கு
நீ புதிய அறிமுகம்!
உன்
கருவறைச் சுவரில்
நான்
கவிதை எழுத
வேண்டும்!
★★
பிரியங்களை
பலப்படுத்து,
★★
உன்
நெஞ்சினில்
சிறகுகளை
தரித்துவை!
உச்சிச் சூரியன்
வரை
உயரப்பறப்போம்!


ஷஹிர்ஷா தாலிம்
தர்கா நகர்.

## இது கனவில்லை....

இந்த இடத்தில்தான்
நான் அவளை
சந்தித்தேன்.......
••
அப்போது
வாழ்வு கவிழ்ந்த சோகம்
வறுமை எரியும் வயிறு
உறவு வெறுத்த தனிமை
எல்லாமே என்னுள்
புதைந்திருந்தன......
••
இந்த இடத்திலேயே
தனிமையை,
வறுமையை,
சோகத்தை
இழந்தேன்........
••
கண்ணீரைத் துடைத்தேன்
மகிழ்ச்சியை-
ஞாபகம் செய்தேன்.....
••
"கொடிதான வாழ்வை விட,
அனுபவிக்காத சுகத்தை விட,
ஒரு
பூரணமான சுகம்
அவளிடம் இருப்பதாய்
தெரிந்தது........

என் ஆத்மாவின்
அடி நிலத்தை கிளறிக் கிளறி
புன்னகித்தாள்.......
••
வைகறையை தொழுதேன்
ஆத்மாவை-
சந்தோஷத்தில்பறக்க விட்டேன்
சொர்க்கம் காலடியில்
••
அவள் சொன்னாள்
"என்னை விட.....
என் அழகை விட.....
ஒரு இரவின் மௌனத்தை,
ஒரு பறவையின் பாடலை,
ஒரு நதியின் சங்கீதத்தை
ரசித்துக் கொள்ளுங்கள் .........!"
••
நான் மௌனியாகி
அவளைத்தான்
ரசித்தேன்........!
••
இத்தனைக்குள்ளும்
இரவு முடிந்து போனது.....
உயிர் பெருமூச்சு விட்டது.....!
••
கனவு......
மரணித்து விட்டதாய்......!

ஸாபிறா. ஏ. மஜீத்
அக்கரைப்பற்று.





## மலையக அருவி

தென்னையோடு மா பலாவை
தென்றல் நடனம் பயிற்றுது.
சின்னப் பூக்கள் விளக்கம் தாங்க
சிலிர்த்து மண்ணும் படுக்குது.

வானில் அசையும் கார்முகிலை
வளர் மலைகள் தடுக்குது.
நாணி அணையும் மணமகளாய்
நனையும் மரங்கள் கிடக்குது.

ஓடி வரும் மலை அருவி
ஓசை கொட்டிப் பாயுது.
தேடி வரும் வழிகளெல்லாம்
தோட்டம் நிறைந்து சாயுது.

எட்டிப்பார்க்கும் இளந்தளிரை
இரு கரங்கள் கொய்யுது.
பெட்டி நிறைந்த தேயிலையாய்
பணத்தைப் புரள வைக்குது.

பணம் புரள வைக்கும் மனித
மனம் இருண்டு தவிக்குது.
மனம் தெளிந்து வாழ்வு காண
வழியைத் தேடித் துடிக்குது.

கேணிப்பித்தன்

## இன்றைய பொழுதுகளில்

அது
ஒரு வசந்த காலத்தின்
விடிகாலைப் பொழுது.

இருள் போர்வையை
பூமி விடுத்துக் கொள்ளா வேளையில்
எங்கிருந்தோ புறப்பட்ட ஓர்
துப்பாக்கியின் எச்சில் துப்பல்
வசந்தத்தின் விடியலை
கறையாக்கிச் சென்றது.



ஒன்றைத் தொடர்ந்து
பல நூறு வாண வெடிகள்
இடையிடையே
ஷெல் அடிகள்
பயந்து போன
மனித இனம்
தன்னை
சுவர்களுக்குள்ளே
மறைத்துக் கொண்டது
மனித மனங்களின்
விளிம்புகளிலெல்லாம்
மரண பயம் மெல்ல
ஒட்டிக் கொண்டது.

விடியலை நோக்கி
விநாடிகள் நகர்ந்தவேளை
எங்கிருந்தோ- மெல்ல
ஒரு குயிலின் குரல்.

என்ன இது
குயிலின் குரலுக்கு
வெடிகள் என்ன
பின்னணி இசையா?

ஓர்
குயிலைத் தொடர்ந்து
பலவிதப் பறவைகளின்
பள்ளியெழுச்சிப்பாடல்கள்.

ஓ......! பறவைகளே
உங்களுக்கு
மனித இனத்தின்
ஆணவத்தாண்டவம்
காதில் கேட்கவில்லையா?

கேட்காததால் தான்
விடியலை வரவேற்று
இவ் வானந்தக் கூவலா?

உங்களைப் போலவே
பயங்களற்று
சுதந்திரக் காற்றை
சுவாசிக்கவே நாமும்
ஆசைப்படுகிறோம்!

ஆனால் நிராசைகளே இங்கு
நிரந்தரமாக இருக்கிறது.

எங்களுக்கும்
சொல்லிக் கொடுங்கள்
இம்சைகளற்று
இன்பமாய் இருப்பது
எப்படியென்று
எங்களுக்கும்
சொல்லிக்கொடுங்கள்....!

மட்டுநகர் நர்மி.

## இந்த வாரம் உங்கள் பலன்

(22.10.95 முதல் 28.10.95 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரிய சித்தி | பகல் 12 மணி |
| திங்கள்-உயர்ந்த நிலை, புதிய முயற்சி. | காலை 6 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| புதன்- வீண் முயற்சி, மனஸ்தாபம். | காலை 7 மணி |
| வியாழன்- பலவித யோசனை, கௌரவக் குறைவு. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், செய்தொழில் விருத்தி. | பி.ப. 1 மணி |
| சனி- காரியானுகூலம், பணவரவு. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- காரியத்தடை, பண விரயம். | காலை 8 மணி |
| செவ்வாய்-இனசன விரோதம், பயனற்ற செயல். | காலை 6 மணி |
| புதன்- உறவினர் பகை, வீண் மனஸ்தாபம். | காலை 7 மணி |
| வியாழன்- அந்நியர் நட்பு, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| சனி- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-6

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, பண விரயம். | பகல் 12 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, மனக் கஷ்டம். | காலை 6 மணி |
| செவ்வாய்- தொழில் விருத்தி, இனசன நன்மை. | காலை 7 மணி |
| புதன்- காரிய சித்தி, பொருள்வரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| வெள்ளி- இனசன கொண்டாட்டம், மகிழ்ச்சி நிலை. | பகல் 12 மணி |
| சனி- தொழில் மந்தம், செலவு மிகுதி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள் விரயம், கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| திங்கள்- வீண் கஷ்டம், பண விரயம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- தொழிலில் பிரச்சினை, மனக் கஷ்டம். | காலை 6 மணி |
| புதன்- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வியாழன்- காரிய சித்தி, கௌரவம். | காலை 6 மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | பகல் 12 மணி |
| சனி- உயாந்த நிலை, பொருள் வரவு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் பரச்சினை, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| திங்கள்- அந்நியர் சகவாசம், புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்-துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | மு.ப. 10 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, கௌரவம். | பி.ப. 2 மணி |
| வியாழன்-வீண் மனஸ்தாபம், கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| வெள்ளி- இனசன கான்மை, மனத் தைரியம். | பகல் 12 மணி |
| சனி- பயனுள்ள செயல், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### நவக்கிரக சஞ்சாரம்

| | | |
|---|---|---|
| துலாம் | - | சூரியன், வெள்ளி, இராகு |
| விருட்சிகம் | - | வியாழன், செவ்வாய் |
| கும்பம் | - | சனி |
| மேடம் | - | கேது |
| கன்னி | - | புதன் |

★ சந்திரன்-கன்னி, துலாம், விருட்சிகம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார். ★

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | காலை 6 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| புதன்- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வியாழன்- தொழில் விருத்தி, பணவரவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- உறவினர் பகை, மனக் கவலை. | காலை 7 மணி |
| சனி- அந்நியர் பகை, கௌரவக் குறைவு. | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | காலை 6 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. 1 மணி |
| புதன் - செல்வாக்கு மேன்மை, மனக் கலக்கம். | காலை 7 மணி |
| வியாழன்- வீண் முயற்சி, துயர் அதிகம். | பகல் 12 மணி |
| வெள்ளி- பயனற்ற செயல், பெரியோர் உதவி. | காலை 6 மணி |
| சனி- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, பண வரவு. | மு.ப. 9 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், மனக் கஷ்டம். | காலை 6 மணி |
| புதன்- அந்நியர் சகவாசம், பலவித யோசனை. | பகல் 12 மணி |
| வியாழன்- உயர்ந்த நட்பு, செலவு மிகுதி. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- வீண் மனஸ்தாபம், உறவினர் பகை. | பகல் 12 மணி |
| சனி- செலவு மிகுதி, காரியத்தடை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-9

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, பலவித பேறு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, முயற்சி தடை. | காலை 6 மணி |
| புதன்- உறவினர் பகை, மனக் கவலை. | மு.ப 9 மணி |
| வியாழன்- வீண் விரயம், பயனற்ற செயல். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- மனக் குறை நீங்கும், செலவு மிகுதி. | மு.ப 9 மணி |
| சனி- தொழில் பிரச்சினை, இனசன விரோதம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-8

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரிய சித்தி. | காலை 7 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, கௌரவம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- பலவித யோசனை, மனக் கலக்கம். | காலை 6 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் சகவாசம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- தொழிலில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| சனி- பொருள் விரயம், தேகசுகம் பாதிப்பு. | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நட்பு. | காலை 6 மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், தொழில் மந்தம். | காலை 7 மணி |
| புதன்- உறவினர் பகை, மனக் கவலை. | காலை 6 மணி |
| வியாழன்- வீண் தொல்லை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, மனக் கலக்கம். | காலை 7 மணி |
| சனி- இனசன கொண்டாட்டம், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)


| | |
|---|---|
| ஞாயிறு- பொருள் விரயம், மனக் கவலை. | காலை 7 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வீண்கஷ்டம், பிரயாண மிகுதி. | காலை 7 மணி |
| புதன்- துயர் நீங்கும், அந்நியர் உதவி. | காலை 6 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, கௌரவம். | காலை 7 மணி |
| சனி- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-3



படிப்பகம்





## அன்பு வழி

கல்லும் கனியக் காட்டும் வழி!
கனலில் குளிரை ஊட்டும் வழி!
தொல்லை, துயரை ஓட்டும் வழி!
துணிவும், வலிவும் கூட்டும் வழி!

சொல்லில் சுவையைத் தேக்கும் வழி!
தொடங்கும் செயலை ஊக்கும் வழி!
வெல்லும் படியாய் ஆக்கும் வழி!
விழுந்தால் பரிவாய்த் தூக்கும் வழி!

பொல்லாப் பகையும் போக்கும் வழி!
புகையும் இனத்தை நீக்கும் வழி!
கொல்லாக் கருணை பூக்கும் வழி!
குலையா அமைதி காக்கும் வழி!

எல்லா மதமும் ஏற்றும் வழி!
யேசு, புத்தர் சாற்றும் வழி!
அல்லா, காந்தி போற்றும் வழி!
அன்பால் உலகைத் தேற்றும் வழி!

-இளங்குமரன்-

எங்கள் தமிழ் மொழி! எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ் கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

-சுப்பிரமணிய பாரதியார்.

# கைராசி மருத்துவர்

### பாப்பா முரசு சிறுகதை

ஓர் ஊரில் சுந்தரேசன் என்ற வைத்தியர் ஒருவர் இருந்தார்.

இவர் நாட்டு வைத்தியத்தில் மிகவும் கைதேர்ந்தவர். இவர் கைபட்டால் தீராத வியாதிகள் எல்லாம் தீர்ந்துவிடும். அந்த அளவிற்குத் திறமையான வைத்தியர் இவர்.

இதனால் சுந்தரேசனின் புகழ் பல ஊர்களுக்கும் பரவியிருந்தது. இவருக்கு 'கைராசி' என்ற பெயரும் உண்டு.

"பாம்பு கடித்து விட்டதா? தேள் கொட்டி விட்டதா? தீராத வயிற்றுவலியா? எலும்பு முறிவா? கைராசியிடம் போ." என்பார்கள் மக்கள். எல்லாவற்றிற்கும் கைராசி... கைராசி... கைராசி...

சுந்தரேசனுக்கு வருமானத்திற்கு எப்போதுமே குறைவில்லை. இத்தனை திறமையுள்ள சுந்தரேசனுக்கு ஒரு தீய குணமும் இருந்தது. அவரிடம் குமரேசன் என்ற இளைஞன் வேலை செய்தான்.

அவன் எப்பொழுதுமே சுந்தரேசனுக்கு உதவியாளராக இருப்பான். நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்யும் போது மருந்து, மாத்திரைகள் எடுத்துக் கொடுத்து உதவுவான். சில வேளைகளில் இவனே சிகிச்சையும் செய்வான்.

தனக்குத் தெரிந்த வைத்திய முறைகளை எல்லாம் குமரேசனுக்கு சொல்லிக் கொடுத்திருந்தார். ஆனால் சில பெரிய



வியாதிகளைக் குணமாக்கும் வைத்திய முறைகளை அவனுக்குச் சொல்லிக் கொடுக்கவில்லை. அதற்குக் காரணம் இருந்தது.

குமரேசன் வைத்தியம் பார்ப்பதில் கெட்டிக்காரனாக இருந்தான். பல அற்புத சிகிச்சை முறைகளை அவனுக்குக் கற்றுக் கொடுத்தால், வைத்தியத்தில் அவன் தன்னை விடத் திறமைசாலியாகி, தனக்கே போட்டியாக வந்துவிடுவானோ என்ற பயம்தான்.

இதுதான் அவருக்கிருந்த தீய குணம்.

ஒருநாள்-

பக்கத்து ஊரிலிருந்த நோயாளி ஒருவருக்கு சிகிச்சை செய்துவிட்டுத் தனது ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்தார் சுந்தரேசன்.

ஒரு காட்டுப்பாதை வழியே வந்து கொண்டிருந்தபோது, ஒரு கொடிய விஷப்பாம்பு அவரைக் கடித்துவிட்டது.

பாம்பு கடித்த உடனேயே அப்படியே துடிதுடித்துக் கீழே விழுந்துவிட்டார் சுந்தரேசன். பாம்பின் விஷம் மிக வீரியமுள்ளதாக இருந்ததால், அவரால் தனக்குத் தானே சிகிச்சை செய்து கொள்ளக் கூட முடியவில்லை.

வாயில் நுரை தள்ள, கைகால்களை உதறியபடி துடித்தார் சுந்தரேசன்.

அப்பொழுது அவ்வழியே வந்த இருவர், வைத்தியர் துடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து உடனே அவரைத் தூக்கிக் கொண்டு, அவரின் வைத்திய சாலைக்கு ஓடினார்கள்.

குமரேசன் அவருக்கு அவசரமாக சிகிச்சை செய்தான். ஆனால்-

அவரைக் கடித்த எந்தப் பாம்பு, எவ்வளவு விஷம் அவரது உடம்பிற்குள் போயிருந்தது, அதற்கு என்ன சிகிச்சை மேற்கொள்வது போன்ற விபரங்கள் எதுவும் குமரேசனுக்குத் தெரியவில்லை.


குமரேசனுக்குச் சொல்லிக் கொடுக்காத வைத்தியமுறைகளில் இதுவும் ஒன்று. ஆனாலும் வைத்தியரைக் காப்பாற்ற எவ்வளவோ முயன்றான். முடியவில்லை.

தனக்குப் போட்டியாக வேறு எவரும் வந்து விடக்கூடாது என்ற சுயநலம் கொண்ட வைத்தியர் சுந்தரேசன் இறந்து போனார்.

## வாரம் ஒரு நாடு

### ஐஸ்லாந்து

தலைநகர்- ரெய்க்ஜாவிக்
பரப்பளவு- 1,02,846 சதுர கிலோமீற்றர்
மக்கள் தொகை- 2,59,000
மொழி- ஐஸ்லாந்திக்
எழுத்தறிவு- 99%
சமயம்- கிறிஸ்தவம்
நாணயம்- குரோனா
தனி நபர் வருமானம்- 16,200 டொலர்.



**அமைவிடம்:**
வடக்கு அட்லாண்டிக் கடலில் ஆர்ட்டிக் வளையத்தின் தெற்கே அமைந்துள்ளது. இதன் மேற்கே கிறீன்லாந்தும் (டென்மார்க் நீரிணை கடந்து) தென்கிழக்கில் பாரேசும், ஸ்கொட்லாந்தும் அமைந்துள்ளன.

**வரலாறு:**
டென்மார்க்கின் ஆதிக்கத்தில் 1949 வரை இருந்தது. ஆர்ட்டிக் வட்டத்தின் அருகில் இருப்பதால் எப்போதும் கடும் குளிர். கோடைகாலத்தில் பகலிலும், இரவிலும் சூரியன் தென்படுகிறது. இதனால் 'நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு' எனப் பெயர் பெற்றுள்ளது. வெப்ப நீரூற்றுக்கள் வீடுகளையும், அலுவலகங்களையும் வெப்பப்படுத்துவதற்குப் பெரிதும் உதவுகிறது. இங்கு குமுறும் எரிமலைகள் பல உள்ளன.

**பொருளாதாரம்:**
மீன்பிடித்தல் மிக நவீனமாக நடைபெறுகிறது. உருளைக்கிழங்கு முக்கிய விளைபொருள். சுற்றுலாத்துறை வளர்ந்து வருகிறது.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 28.10.1995.
வர்ணம் தீட்டும் போட்டி இல: 113
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 110

பரிசுக்குரியவர்:
செல்வன். க. யோகநாதன்
யோகம்- தமிழ் வித்தியாலயம், தெஹியோவிட்ட.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| பொன்னுசாமி சிரிதரன் நு/நானுஓய தமிழ் வித்தியாலயம், நானுஓய. | கி. கிஷோர்குமார் இ/ஸ்பிரிங்வூட் த.வி. இறக்குவானை |
| பி.எம். மஸ்றூன், அல். ஹிதாயா வித்தியாலயம், மீராவோடை. | செல்வன். த. கலைவாணன், கலாபத்வெல த.வி. பலாபத்வெல. |
| செல்வன். லி. அரவிந்தன், ஆர்.கே.எம் கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, திருமலை. | எம்.என்.எம். நஸ்ரான், கஹு/சாஹிரா மகா வித்தியாலயம், தர்காநகர். |
| செல்வி. மேரி ருக்ஷிலா, அரசினர் முஸ்லிம் வித்தியாலயம், நாத்தாண்டியா. | மு. பிரிதிகலா, பது/கோணக்கலைத் தமிழ் வித்தியாலயம், பசறை. |
| செல்வி. பாத்திமா சிப்னாஸ்.ஷா. பாத்திமா மகளிர் மகா வித்தியாலயம் கொழும்பு-12. | எம்.சி. தீஸான் இல.453, பி.பி. வீதி, கல்முனை-04. |

## செய்து பாருங்கள்

### தீயை அணைக்க ஒரு சிறு கருவி

**தேவையான பொருட்கள்:**
ரப்பர் மூடி உடைய போத்தல்
ஸ்ட்ரோ (குழாய்)
அப்பச்சோடா
வினாகிரி



**செய்முறை:**
போத்தலில ரப்பர் மூடியில் துளையிடவும். அந்தத் துளையில் ஸ்ட்ரோவைச் செருகவும். இதைத் தனியே வைத்துவிட்டு அப்பச்சோடாவை ஒரு தாளில் சுற்றி போத்தலினுள் போடவும். வினாகிரியை போத்தலினுள் ஊற்றவும். பின்னர் போத்தலை ஸ்ட்ரோ செருகிய ரப்பர் மூடியினால் இறுக்கி மூடிவிடவும். ஸ்ட்ரோவின் முனையை நன்கு மூடிக்கொண்டு, போத்தலை நன்கு குலுக்கவும்.

பிறகு எரிந்து கொண்டிருக்கும் மெழுதுவர்த்தி மீது ஸ்ட்ரோ முனையை மூடியிருக்கும் விரலை எடுத்துவிட்டு போத்தலை நீட்டவும். போத்தலில் இருந்து வரும் வாயுவால் மெழுகுவர்த்தி நெருப்பு அணைந்துவிடும். வீட்டிலேயே தயாரிக்கும் சிறிய தீயணைப்பு சாதனம் இது.

## சின்ன — சின்ன சேதிகள்

* 2520 என்ற எண்ணை ஒன்று முதல் ஒன்பது வரை உள்ள எல்லா எண்களால் வகுத்தால் மீதி இல்லாமலேயே வரும்.
* ஒலிம்பிக் சின்னத்தில் உள்ள ஐந்து வட்டங்கள் எதைக் குறிக்கும் தெரியுமா? ஐந்து கண்டங்களைத்தான்.
* தேனீக்கள் ஒரு பவுண்டு எடையுள்ள தேனைச் சேகரிக்க 1,40,000 மைல்கள் பறக்க வேண்டும்.
* ஜப்பான் நாட்டின் தேசிய கீதம் நான்கு வரிகளைக் கொண்டது.
* நாம் சிரிக்கும் போது நமது இருதயம் 120 தடவைகள் துடிக்கும்.

## கெசற்

இந்த சொல் எப்படி வந்தது தெரியுமா? இத்தாலி அரசாங்கம் 11ம் நூற்றாண்டில் அரசு சம்பந்தப்பட்ட செய்திகளை பெரிய பலகைகளில் எழுதி மக்கள் படிப்பதற்காக தெருமுனைகளில் வைத்தது. இந்த செய்தி அறிக்கையை கெசற் என அழைத்தனர். 'கெசற்' என்பது லத்தீன் சொல். ஆங்கில சொல்லல்ல.

## மீனின் முடிச்சு



ஹேக் என்பது ஒருவகை விலாங்கு மீன். இதன் உடலில் இருந்து எப்பொழுதுமே ஒருவித கொழுகொழுப்பான திரவம் சுரந்து கொண்டே இருக்கும். ஒரு பெரிய வாளியில் கடல்நீரை நிரப்பி அதனுள் இந்த மீனைப் போட்டால் சில நொடிகளில் இது கடல்நீரை கொழுகொழுப்பான திரவமாக மாற்றிவிடும். எதிரிகளிடமிருந்து தன்னை மறைத்திருப்பதற்காக இந்தத் திரவத்தை ஹேக் மீன் சுரக்கிறது. இதனால் இதன் உடலைச்சுற்றி ஒரு பாதுகாப்புப் படலம் உருவாகிறது.

ஆனால், இந்தத்திரவம், இதன் செதில்களை அடைக்கும். அப்போது இந்த மீன் தன்னை ஒரு முடிச்சுப்போல ஆக்கிக்கொண்டு முடிச்சை அவிழ்க்கும். அப்போது இதன் உடலில் ஒட்டிக் கொண்டுள்ள திரவம் வழித்து எடுக்கப்படும். இப்படி இது தன் உடலை அடிக்கடி சுத்தப்படுத்திக் கொள்ளும்.

## குழந்தைப் பத்திரிகை

அமெரிக்காவில் 'சில்ரன்ஸ் எக்ஸ்பிரஸ்' என்ற ஒரு குழந்தைகள் பத்திரிகை வெளியாகிறது. இதில் வேலை செய்யும் பல நிருபர்கள் சிறுவர்கள். வயது பத்து முதல் பன்னிரண்டு. உலகில் வேறு எங்கும் எந்தப் பத்திரிகையும் இத்தனை குறைந்த வயதுடைய நிருபர்களை வைத்துக் கொண்டதில்லை.

## சிலை செய்யும் இயந்திரம்

நியூயார்க்கில் ஓர் இயந்திரம் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஒருவரைப் புகைப்படம் எடுக்கும் நேரத்தில் இந்த இயந்திரம் அவரைப் போலத் தத்ரூபமாக ஒரு சிலையைச் செய்துவிடும்.

## பெரிய... விருந்து

இங்கிலாந்தில், மன்னன் எட்வேர்ட் தமது முடிசூட்டு விழாவை 1902ம் ஆண்டு சிறப்பாகக் கொண்டாடினார். இலண்டனில் உள்ள ஏழை, எளியவர்கள் அனைவருக்கும் அன்றைய தினம் தமது அரண்மனையில் விருந்து கொடுத்தார். அப்படி விருந்துக்கு வந்தவர்கள் எத்தனை பேர் தெரியுமா? நான்கு இலட்சத்து 56 ஆயிரம் பேர்.

## விடுகதைகளும் விடைகளும்

1. தொம் தொம் மத்தளம், தாளம் இல்லா மத்தளம், இடுப்பில் ஏறா மத்தளம், எங்கள் வீட்டு மத்தளம். அது என்ன?
2. வாயசைக்கும் கதைக்காது. கடித்தெடுக்கும் உண்ணாது. அது என்ன?
3. சின்னச் சின்ன மின்குமிழ். நிலத்தில் வளரும் மின்குமிழ். கண்ணில் பட்டால் எம்மைக் கலங்கச் செய்யும் மின்குமிழ். அது என்ன?
4. குழந்தைபோல் காலுண்டு குரங்குமல்ல, உடம்பெல்லாம் முள்ளுண்டு மரமுமல்ல. அது என்ன?
5. பல நிறத்தில் சென்று ஒருநிறத்தில் வருகிறார்கள். யார்?
6. அண்ணன் சிவப்பு தம்பி கறுப்பு. அது என்ன?

### விடைகள்

1. உரல்
2. கத்தரிக்கோல்
3. வெங்காயம்
4. முள்ளம்பன்றி
5. தாம்பூலம் (வெற்றிலை)
6. குண்டுமணி

தொகுப்பு- கி. நிஷாந்தன்-பட்டிருப்பு ம.வி.



www.padippakam.com
படிப்பகம்

# விலை உயர்ந்த குற்றம்




பட்டுக்கோட்டை பிரபாகர்

## 6

“சொல்கிறேன். ஃபிலடெல்ஃபியாவில் உள்ள ஒரு தனியார் ஸ்தாபனம் எனக்கு ஒரு வேலை கொடுத்திருக்கிறது. அதற்காக வந்தேன். இவள் என் துணைக்கு. இந்த வேலையில் முழுக்க, முழுக்க உங்கள் உதவி எனக்குத்தேவை.”

மார்ட்டின் அதை தமிழாக்கிச் செப்பினதும்...

“அதுக்கென்ன, தாராளமா செஞ்சிடலாம். என்ன செய்யணும் சொல்லு. ஏண்டா மார்ட்டின், உள்ளார பாடி எதுவும் போட்க்கலை மாதிரி தெரியுதே. இதையும் டிராசிலேட்டு செஞ்சிடாதடா படவா.”

“ஆங்கிலம், தமிழ் இரண்டும் தெரிந்த, சென்னையின் மூலை முடுக்குகள் கூட தெரிந்த, திறமையாக காரோட்டத் தெரிந்த, தேவைப்பட்டால் பிரமாதமாக சண்டை போடக்கூடிய ஒரு நம்பிக்கையான ஆள் வேண்டும்.”

“அவ்வளவுதானே? இதோ நிக்கிறானே.... இவனையே வச்சிக்க. கார் வேணுமா? என்ன கார் வேணும் சொல்லு. ஏ.சி. பென்ஸ் ஏற்பாடு செய்யட்டுமா? ஏண்டா மார்ட்டின், வருவானாடா?”

“அதெல்லாம் வேண்டாம். இப்போது நாம் வந்த சிறிய கார் போதும். இன்னும் எட்டு நாட்கள் கழித்து பம்பாயிலிருந்து நியூயார்க் செல்ல எனக்கும், ஆனிக்கும் ரிட்டர்ன் டிக்கெட்டுகள் எடுத்தாயிற்று. அதே ஃபிளைட்டில் இன்னும் ஒரு டிக்கெட் எடுத்துத்தர முடியுமா?”

“ஏர் இந்தியாவா? பான் அமெரிக்கனா? லூஃப்தான்ஸாவா? இது மூணுக்குள்ளேன்னா முடியும். டெல்லில நம்ம கொடி ஒரு பக்கமா பறந்து கிட்டிருக்குப்பா பார்க்கரு... இந்தக் குட்டி ஊமையா?”

“லூஃப்தான்ஸா”

“கவலையை வுடு. எடுத்துடலாம். பாஸ்போர்ட்டைக் கொடுத்திட்டு வேலையைப்பாரு.”

“சர்தான். திடீர் உப்புமா மாதிரி திடீர் பாஸ்போர்ட் சமாச்சாரம் எல்லாம் இப்பக் கொஞ்சம் கஷ்டம்யா. ஸ்ட்ரிக்டா இருக்காங்க.”

அப்படியென்றால் முடியாதா? என்றாள் ஆனி.

“அப்பா! பேசிட்டாடா. முடியாதா? என்னாலயா? என்னடா மார்ட்டின் நம்மாளைப் பத்தி இப்படி கேவலமா பேசறா. சிரமம்னுதானே சொன்னேன். முடியாதுன்னு சொன்னனா? மூணே நாள்ல வாங்கித்தர்றேன். என்ன, கொஞ்சம் செலவாகும்.”

“செலவைப் பற்றிக் கவலையில்லை மிஸ்டர் கண்ணபிரான். எவ்வளவு ஆனாலும் பரவாயில்லை.”

“அப்பன்னா சரி. பேரு, விலாசம், பத்து போட்டோ எல்லாம் வேணும்.”

“எல்லாம் நாளைக்குத் தருகிறேன்.”

“சரி. இன்னைக்கு இவ ஏதாச்சும் தருவாளா?”

“வாட்?”

“யோவ் பார்க்கரு, எல்லாம் சரி, இங்கே என்ன வேலை செய்யப்போறே? அதைச் சொல்லு.”

“ஒரு சாகஸச் சிறுவனை இங்கே உங்கள் இந்தியாவில் பயன்படுத்தத் தெரியாமல் வேஸ்ட் செய்து கொண்டிருக்கிறார்கள். அவனை அமெரிக்காவுக்கு அழைத்துப்போய் சிறப்பாகப் பயன் படுத்தப் போகிறோம்.”

“செய்யி. தாராளமா செய்யி. உங்க நாட்ல எத்தனை ஆயிரம் இந்திய டாக்டர்ஸ் இருக்காங்க தெரியுமா? இங்கே அவ்வளவு மரியாதைப்பட்ட சம்பளம் கிடைக்கிறதில்லைன்னு அங்கே வந்துடறாங்க. சிறுவன்னு சொல்றியே... அப்படி என்ன சாகஸம் செய்றான்?”

பார்க்கர் ஸ்மித் சரவணகுமாரின் விசேஷ ஞாபக சக்தியையும், அவன் திறமைகளையும் விவரமாகச் சொல்ல...

“மனித கம்ப்யூட்டர்ன்னு சொல்லு. எல்லாம் சரி. பணக்கார வீட்டுப் பையன்னு சொல்ற. எப்படிக் கடத்தப் போறே?”

“முதலில் சில ஏற்பாடுகள். சில கவனிப்புகள். பிறகு செயல்.”

“என்னமோ செய்யி. என் பெரியம்மா சாக இருந்தப்ப முக்கியமான ஊசியை நீ வாங்கி அனுப்பி வைக்கலைன்னா உயில் எழுதாம கிழவி செத்திருப்பா. மத்த சொந்தக்காரங்க மத்தியில எனக்கு ஒரு லாபமும் இருந்திருக்காது. நீ அனுப்பின ஊசி அவளை எந்திரிச்சி உக்கார வச்சிது. என் பாசத்தை நம்ப வச்சிது. பெரும் பான்மையான சொத்துக்களை என் பேர்ல எழுத வச்சிது. பாரு இப்ப மூணு மொழில ஒரு படத்துக்கு பூஜை போட்ருக்கேன். முக்கியமான சினிமா டிஸ்ட்ரிபியூட்டரா இருக்கேன். நீ சமயத்தில செஞ்ச உதவியை மறந்துடறதா? உனக்கு இன்னும் என்ன என்ன உதவி வேணும்னாலும் கேளு. செஞ்சித் தர தயாரா இருக்கேன்.”

“இந்த செயலில் உங்கள் ஒத்துழைப்புக்காக நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?”

“அதெல்லாம் ஒரு பைசா வேணாம். நன்றி செலுத்த ஒரு வாய்ப்பு கிடைச்சதேன்னு சந்தோஷமா இருக்குப்பா. வேணும்னா ஒண்ணு செய்யி. ஒரே ஒரு தடவை ஆனியை அனுப்பறியா?”

“இதையும் டிராசிலேட்டு செஞ்சிடவா?”

“அட! நீ வேற சும்மா இருடா. எட்டு நாள் இருக்கா. எங்கே போயிடறா?”

“வாட்?”

“ஒண்ணுமில்லை. அப்ப நான் புறப்படறேன்” என்று எழுந்தார்.

“இன்னும் ஒரு உதவி.”

“என்ன?”

“ஒரு பிஸ்டல் வேண்டும்.”

“தர்றேன். இவன் கிட்ட கொடுத்தனுப்புறேன். சும்மா பயமுறுத்தறதுக்காக வச்சிக்க. சுட்டு, கிட்டு வச்சிடாதே. வில்லங்கமாய்டும். அப்புறம்... இந்தா நாளைக்கு சாயங்காலத்துக்கு ராணி சீதைஹால் நிகழ்ச்சிக்கு ரெண்டு டிக்கெட்டு.”

“பார்க்கர் ஸ்மித் வாங்கிக்கொண்டு கை குலுக்கினான்.”

கண்ணபிரான் ஆனியின் கையை வலிய பெற்றுக்கொண்டு இரண்டு கைகளாலும் பிடித்துக்குலுக்கி விட்டுப் புறப்பட்டார்.

வெளியே வந்ததும் மார்ட்டினிடம், “மெத்துன்னு இருக்கடா பஞ்சு மிட்டாய் தொட்ட மாதிரி. உள்ளுக்குள்ளார இன்னும் மெத்துன்னு இருக்கும். அமெரிக்க குதிரையில இதுவரைக்கும் சவாரி போனதில்லை. பார்க்கலாம். கொஞ்சலாம்னா மொழிதான்டா பெரிய பிரச்னை.”

“நான் டிராசிலேட்டு பண்றேனே சார்.”

“எங்க? பெட்ரூம்லயா? வெவஸ்தை கெட்ட பயலே!”

“பார்க்கருக்கு தமிழ் தெரியாது. உங்களுக்கு இங்கிலீஷ் அவ்வளவு வராது. எப்படி சார் பேனா தோழர்களானீங்க?”

“உன்னை மாதிரிதான் ஒரு ஆளு வச்சிருந்தேன். பார்க்கர்கிட்டேர்ந்து லெட்டர் வரும். அவன்கிட்டே கொடுப்பேன். தமிழ்ல எழுதித்தருவான். நான் பதில் எழுதித் தருவேன். அதை இங்லிலீஷ் பண்ணித் தருவான். கையெழுத்துப் போட்டு அனுப்பிச்சுடுவேன்.”

கண்ணபிரான் காரில் ஏறிக்கொண்டதும், மார்ட்டின் டிரைவிங் சீட்டில் அமர்ந்து ஸ்டார்ட் செய்தான்.

ஹோட்டல் உத்சவ்-என்கிற கான்க்ரீட் ஃப்ரண்ட் எலிவேஷன், டிசைன் செய்த என்ஜினியர் விலாசம் தேடிச் சென்று கைகுலுக்கத் தூண்டிக் கொண்டிருந்தது. காம்பௌண்டிற்கும் கட்டிட விளிம்புக்கும் நடுவே கரும்பு, நெல், சோளம், சூரியகாந்தி என்ற சகலமும் விளைவிக்க இடமிருந்தது. தற்சமயம் புல் என்னும் பச்சைத் தலைமயிர் சுமந்து, இரண்டு பக்கங்களிலும் டிசைன் டிசைனாகத் தண்ணீரைச் சிதறடித்துக் கொண்டு ஃபவுண்ட்டன்ஸ். ஒரு பக்கத்தில் வெள்ளை, வெள்ளை மேஜைகள் போட்டு லான் சர்வீஸில் சூடாய் மசால் தோசை, ஜில்லென்று ஐஸ்கிரீம் சப்ளை.

ரிசப்ஷனுக்கு அருகில் ஸோபாவில் அமர்ந்து வலது கட்டை விரலின் நகம் கடித்துத் துப்பிக் கொண்டு புல் வெளியில் ஓடி விளையாடும் யாருடைய பாப்பாக்களையோ பார்த்துக் கொண்டிருந்தான் செல்வம்.

கொஞ்ச நேரத்தில் பார்க்கிங் பகுதியில் வந்து இடம் தேடிய அம்பாசிடருக்குள் இருந்த சுபாகரை அடையாளம் கண்டு எழுந்து கொண்டான். நோக்கிச் சென்றான்.

காரை நிறுத்திவிட்டு சூட்கேசுடன் இறங்கின சுபாகர் சூட்கேஸ் எடுத்துக் கொண்டு தன் தொப்பியை எடுத்துச் சுருட்டி பேண்ட் பாக்கெட்டில் போட்டுக்கொண்டு, “ஸாரி செல்வம், வழில கொஞ்சம் மக்கர் செஞ்சிடுச்சி கார். அதான் லேட்.”

“பரவால்லை. நீ எந்த கார்ல வருவேன்னு எதுவும் சொல்லலை. ரிசப்ஷன்ல சுபாகர்ன்னு விசாரிச்சேன். அப்படி ரூம் எதுவும் ரிசர்வ் ஆகலைன்னுட்டாங்க. குழப்பமாய் போச்சு. சரி, வெய்ட்பண்ணி பார்க்கலாம்னு உக்காந்துட்டேன்.”

“மறந்துட்டியா? எப்பவும் என் சொந்தப் பேர்ல ரூம் எடுத்துத் தங்கறதே இல்லையே.. வா, ரூமுக்குப் போய் பேசலாம்.”

இருவரும் ரிஸப்ஷன் கவுண்ட்டருக்கு வந்தார்கள். நான்கு ரிஸப்ஷனிஸ்ட் பெண்களும் ஒரேஸ்டைலில் தலை சீவி, ஒரே நிறத்தில் புடவை கட்டி, ஒரே கலரில் பொட்டிட்டு, லிப்ஸ்டிக்கிட்டு, ஒரே டிசைனில் அரை இஞ்ச்சுக்கு மிகைப்படாமல் புன்சிரித்துக் கொண்டிருக்க...

“நான் சிக்கந்தர். என் பெயரில் ஒரு சிங்கிள் அறை பதிவு செய்யப்பட்டிருக்கிறது.”

“ஆமாம். இங்கே கையெழுத்திடுங்கள்.”

அங்கே சிக்கந்தர் என்று ஒரு கிறுக்கல் செய்து, ரூம்பாயிடம் சூட்கேஸ் கொடுத்து, லிஃப்ட்டில் பொழிந்த இசையை வாங்கி காதுக்குள் வைத்துக்கொண்டு நான்காவதில் வெளியேறி 417 அறைக்குள் நுழைய... இன்றைக்குத்தான் கிரஹப்பிரவேசமான புதுவீடாய் இருந்தது அறை.

சூடாய் சில அயிட்டங்கள் ஆர்டர் செய்து விட்டு, “அஞ்சே நிமிஷத்தில குளிச்சிட்டு வந்துடறேன்” என்றான் சுபா.

குளித்துவிட்டு வந்து, “உன் வீட்டு சாவி கொண்டாந்தயா?”

“இந்தா”

வாங்கி பத்திரப்படுத்தி, “இன்னொண்ணு இருக்கில்லே உனக்கு?”

“இருக்கு. இந்த தடவை என்ன கடத்தறே சுபா, பிஸ்கெட்டா, சிலையா?”

“ரெண்டுமில்லை. எப்பவும் போல லாபத்தில ஒரு பங்கு நிச்சயம் உண்டு.”

“அது இல்லைன்னா எதுக்காக நான் ரிஸ்க் எடுத்துக்கறேன்? என்னங்க திடீர்னு அம்மா வீட்டுக்குப் போகச் சொல்றீங்கன்னு பத்து தரமாவது கேட்டுதான் புறப்பட்டுப் போனா”.

“நம்ம தொழில்ல இதான் கஷ்டம். இதனாலேயே நான் கல்யாணம் பண்ணிக்கலை. நீயும் என்னை மாதிரி ஃபுல்டைமா இறங்க முடியலை பாரு.”

“வாஸ்தவம். இண்ட்ரெஸ்ட்டும் விட்டுப் போச்சி. வேலைல சம்பளம் வருது ஆயிரத்துக்கு மேல. கொஞ்சம் தில்லுமுல்லு செய்றதிலே தனியா ஒரு ஆயிரம் ஒதுங்குது. எப்பவாச்சும் நீ வந்து பம்ப்பர் பரிசு மாதிரி அள்ளிக் கொடுத்துட்டுப் போறே?” சர்தான். இது போதும். சரி, விவரத்தை சொல்லு. என்ன செய்யப் போறே?

“ஒரு பொடியனை இங்கேர்ந்து கடத்தி பம்பாய்ல ஒப்படைக்கணும்.”

“இதுக்கு த கிரேட் சுபா தேவையா?”

“ஆமாம். பையன் கொஞ்சம் விசேஷமான பையன்” என்று விவரங்களைச் சொல்லி, தன் திட்டத்தைச் சொல்லி, “அதனால நான் சொன்னபடி உன் ஒத்துழைப்பு வேணும்” என்றான்.

“செஞ்சிடலாம். ஆஃபீசுக்கு தினம் பஸ்ல போறேன். ஏதாச்சும் ரெண்டு சக்கர வண்டி வாங்கிக் கொடுக்கறியா? செகண்ட் ஹேண்ட்டா இருந்தாக்கூட போதும்.”

“டன்!”

என்றான் சுபா.

மறுநாள்.

சூரியன் சிவப்பு ஸ்வெட்டர் போட்டுக் கொண்டு உலா புறப்பட்டிருந்தான். பறவைகள் கோஷ்டி கானம் இசைத்துக் கொண்டிருக்க... மரங்கள் அந்த இசையில் உருகி ராத்திரி சேமித்த பனியை உருக்கிச் சொட்டிக் கொண்டிருந்தன.

கிண்டியில், மரங்களடர்ந்த அந்த சாலையில் கிட்டத்தட்ட ஒளிந்து கொண்டிருந்தது அரவிந்தா அனாதை இல்லம். முகப்பில் எனாமல் போர்டு காலத்தால் தின்னப்பட்டுக் கொண்டிருக்க...

உள்ளே சிறிய மைதானத்தின் நட்ட நடுவில் சிமெண்ட் மேடையில் ஊன்றப் பட்டிருந்த கம்பத்தின் உச்சியில் தாயின் மணிக்கொடி பட்டொளி வீசிப்பறக்க... கீழே வரிசை வரிசையாய் நின்று...

அந்த இல்லத்திற்கென்று பிரத்யேகமாக தயார் செய்யப்பட்டிருந்த கடவுள் வாழ்த்துப் பாடலை ஒரு தாத்தா ஹாமோனியப் பின்னணியில் பாட... கூடியிருந்த பையன்களும், பையள்களும் கடமையே என்று பாடிக்கொண்டிருக்க...

அலுவலக அறையின் வாசலில் வந்து நின்றது வெள்ளை ஃபியட். அதிலிருந்து மார்ட்டின், பார்க்கர் ஸ்மித், ஆனி இறங்கினார்கள்.

‘ராஜேந்திரன்-பராமரிப்பாளர்’ என்று போர்டு மாட்டியிருந்த அறையின் கதவுகள் திறந்தே இருக்க... வராந்தாவில் மூக்குப்பொடி போட்டுக் கொண்டிருந்தவன், “அய்யாவைப் பார்க்கணுமா?” என்றான்.

“ஆமாம்” என்றான் மார்ட்டின்.

“உள்ளாறப் போயி உக்காருங்க. பிரேயர்ல இருக்காரு. இப்ப வந்துடுவாரு.”


உள்ளே எளிமையான நாற்காலிகளில் அமர்ந்தார்கள்.

அன்பே தெய்வம், அன்புக்கு விலை உண்டோ? என்று அன்பை ஓகோவென்று உச்சியில் வைத்து நிறைய வாசகங்கள் சுவர் சுவராக ஒட்டப்பட்டிருந்தன.

பார்க்கர் ஸ்மித் மேஜைமேல் இருந்த ஆங்கில தினசரியை எடுத்துப் படிக்க ஆரம்பித்தார். மார்ட்டின் எழுந்து வெளியே நின்று சிகரெட் பிடித்தான்.

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்





பெயர்: வி. சண்முகநாதன்
வயது: 18
முகவரி: 39/27, சாந்தி வீதி, ஹெந்தளை, வத்தளை.
பொழுது போக்கு: பத்திரிகை, வாசித்தல், வானொலி கேட்டல்.

பெயர்: எம். இஸ்மாயில்
வயது: 21
முகவரி: 32, பிரதான வீதி, ஹட்டன்.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி, நண்பர் தொடர்பு.

பெயர்: எஸ். குமார்
வயது: 18
முகவரி: சிங்காரவத்தை, சாமிமலை.
பொழுது போக்கு: வழமையான பொழுது போக்குகள்.

பெயர்: நூரா செய்னப்
முகவரி: ORDNANCE PROGRAM DIV, P.O.BOX-2959, RIYADH-11461, K.S.A.
பொழுது போக்கு: வானொலி, புத்தகம்.

பெயர்: எஸ். சிவநேசன்
வயது: 26
முகவரி: HOTEL BANNOF, SCHAFF HAUSER STR.51, 8155 GLATTBERUG, SWITZERLAND.
பொழுது போக்கு: பாடல்கள் கேட்டல், புத்தகம் படித்தல்.

பெயர்: எம். சபான்
வயது: 25
முகவரி: P.O.BOX-48366, CODE 54554, AL SABAHIYA, KUWAIT.
பொழுது போக்கு: டி.வி, பத்திரிகை, கதைப்புத்தகம்.

பெயர்: வி. ராஜன்
வயது: 22
முகவரி: 11/பி18, செட்டியார் தெரு, கொழும்பு-11.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி, டிவி.

பெயர்: எச். முகமட் ஜிப்ரி
வயது: 16
முகவரி: 61சி, காலி வீதி, தெஹிவளை.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எம். பிரபாகரன்
வயது: 22
முகவரி: LANDHAUS-STR-57A, 70190-STUTTGART, GERMANY..
பொழுது போக்கு: புகைப்படம் எடுத்தல், பேனாநட்பு.

பெயர்: எம். பைசல்
வயது: 21
முகவரி: P.O.BOX-25032, AL RIYATH. 11466, K.S.A.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எஸ். கோபாலரத்தினம்
வயது: 20
முகவரி: தேத்தாந்தீவு, முதலாம் குறிச்சி, களுவாஞ்சிக்குடி.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி, டி.வி.

பெயர்: முகம்மது ஜலீல்
வயது: 16
முகவரி: 675, வீ.எச். வீதி, சாய்ந்தமருது-16.
பொழுது போக்கு: முத்திரை சேகரித்தல, பத்திரிகை படித்தல்.



படிப்பகம்

# தாய்

## மக்சீம் கார்க்கி

### 47

> அவளால் அழ முடியவில்லை; அவளது இதயம் வற்றி மெலிந்து வறண்டு போயிற்று; அவளது உதடுகளும் வறண்டு போயின.

தாய் தனது கரங்களை அகல விரித்தாள்.

"கேளுங்கள்-ஆண்டவனின் பெயரால், கேளுங்கள்! நல்லவர்களான நீங்கள் எல்லாம், அன்பான நீங்கள் எல்லாம், என்ன நடந்தது என்பதைப் பயமின்றிப் பாருங்கள்! நம்முடைய சொந்தப் பிள்ளைகள், நமது இரத்தத்தின் இரத்தமான குழந்தைகள், நியாயத்தின் பேரால் இந்த உலகில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறார்கள். நம் அனைவருக்கும் உரிய நியாயத்துக்காக! உங்கள் அனைவரது நலத்துக்காக, உங்களது பிறவாத குழந்தைகளின் நலத்துக்காக, அவர்கள் இந்தச் சிலுவையைத் தாங்கிச் செல்லுகிறார்கள். அவர்கள் வேண்டுவது வேறொரு வாழ்க்கை—சத்தியமும் தர்மமும் நியாயமும் உள்ள வாழ்க்கை! சகல மக்களுக்காகவும் அவர்கள் நன்மையை நாடுகிறார்கள்!"

அவளது இருதயம் நெஞ்சுக்குள் புடைத்து நின்றது; தொண்டை சூடேறி வறண்டது; அவளது நெஞ்சாளத்துக்குள்ளே பெரிய பெரிய, பரிபூரண அன்பு நிறைந்த அந்த வார்த்தைகள், அவளது நாக்குக்கு வந்து அவளை மேலும் அதிகமான உணர்ச்சியோடு, மேலும் அதிகமான சுதந்திரத்தோடு பேசுமாறு நிர்ப்பந்தித்தன.

எதிராக, அவர்கள் சென்றுவிட்டார்கள். அன்பான மக்களே! நம் அனைவருக்காகவும் சர்வதேசங்களுக்காகவும், உலகின் எந்தெந்த மூலையிலோ இருக்கின்ற சகல தொழிலாளர் மக்களுக்காகவும்தான் நமது இளம் பிள்ளைகள், நமது வாலிபர்கள் எழுச்சி பெற்றுச் செல்கிறார்கள். அவர்களைப் புறக்கணிக்காதீர்கள்! அவர்களை வெறுக்காதீர்கள்! உங்கள் குழந்தைகளை தன்னந்தனியாகச் செல்லுமாறு செய்யாதீர்கள்! நீங்கள் உங்கள் மீதே அனுதாபம் கொள்ளுங்கள். உண்மைக்குப் பிறப்பளித்த, அந்த உண்மைக்காகத் தங்கள் உயிர்களையும் இழக்கத் தயாராயிருக்கும் உங்கள் குழந்தைகளின் இதயங்களின் மீது நம்பிக்கை வையுங்கள்!"

அவளது குரல் உடைபட்டுத் தடைப்பட்டது. அவள் ஆடியசைந்தாள்; மயங்கி விழும் நிலையில் தடுமாறினாள். யாரோ அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டார்கள்.

"அவள் பேசுவது ஆண்டவனின் உண்மை; கடவுளின் சத்தியம்!" என்று யாரோ ஒருவன் உணர்ச்சி வேகத்தில் கத்தினான். "கடவுளின் சத்தியம், ஜனங்களே! அதைக் கேளுங்கள்!"

"அவள் எப்படித் தன்னைத்தானே சித்திரவதை செய்து கொள்கிறாள் என்பதைப் பாருங்கள்" என்று இன்னொருவன் பரிவோடு பேசினான்.

"அவள் தன்னைத்தானே சித்திரவதை செய்யவில்லை" என்று மற்றொருவன் பேச ஆரம்பித்தான். "ஆனால்—முட்டாள்களே! அவள் நம்மைத்தான் சித்திரவதைக்கு ஆளாக்குகிறாள். அதை நீங்கள் இன்னுமா அறியவில்லை?"

"உண்மையாகவே நம்பிக்கை கொண்டவர்கள்!" என்று ஒரு பெண் நடுநடுங்கும் உரத்த குரலில் கத்தினாள்: "என் மீத்யா—அவன் ஒரு களங்கமற்ற புனித ஆத்மா! அவன் என்ன தவறைச் செய்தான்? தான் நேசிக்கும் தோழர்களைத் தானே அவன் பின்பற்றினான். அவள் சொல்வது ரொம்பச் சரி. நாம் ஏன் நமது பிள்ளைகளை நிராதரவாய்—நிர்க்கதியாய் விட வேண்டும்? அவர்கள் ஏதாவது தவறு செய்தார்களா?"

இந்த வார்த்தைகளைக் கேட்ட தாய் நடுநடுங்கினாள். அமைதியாக அழுதாள்.

"வீட்டுக்குப் போ, பெலகேயா நீலவ்னா!" என்றான் சிஸோவ்; "வீட்டுக்குப் போ, அம்மா. இன்று நீ மிகவும் களைத்து விட்டாய்!"

எல்லோரும் தான் கூறுவதை மௌனமாகக் கேட்டுக்கொண்டிருப்பதை அவளால் காண முடிந்தது. அவளைச் சுற்றிலும் சகல மக்களும் நெருக்கமாகச் சூழ்ந்து, ஆவலும் சிந்தனையும் நிறைந்தவர்களாக குழுமி நின்றார்கள். அவளிடம் காணப்பட்ட ஆவலுணர்ச்சியானது அவளது மகனுக்குப் பின்னால், அந்திரேய்க்குப் பின்னால், சிப்பாய்களின் கையில் சிக்கிவிட்ட அத்தனை பேர்களுக்கும் பின்னால், நிராதரவாக விடப்பட்ட அந்த வாலிபர்களுக்குப் பின்னால் சகல மக்களும் ஓடிச் செல்ல வேண்டும் என்று தூண்டும் உணர்ச்சி தான் என்பதைத் தாய் கண்டு கொண்டாள்.

முகத்தைச் சுழித்துக் கவன சிந்தையராக நிற்கும் அவர்களது முகங்களை ஒருமுறை பார்த்துவிட்டு, அவள் அமைதி நிறைந்த பலத்தோடு மேலும் பேசத் தொடங்கினாள்:

"நமது பிள்ளைகள் இன்பத்தைத் தேடி இந்த உலகுக்குள் புகுந்து விட்டார்கள். நம் அனைவரது நலத்துக்காக, கிறிஸ்து பெருமானின் சத்தியத்துக்காக, நம்முடைய முதுகில் அறைந்து, நமது கைகளைக் கட்டிப்போட்டு, நம்மை இறுக்கித் திணறவைத்த, கொடுமையும், பொய்மையும் பேராசையும் கொண்ட பேர்களின் சகல சட்டதிட்டங்களுக்கும்



அவனது முகம் வெளுத்து, தாடி கலைந்து போயிருந்தது. திடீரென அவன் நிமிர்ந்து சுற்றுமுற்றும் ஒரு கடுமையான பார்வை பார்த்து விட்டு, அழுத்தமாகப் பேச ஆரம்பித்தான்:

"என் மகன் மத்வேய் எப்படித் தொழிற்சாலையிலே கொல்லப்பட்டான் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். அவன்மட்டும் உயிரோடிருந்தால், நானே அவனை அவர்களுக்குப் பின்னால் அனுப்பி வைப்பேன். 'நீயும் போ, மத்வேய்! அது ஒன்றுதான் சரியான சத்திய மார்க்கம்; நேர்மையான மார்க்கம்!' என்று நானே அவனிடம் சொல்வேன்."

அவனும் திடீரெனப் பேச்சை நிறுத்தி அமைதியில் ஆழ்ந்தான்; எல்லோருமே ஏதோ ஒரு புதிய, பெரிய உணர்ச்சியால், அந்த உணர்ச்சியைப் பற்றிய பயத்திலிருந்து விடுபட்ட உணர்ச்சியின் பிடியில் அகப்பட்டு, மோன சமாதியில் ஆழ்ந்தார்கள். சிஸோவ் தன் முஷ்டியை ஆட்டிக் கொண்டு மேலும் பேசத் தொடங்கினான்:

"கிழவனான நான் பேசுகிறேன். உங்கள் அனைவருக்கும் என்னைத் தெரியும். ஐம்பத்தி மூன்று வருஷகாலமாக நான் இந்தப் பூமியில் வாழ்கிறேன்; முப்பத்தொன்பது வருஷமாக இந்தத் தொழிற்சாலையில் வேலை பார்க்கிறேன். இன்றோ அவர்கள் என் மருமகனை மீண்டும் கைது செய்தார்கள். அவன் ஒரு நல்ல பையன்; புத்திசாலி. அவனும் பாவெலுக்குப் பக்கமாக, கொடிக்குப் பக்கமாக முன்னேறிச் சென்றான்....."

அவன் கையை உதறினான். பின் குறுகிப் போய் தாயின் கரத்தைப் பற்றிப் பேசினான்:

"இந்தப் பெண் பிள்ளை சொன்னதுதான் உண்மை. நமது குழந்தைகள் மானத்துடன் வாழ விரும்புகிறார்கள்; அறிவோடு வாழ விரும்புகிறார்கள்; ஆனால் நாம்தான் அவர்களை நிராதரவாய்-நிர்க்கதியாய் விட்டு விட்டோம்! சரி வீட்டுக்குப் போ, பெலகேயா நீலவ்னா."

"நல்லவர்களே!" என்று அழுது சிவந்த கண்களால் சுற்றிப் பார்த்து விட்டு அவள் சொன்னாள்: "நமது குழந்தைகளுக்கு வாழ்வு உண்டு; இந்த உலகம் அவர்களுக்கே!"

"புறப்படு, பெலகேயா நீலவ்னா, இதோ, உன் கம்பு" என்று கூறிக்கொண்டே, முறிந்து போன அந்தக் கொடிக் கம்பை எடுத்து அவள் கையில் கொடுத்தான் சிஸோவ்.

அவர்கள் அவளை மரியாதையுடனும் துக்கத்துடனும் கவனித்தார்கள்; அனுதாபக் குரல்களின் கசமுசப்பின் மத்தியிலே அவள் அங்கிருந்து அகன்று சென்றாள். சிஸோவ் அவளுக்காக, கூட்டத்தினரை விலகச் செய்து வழியுண்டாக்கினான்; ஜனங்கள் ஒன்றுமே பேசாது வழிவிட்டு ஒதுங்கினர். ஏதோ ஒரு இனந்தெரியாத சக்தியினால் அவர்கள் இழுக்கப்பட்டு, அவள் பின்னாலேயே சென்றார்கள்; செல்லும்போது தணிந்த குரலில் ஏதேதோ வார்த்தைகளைப் பரிமாறிக் கொண்டார்கள்.

அவளது வீட்டு வாசலை அடைந்ததும் அவள் அவர்கள் பக்கமாகத் திரும்பினாள்; தன் கைத்தடியின் மீது சாய்ந்தவாறே தலை வணங்கினாள். நன்றியுணர்வு தொனிக்கும் மெதுவான குரலில் சொன்னாள்:

"உங்கள் அனைவருக்கும் நன்றி!"

அந்தப் புதிய எண்ணம்— அவள் இதயம் பெற்றெடுத்ததாகத் தோன்றிய அந்தப் புதிய எண்ணம் மீண்டும் நினைவு வந்தது. எனவே அவள் சொன்னாள்:

"கிறிஸ்துவுக்கு மகிமை உண்டாவதற்காக, ஜனங்கள் தங்கள் உயிர்களை இழக்காதிருந்தால், கிறிஸ்துவே இருந்திருக்கமாட்டார்!"

ஜனக்கூட்டம் வாய்பேசாது அவளையேபார்த்தது.

அவள் மீண்டும் ஜனக்கூட்டத்துக்கு தலைவணங்கி விட்டு, வீட்டுக்குள் சென்றாள். சிஸோவ் தானும் தலை வணங்கியவாறு அவளைப் பின் தொடர்ந்தான்.

சிறிது நேரம் அந்த ஜனங்கள் அங்கேயே நின்றவாறு ஏதேதோ பேசிக்கொண்டார்கள்.

பிறகு அவர்களும் மெதுவாகச் செல்ல ஆரம்பித்தார்கள்.

◘◘◘

அந்த நாளின் குறைப் பொழுதும் மங்கிய நினைவுகளாலும், தனது உடலையும், உள்ளத்தையும் பற்றியிருந்த களைப்புமிகுதியாலுமே தாய்க்குக் கழிந்தது. அவள் முன்னால், அந்தக் குட்டி அதிகாரியின் உருவம், பாவெலின் தாமிர நிறமுகம், புன்னகை பூக்கும் அந்திரேயின் கண்கள்—எல்லாம் நிழலாடின.

அவள் அறைக்குள்ளே அலைந்தாள்; ஜன்னலருகே உட்கார்ந்தாள்; தெருவை எட்டிப் பார்த்தாள்; மீண்டும் எழுந்தாள்; புருவத்தை மேலேற்றி வியந்தவாறு, சிறு சப்தம் கேட்டாலும் விழிப்புற்று, எங்கும் பார்த்தவாறு நடந்தாள்; அல்லது எதையோ அர்த்தமற்றுத் தேடுவது போல் பார்த்தாள். அவள் தண்ணீர் குடித்தாள். தண்ணீர் அவளது தாகத்தையும் தணிக்கவில்லை; அவளது நெஞ்சுக்குள் தவிக்கும் ஏக்கத்தையும் தணிக்கவில்லை; குமைந்து நின்ற துயரத்தையும் அணைக்கவில்லை. அன்றையப் பொழுதே அவளுக்கு இரு கூறாகத் தோன்றியது. அதன் முதற் பகுதிக்கு அர்த்தம் இருந்தது; இரண்டாம் பகுதியிலே அந்த அர்த்தமெல்லாம் வற்றிச் சுவறி வறண்டு போய்விட்டது. வேதனை தரும் சூன்ய உணர்ச்சி அவள் மனத்தில் மேலோங்கியது. அவள் தனக்குத்தானே ஒரு கேள்வியை எழுப்பிக் கொண்டாள்:

'இப்போது என்ன?'

மரியா கோர்சுனவா அவளைப் பார்க்க வந்தாள். அவள் தன் கரங்களை ஆட்டிக் கொண்டு சத்தமிட்டாள்; அழுதாள், உணர்ச்சிப் பரவசமானாள்; காலைத் தரையில் உதைத்தாள்; ஏதேதோ வாய்க்கு வந்தபடி திட்டினாள்; சபதம் கூறினாள்; யோசனை சொன்னாள். எதுவுமே தாயை அசைக்கவில்லை.

"ஆஹா! ஜனங்கள் எல்லோரும் போராடக் கிளம்பி விட்டார்கள்! தொழிற்சாலை முழுவதுமே எழுச்சி பெற்று விட்டது. ஆமாம், தொழிற்சாலை முழுவதும் தான்!" மரியாவின் கீச்சுக்குரல் கேட்டது.

"ஆமாம்" என்று அமைதியோடு தலையை ஆட்டிக் கொண்டு சொன்னாள் தாய். ஆனால் அவளது கண்கள் கடந்த காலத்தை, பாவெலோடும் அந்திரேயோடும் மறைந்து போன சகலவற்றையும் நினைத்து நிலைகுத்தி நின்றன. அவளால் அழ முடியவில்லை; அவளது இதயம் வற்றி மெலிந்து வறண்டு போயிற்று; அவளது உதடுகளும் வறண்டு போயின. அவளது வாயில் ஈரப்பசையே இல்லை. அவளது கரங்கள் நடுங்கின; முதுகெலும்புக் குருத்துக்குள் குளிர் உணர்ச்சி குளிர்ந்து பரவியது.

(தொடர்ந்து வரும்)

---

# பால் நிலவினில் வருபவள் யாரோ...?



கிண்ணியா அமீரலி

நிலவு வந்து வானத்தையே திருடிக் கொண்டது.

தவறிப்போன ஞாபகங்களின் தடயம் தேடி. கரைக்கு வரும் அலைகளின் ஆரவார ஆராதனையை...

எழிலரங்கு மைதான நிழல்வாகை மரத்தின் கீழமர்ந்து ரசித்துக் கொண்டிருந்த எனக்கு...

கன்னி விழிகளால் காயப்படாத மாசு மாதிரி... வெள்ளையாய்க் கிடந்த அந்த மணலில் கால்கள் புதைய நடக்க வேண்டும் போல் இருந்தது.

நடந்தேன்.

யாரோ எழுதிய கவிதை ஞாபகம் வந்தது.

கல் ஒன்றை எடுத்துக் கடலில் எறிந்தேன்.

'...யாரது
குளத்தில் கல்லெறிந்தது?
உடைந்ததே நிலாமுகம்!'

வானத்து நிலவு கவிஞனின் இதயமோ? என வியந்த கவிக்கோவின் வரிகளை ஞாபகித்து நடந்தேன்.

'பாரூக் சாச்சா'வின் தென்னந் தோப்புக்குள் வந்து-

மூதூர்ப் படகொன்றின் மேலமர்ந்து கொண்டேன்.

குளிர்காற்று மெல்ல வீசியது.

இந்தப் பத்து வருடங்களுக்குள்தான் எத்தனை மாற்றங்கள்...

மாட்டு வண்டிச்சாலையிலே... இன்று மூனு சக்கரத் தேரு!

ஊர்.பரவாயில்லை...எல்லாவற்றிலும் நல்ல முன்னேற்றம்- என்னைத்தவிர!

முகிலெடுத்து முகம் துடைத்து விடியும் வரை நடைபழகும்.... பருவநிலா... இளைய நிலா...... தான் சம்பந்தப்பட்ட சகல சினிமாப் பாடல் - கவிதைகளையும் நினைவூட்டி நகர- கிராமம்-வரிசைக்கிரமமான தென்னை - பனைகளி னூடே ஒளிப்பொழிவாற்றிக் கொண்டிருந்த அன்று வந்த அதே நிலாவின் பொன்மாலைப் பொழுது இரவாகியதைக் கூட மறந்து போன போதுதான்.........

நான்- நிலா மகிழ்ச்சிகளுக்கு மட்டும் என்றதை "சந்து சதுடட்ட பமனய்...." என்று மொழிபெயர்த்துச் சிரித்த மாலதி டீச்சரின் ஞாபகம் வந்தது.

ஆஸ்பத்திரியடிச் சந்திக்கு வந்தேன்.

அஜிமலின் தேனீர்க்கடை முன்னால் சாய்ந்துகிடந்த மின்கம்பம் உஜாராய் நிமிர்ந்து நின்றாலும் 'சமந்த மாஹத்தயா'சரிந்து கிடந்த அசிங்க நாள் ஞாபகம் வந்ததே நெஞ்சிலே......

"மட்ட கவுறுத் நே, மட்ட கவுறுத் நே," (எனக்கு யாரும் இல்லை) என்று குடித்து விட்டு வந்து சமந்த மஹத்தையா விழுந்து கிடந்த பழைய நினைவை இசைக்கும் தெருக்களில் ஒன்றான அம்மன் கோயில் வீதியால் வந்து கொண்டிருந்தேன்.. முன்னால் எங்கள் முன்னாள் சிங்கள டீச்சர் போய்க்கொண்டிருந்தாள்.

'ஆயுபோவன் லமய்....'

கைகளைக் கூப்பினாள் மாலதி டீச்சர்.

பழைய ஆஸ்பத்திரி- பள்ளிக்கூடமாகியதும்... ஊரிலுள்ள சில "நோயாளி"களினால் 'வார்ட்டுப் பள்ளி' என்று பெயர்மாற்றம் செய்யப்பட்ட பாடசாலையில் ஐந்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த போதுதான் மாலதி டீச்சரும், சமந்த மஹத்தயாவும் எங்கள் ஊருக்கு மாற்றலாகி வந்தார்கள்.

'அலியா' என்றால் மாலதி டீச்சருக்கு யானை நான் தான். எனது 'நம' படும் பாடு.

பன்னிரெண்டை 'தெக்கொலஹாய்' என்று சிங்களம் பழகிய அந்தப் பன்னிரெண்டு வயது ஞாபகங்கள் இன்னும் பசுமரத்தாணிபோல்......

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது.... வெசாக் பண்டிகை நாளன்று மூக்குமுட்டக் குடித்து விட்டு வந்த சமந்த மஹத்தயா-மாலதி டீச்சருடன் சண்டை பிடித்த போது..... மூட்டைப் பூச்சி மருந்தைக் குடித்து டீச்சர் வாந்தி எடுத்து உயிர் பிழைத்தது.

சில நாட்களில் வகுப்புக்குள் வந்தமர்ந்ததும்..... "அநே...... தெய்யனே" என ஓவென ஒப்பாரி வைத்தழுவா டீச்சர்.

சுவாமி புருஷயா...... தெருவோரச் சகதிக்குள் சறுக்கிவிழுந்தாலும் அவள் அவன் மீது வைத்துள்ள காதலை ஊரறியும்.

குறிஞ்சாக்கேணிப் பாலத்தடி -'சேகு நானா'வின் இறைச்சிக்கடைக்குப் பின்னால்.. வாடகை வீடொன்றில் வசித்து வந்தாள் மாலதி டீச்சர்.

மத்திய மகா வித்தியாலயத்தில் நான் ஓ.எல். எழுதி கணக்கு பெயிலாகியதும்.... கவிஞனாகியதும்... டீச்சருக்குத் தெரியும். எங்களூருக்கு 'பொல்கஹவெல' யிலிருந்து மாலதி டீச்சர்-சமந்த மஹத்தயா 'குடி யேறி... பத்து வருடங்களுக்கும்மேல்.

போயா தினம் வந்து விட்டால் போதும்- மாலதி டீச்சர் வெள்ளைச் சேலையுடுத்தி திருக்கோணமலை பன்சலைக்குப் போய் வருவா.... ஒரு முறை என்னையும் சுபியானையும், அஸ்மியையும், ரபீக்குள்ளாவையும் கூட்டிப் போய்... பன்சலையைச் சுற்றிக் காண்பித்தா..... டீச்சர்.

நோன்புப் பெருநாள் - ஹஜ்ஜிப் பெருநாள்' தினங்களில் எங்கள் வீடுகளுக்கும் - தைப்பொங்கல் தீபாவளி - தினங்களில் பெயிண்ட் அடிக்கும் சுப்பையா பையன் வேலு வீட்டுக்கும் - வசந்த ராணி அக்கா வீட்டுக்கும் போய் வருவா டீச்சர்.

'அழுத் அவுறுது' வுக்கு நாங்கள் எல்லோரும் மாலதி டீச்சர் வீட்டில்தான்! இது எல்லாம் எனது பன்னிரெண்டு வயதில் நிகழ்ந்த மறக்க முடியாத பசுமை நிறைந்த நினைவுளே!

நான் இப்போது தலைநகரில் வாழ்கிறேன்.

பத்து வருடங்களுக்குப் பின் எனது ஊற்றடிக் கிராமத்திற்கு வந்திருக்கின்றேன். இப்பொழுது-நண்பன் கலைக்காதலன் ஸத்தாரைத் தேடி-றகுமானிய்யா வீதியால் நடந்து வந்து கொண்டிருந்த இந்த நிலா ராத்திரியில் தான் மாலதி டீச்சரின் ஞாபகம் வந்தது.

ஸத்தாரும் நானும் வைரமுத்துவின் 'இதுவரை நானை' ஒரே மூச்சில் சப்தமிட்டு வாசித்து மனனித்து மகிழ்ந்த வாவன்காடு வசந்தனின் வீட்டுக்கு முன்னால் இருக்கும் கபுறடி மைதான மணலில் வந்தமர்ந்தேன். சிகரெட் வாங்கி வந்த சின்னப் பையன் மிகுதிச்சில்லறை லஞ்சத்தோடு ஸத்தாரை கூப்பிடப் போனான்.

நேரம் இரவு ஒன்பது மணி.

திருமலை பத்மநாதன் இசையமைப்பில் 'சண்முகப்பிரியா' இயற்றி, பிரணவன் பாடிய.... 'பால்நிலவினில் வருபவள் யாரோ....... பூங்குயிலெனக் குரல் தருவாளோ......' என்ற சந்தன மேடைப்பாடல் சந்திரமோகன் குரலில் - தொகுத்து வழங்கிக் கொண்டிருந்தது எனது ஞாபக ஒலிப்பதிவு நாடா.

'இதய வானில் இன்ப நிலா அழகு பூத்ததோ......?'வும்,

'பாப்பா முகத்தில் பால்நிலவு பட்டுத் தெறிக்குது......'வும்,

ஞாபகத்தொடராய்.... வர

பால் நிலவினில் வருபவள் யாரோ......

ஓ ஸத்தார்!

'மச்சான்....!'

சிகரெட் பற்றி சிந்தித்தோம்.

அண்ணல், கஹ்ஹார் - அலி-கௌரி... ஹசன்ஜி தொடங்கி...

கஸ்புள்ளா- நஸ்புள்ளா- ரைஷ்தீன் வரை வந்தோம்.

'சசிகலா' மும்தஹீனா- ஜெனீரா, இவர்கள் எல்லோரும் இப்போது கவிதை எழுதுவதில்லையா? ' இருந்த மாதிரி வரும்...' கவிஞர்கள் வெங்காயத்தைப்பற்றிப் பேச மாட்டார்கள் தானே.

"பிறகு எப்படி ஊர் நிலமைகள்..... ஆ நம்ம மாலதி டீச்சர் இப்ப எங்கே இருக்கிறாங்க குறிஞ்சாக்கேணில தானா?"

"ஒனக்கு விசயமே தெரியாதா....?" சொன்னான்.

"சமந்தட கரைச்சல் தாங்காம மாலதி டீச்சர் குறிஞ்சாக்கேணி ஆத்து மேட்டில கன்னா மரத்துல தூக்குப் போட்டுத் தற்கொலை பண்ணிக்கிட்டா.... நான் போய்ப் பார்த்தேன்.... கண்ணெல்லாம் பிதுங்கி... நாக்கு நெஞ்சுவரைக்கும் தொங்கி..."

கண்களை மூடித்திறந்தான் ஸத்தார்.

இரத்தம் உறைந்து போயிற்று எனக்கு.

"ஏன்?"

"சமந்த இன்னொரு குட்டியோடு காதலாம்....."

"பாவம்டா மாலதி டீச்சர்."

"சமந்த மஹத்தயாவ பார்க்கணுமா...."

"ம்..."

"அதோ'

"துவன்டெப்பா.... துவன்டெப்பா.... மாலதி.... மாலதி... என்டகோ..... என்டகோ..... என்டகோ.... எபா... எபா...."

பைத்தியமாய் அலைந்து கொண்டிருந்தான் சமந்த.

"இதே மாதிரி ஒரு நிலா நேரம்தான் டீச்சர் செத்துப் போனா"

"நேரமாச்சு வா போவோம்!"

"மகே மாலதி துவன்டெப்பா..... என்டக்கோ.... எபா...எபா..."

கசிந்த விழி நீர்துளிகளில் மாலதி டீச்சர் மங்கலாய் மிதந்தாள்

"அலியா...! தெக்கொலஹாய்... நெமே.... தொலஹாய்..."



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# தாயம்மா

கௌரிபாலன்



தென்றல் தொட்டு சீராட்ட பனைகள் ஒன்றோடு ஒன்று சீண்டி விளையாட நித்தம் நித்தம் இந்த ஊடலுக்கு குறைவில்லை என்று வடலிக்காடு முரசடித்து சொன்னதால் பனங்கூடலே கலகலத்துப் போனது போலும், கவி படிக்க புளில் குருவிக்கு பனங்கூடலானது போல், காலை உன்னழிக்க தாயம்மா கிழவிக்கு வடலிக் காடானது. கிழவிக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து இன்றுவரை காலைகடனுக்காய் உதவாய் போனது பனங்கூடல்.

கூனல் விழுந்த முதுகு நிமிர்ந்த தலை குடு... குடு..நடை கிழவியை வேறு படுத்திக்காட்டும்.

இன்றல்ல நேற்றல்ல பிரச்சனை தோன்றிய காலத்திலிருந்து கிழவியின் பிரச்சனை பெரிய பிரச்சனையாய் போனது. சென்றிப் பொயின்டுகளில் கூன் விழுந்த முதுகை மேலும் கூனி நடிக்க வைக்கும், அடையாள அட்டைக்கு தீர்வுகாண கிழவிக்கும் உடன்பாடு தான், ஆனால் கிழவியால் விதானையை சந்திப்பதுதான் கஷ்டம். கிழவி சந்தையால் திரும்ப விதானை டவுனுக்குப் போயிருப்பார். கிழவிக்கு தெரியும் விதானைப் பொடியனை குற்றம் சொல்ல முடியாது என்று, இன்றைய நாட்டுப் பிரச்சனை விதானையையும் டவுனில் தங்க வைத்திருந்தது. கிழவிக்குள் ஓர் வைராக்கியம் இன்று இந்த பிரச்சனைக்கு தீர்வு காண்பதென்று.

பனங்கூடலிலிருந்து வெளிப்பட்ட கிழவியின் நடையையும் விஞ்சி நின்றது அவள் எண்ண ஓட்டம். வடலிக்குள் இருக்கும் ஆதவன் ஆதிக்கம் பனைக்கு உயரமுன் தேங்காய் சாக்கு கேணியடி சந்திக்கு வந்தாக வேண்டும். இல்லையேல் போடியார் தட்டி வேன் சந்தைக்கு கிழம்பிவிடும். இன்றைய தேங்காய் வியாபாரம் வயிற்றில்தான் கைவைக்கும். முன்போல் இன்றில்லையே. ஆதவன் ஆதிக்கம் வடலிக்குள் இருக்கையிலேயே தேங்காய் சாக்கும் வெற்றிலை போட்ட வாயுமாய் கேணியடி மதகில் வேனுக்கு காத்துகிடக்க, இன்னும் ஆதவனுக்கு சவால் விட உடம்பில் தெம்பிருந்தது. ஆனால் இன்றைய பாதுகாப்புச் சட்டம் இடந்தரவில்லை. நாலு . மணிக்கெல்லாம் ஊர்அடங்கிவிடும். காலை எட்டு மணிக்கு பின்புதான் ஊரில் தலைக்கறுப்பு காண முடியும். இன்றைய சட்டம் அப்படி. அலுத்துக்கொண்ட கிழவியை மேலும் அலுக்கவைத்தது அந்த நினைவு.

எண்ணத்தின் தடுமாற்றம் கிழவியின் கால்களையும் தாக்கி தடுமாற வைத்தது.

கிழவியைக் கண்ட விதானையாருக்கு ஆச்சரியம்! "என்னனே ஆச்சி சந்தைக்கு போகயில்லையே?" "இல்லத்தம்பி... எனக்கு ஒரு உதவி வேணும்". "என்னனே ஆச்சி". "எனக்கு அடையாள அட்டை வேணுமாம்". "அதுக்கென்ன எடுத்தால் போகுதனே, ஏனனே பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் இருக்கே..."? "பிறந்ததுக்கு அத்தாட்சியாத்தான் நான் நிக்கிறேன்". "அனே பகிடி விடாத". "என்ர ராசா ஜப்பான்காறன் குண்டு போடேக்க குடும்பிக்கார பொன்னையற்ற வண்டி பட்டறைக்க பிறந்த எனக்கு ஏது பிறப்பத்தாட்சிப் பத்திரம்". "அப்ப உனக்கு எப்படியனே நான் அடையாள அட்டை எடுத்துத்தாறது". "இதெல்லாம் இல்லாமல் தானே கமலம் எடுத்தவளாம்". "ஆரனே கமலம்". "இரட்டைக் கரத்தை கணபதியாற்ற பெண்டில்". "ஓ... உனக்கு அந்த அடையாள அட்டைதான வேணும். சரி இப்பிடி ஒரு போட்டோ எடுத்திற்று வானே". கிழவி கிளம்பிவிட்டார்.

'ஸ்ருடியோக்காறன்' கேட்ட கேள்வி கிழவியை தடுமாற வைத்தது.' 'ஏன் ஆச்சி போட்டோ? எந்த அளவில் வேணும் ஆமி ஐடன்டியோ!... இல்ல நெசனல் ஐடன்டியோ!..' கிழவிக்கு திகைப்பு. அட்டையிலயும் வகை வகையான அளவில் இருக்கோ... அட நாச்சியாரே துரவு தேங்காயும், கலைமார் தோப்பு தேங்காயும் மட்டையோட பார்த்து உள்ளே இருக்கிற தேங்காயின் அளவு சொல்லும் கிழவிக்கு போட்டோவிற்கு அளவு சொல்ல தடுமாற்றமாய் போனது. 'தம்பி' என்று அழைத்து மேசையில் இருந்த போட்டோவைக் காட்டி இந்த அளவுதான் தம்பி. போட்டோ எடுத்துத்தா கிழவி தட்டிவேன் ஏறினாள்.

வேனால் இறங்கிய கிழவி எதிர்ப்பட்ட "கோழிக்கொண்டை குஞ்சாரம்" என்று கிழவி செல்லமாய் அழைக்கும் குஞ்சரத்தை கண்டதும் "அடி பெட்ட நான் எல்லோ இண்டைக்கு அடையாள அட்டைக்கு படம் எடுத்தனான். படு பாவி தொன்னூறு ரூபாய்க்கு உல வச்சுப்போட்டான், நாசமாப் போவான் ஐந்து சதம் கூட குறைக்க மாட்டனெண்டிற்றான்" விவரமாய் சொல்ல வந்த கிழவிக்கு விரக்தியாய் போனது. ஒருவார தேங்காய் வியாபாரம் ஒரு நொடியில் ஒரு போட்டோக்காய் கைமாறிப் போனது கவலையாய்ப் போனதால், "அடி பிள்ள பேந்து வந்து விவரமாய் சொல்றன்" என்று நகர்ந்தாள்.

மூன்று நாள் முழு மூச்சாய் அலைந்து போட்டோவுடன் வந்த கிழவி விதானையை கண்டு "தம்பி இந்தாப்பு போட்டோ". படத்தை வாங்கிய விதானை அதன் பின்பக்கம் திருப்பி.. தாயம்மாக் கிழவியாகிய இவர் எனது பிரிவில் வசிப்பவர் என்றும் எனக்கு நன்கு அறிமுகமானவர் என்றும் ஆங்கிலத்தில் எழுதி றப்பர் முத்திரை இட்டு கையொப்பமிட்டு கிழவியிடம் கொடுத்தார். இரு கரங்களாலும் இரு கன்னங்களும் குழிவிழச் சிரித்து பவ்வியமாய் வாங்கினார் கிழவி. பக்கத்து வீட்டு பரமசிவம் பெஞ்சாதிற்ற வாங்கின பால்மா பக்கட் உள் உறையால் "லெமினேட்" செய்து பத்திரமாய் மடித்து நெஞ்சுச் சட்டைக்குள் வைத்த கிழவியின் "நடையோ...தனி நடைங்கோ... (என்று உரத்து கத்த வேண்டும் போல் ஓர் உணர்வு)".

# சைவக்கோழி



திருமலை சுந்தரப்பிரியா

பிரியந்திக்கு இன்று பிரியாவிடை. கடந்த மூன்று ஆண்டுகள் எங்கள் அலுவலகத்தில் வேலை பார்த்தவள் பிரியந்தி. வவுனியாவுக்கு இடமாற்றம் பெற்று போகிறாள்.

என் கண்கள் குளமாகின்றன. மூன்று ஆண்டுகள் அவளோடு பழகிய நட்பு... என்னை மீண்டும் மீண்டும் அழவைத்தே கொண்டிருந்தது.

'பிரியாவிடைக்கு வந்து விட்டு அழுது கொண்டிருந்தால்... சந்தோஷப்படுகிற நேரத்தில நீங்கள்...' என்னையும் பிரியந்தியையும் எங்கள் அலுவலகத்தில் வேலை பார்க்கும் சிவரமணன் கிண்டலாக கேட்டான்.

பதில் சொல்லும் நிலையில் நாங்கள் இல்லை.

அழுதே வடிந்து கொண்டிருந்தோம்.

'சாப்பாடு ரெடி...' அழைப்பு வந்தது.

வெளிவிறாந்தாவில் கேலி கிண்டல் அழுகையுடன் நின்ற நாம் உள் மண்டபத்திற்குள் நுழைந்தோம்.

சிவரமணன் சாப்பாடு பரிமாறுவதில் சுழன்று; சுழன்று வந்து கொண்டிருந்தான்.

எங்கள் அருகில் வந்தவன்... 'சாப்பிடுங்கள்... உங்களுக்கு ஸ்பெசலாய் சைவக்கோழி சாப்பாடு...' என்றுவிட்டு எங்களை விட்டகன்றான்.

விம்மலுடன் இருந்த நாம் சைவக்கோழி சாப்பாடு என்றவுடன் சிறிது நேரம் அப்படியே இருந்துவிட்டோம். 'அப்படியென்ன சைவக்கோழி சாப்பாடு...' எங்களிடம் இப்படியொரு கேள்வி.

எங்கள் அழுகையினை மறந்து-ஓடி, ஆடிக்கொண்டிருந்த ரமணனை பிரியந்தி அழைத்தாள்.

'ரமணன் சைவக்கோழி சாப்பாடு என்றீங்களே... அப்படியென்ன சாப்பாடு...' என்றாள்.

ரமணன் எங்களைப் பார்த்தான். "நீங்கள் இருவரும் ஒருக்கா நேற்றையமாதிரி சிரிக்க வேண்டும். எங்க சேர்ந்து சிரியுங்க பார்க்கலாம்...

அப்படி சிரித்தால்தான் இந்த சைவக்கோழி என்ன என்பதை சொல்வேன்" என்றான். மற்றவர்கள் எல்லோரும் எங்களை பார்த்து...

என்னென்னவோ பேசுவதும்; கிண்டல் அடிப் பதுவுமாக இருந்தார்கள்.

நாங்கள் இருவரும் இந்த சைவக்கோழியை அறியும் சாட்டில் கண்களால் பேசிக்கொண்டோம்.

பிறகென்ன... எப்படித்தான் எங்கள் அழுகை போனதோ?

எங்களை மறந்து வாய்விட்டே சிரித்தோம். எங்களுடன் ரமணன் மட்டுமல்ல எல்லோரும் சேர்ந்து கொண்டார்கள்.

"இப்ப சொல்லுங்க ரமணன் ...அந்த சைவக்கோழி.." நாங்கள் இருவரும் ஒரே நேரத்தில் கேட்டோம்.

ரமணன் சிரித்துவிட்டு சொன்னான்.

"இது அப்படி பெரிய விஷயம்அல்ல. போனவருடம் நான் இங்கு மாற்றலாகி வந்த போது முன்னைய அலுவலக நண்பர்கள் எனக்கு பிரியாவிடை வைக்க ஏற்பாட்டுக் கூட்டம் கூட்டியிருந்தார்கள். நானும் போயிருந்தேன்." "அப்ப....அப்ப..." நாங்கள் ரமணன் பேச்சை துரிதப்படுத்தினோம்.

"அப்பதான் இந்த சைவக்கோழி பிரச்சனை வந்தது. பிரியாவிடைக்கு சாப்பாடு கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்த போது என்ன இறைச்சி சமைப்பது என்ற கேள்வியும் எழுந்தது. எல்லோரும் ஒரே மனதாக கோழி என தீர்மானித்தோம். அப்போதுதான்... எங்கட அலுவலக நண்பர் ஒருவர் தனக்கு சைவக்கோழி சாப்பாடு தரவேண்டும்; அப்படி தராவிட்டால் தன்னால் பிரியாவிடையில் பங்குபற்ற முடியாது என்றார்.

எங்களுக்கு ஒரே குழப்பம். என்னடா இந்த சைவக்கோழி என்று... சரி அந்த சைவக்கோழி என்னவென்று கேட்டோம். அதற்கு அந்த நண்பர் இப்படி விளக்கம் தந்தார்.

முஸ்லிம் ஆக்கள் கோழியை அறுக்கும் போது தக்பீர் சொல்லி அறுக்கிறார்கள். அப்படி தக்பீர் சொல்லி அறுக்கப்பட்ட கோழி இறைச்சியையே அவர்கள் உண்பார்கள். நான் சைவம். எனக்கு இப்படியான இறைச்சி தேவையில்லை. தக்பீர் சொல்லாமல் அறுக்கப்பட்ட கோழியே வேணும். அதாவது சைவக்கோழி இறைச்சியே வேணும் என்றார்.

ரமணன் சொல்லி முடிக்கவில்லை.

அந்த மண்டபமே ஒரு முறை சிரிப்பில் மூழ்கி அதிர்ந்தது. நாங்களும் எங்களை மறந்து சிரித்தோம்.

# அவள் அப்படித்தான்

சர்மிளா இஸ்மாயில் கண்டி

"மோனிஷாவின் கல்யாண போட்டோ. பார்க்கிறீங்களா? புத்தகம் பிரித்து போட்டோவை மாலாவின் முன் நீட்டினேன்.

மௌனமாய்ப் பார்த்தாள். பின் திருப்பித்தந்தாள். முகத்தில் என்னவோ ஓர் உணர்வு. நான் அவளையே பார்த்தேன். எதுவுமே சொல்லவில்லை. புதுமை.

காரணம்? மாலாவின் குணம் அப்படி. எதிலுமே ஒரு குறை குற்றம் கண்டு பிடிப்பாள். தன்னைத்தவிர, தன் குடும்பம் தவிர உலகில் உள்ள அனைவரும் ஏதோவொரு வகையில் கீழானவர்கள் என்ற உணர்வு அவளுள். அவளுடன் பழகிய இரண்டு வருடங்களில் எனக்கு புரிந்தது. தெரிந்தது.

ஏதேனும் ஒரு குறை இருந்தாக வேண்டுமே அந்த கல்யாண போட்டோவில். மனதுக்குள்ளாக சிரித்தவாறு யோசித்தேன். மாலா என்னென்னவோ கதைத்தாள். சிரித்தாள். பகல் சாப்பாட்டுக்கு கோழி வாங்கியதிலிருந்து மகளுக்கு சொக்லட் சாப்பிட்டு பல்வலி வந்தது வரை பகட்டு தெறித்தது.

"ஆ... அன்னைக்கொரு கல்யாண வீட்டுக்கு போனேன்". திடீரென ஆரம்பித்தாள். "ம்" என்றேன். "எல்லாருமே பட்டுச்சாரி தான் கட்டியிருந்தாங்க. சீ... சகிக்கலை. நான் மட்டும்தான் ஒரு மாறுதலா இருக்கட்டுமேன்னு நோர்மல் சாரில போனேன். ஐயே... பட்டு சாரிதான் பட்டி தொட்டியெல்லாம் கட்டுதே. எனக்குப் புடிக்கல. பார்க்கவும் சகிக்கல".

"ஏன் அப்படி சொல்றீங்க? கல்யாணம்னாலே பட்டுசாரிதான் ஞாபகம் வரும். நீங்க என்னவோ புதுனமா பேசறீங்களே...!". நான் வியந்தேன். திடீரென மூளையில் மின்வெட்டியது. ஆஹா... மாலா எங்கே குத்துகிறாள் எனப் புரிந்தது. ஆமாம். மோனிஷாவின் கல்யாண போட்டோ! வரிசையாக நான் மற்றைய நண்பிகள் எல்லோருமே பட்டில் பளபளப்பாக நின்ற காட்சி மாலாவை உறுத்திவிட்டது. எனக்குள் மீண்டும் சிரிப்பு.

மோனிஷாவின் கல்யாண விருந்தில் சாப்பிடாது வந்து ஹோட்டலில் சாப்பிட்டதை அலட்சியமாய் என்னிடம் கூறியவிதம் ஞாபகம் வந்தது. தெரிந்தால் மோனிஷா மனது வருத்தப்படுமே என்றுகூட அவள் எண்ணவில்லை. என்னைவிட ஏழெட்டு வயது கூட மாலாவுக்கு. எப்படித்தான் இவளோடு நட்பு கொண்டேனோ என மனம் அடிக்கடி எண்ணும். என்னைக்கூட வார்த்தைகளால் பலமுறை மட்டம் தட்டியுள்ளாள். ஆனாலும் என்னால் அவளை துண்டித்துவிட முடியவில்லை.



நான் கடமையாற்றும் பாடசாலையில் அவள் தொண்டர் ஆசிரியை.

"என்ன இது? வெடிங் கார்டா?" மேசையோரம் இருந்த கார்டை பிரித்தாள். படித்தாள். "ரொம்ப சிம்பிளா அடிச்சிருக்காங்க. கொஞ்சம் அழகா பிரின்ட் பண்ணியிருக்கக் கூடாதா? நல்ல பணக்காரங்களாச்சே." எனக்கும் மாலாவுக்கும் தெரிந்தவர் வீட்டு திருமண அழைப்பிதழ். நன்றாகத்தான் இருந்தது. ஆனாலும் இது மாலாவாச்சே! குறை காணாமல் முடியுமா? தொடர்ந்தாள் "லவ் மேரேஜ் இல்லியா? ம்... லவ்வாம் லவ். அந்தக் காலத்துல நாங்களும்தான் காதலிச்சோம். இப்படியா? பண்ணாத கூத்தெல்லாம் பண்ணிட்டு. சுத்தாத இடமெல்லாம் சுத்திட்டு... ம்ஹீம் கடைசியில கல்யாணம். ஒருத்தர் மேல ஒருத்தர் விரல்கூட படாத காதல் எங்களது. இந்தக்காலம் ரொம்ப மோசம். இந்தா-இந்த கல்யாணம் பண்ணப்போற ரெண்டுபேரும் சுத்தாத இடமில்ல. ஆடாத ஆட்டமில்ல... ச்சீய்..." கழுத்தை வெட்டிக்கொண்டாள். அவர்கள் அவளது வீட்டிற்கு அருகில் வசிப்பவர்கள். மாலா சொல்லுமளவு எதுவும் நிகழவில்லை. கட்டுப்பாடாக இருந்தார்கள் என்று எனக்குத் தெரியும். ஆனாலும் இது மாலாவாச்சே! குறைவேண்டுமல்லவா? மீண்டும் மனதுள் சிரிப்பலைகள். எவ்வளவு நேரம் அறுத்துவிட்டாள். புறப்பட மாட்மாட்டாளா? எழுந்து கொண்டாள். சந்தோஷித்தேன்.

மிகவும் பருத்த உடலுக்குப் பொருந்தா வகையில் குட்டைப் பாவாடையும் ஒட்டிய டீ-சேர்ட்டும்! அழகாய் ஒரு சாரிகட்டியிருக்கலாம். இத்தனை குறை கண்டு பிடிப்பவளுக்கு இந்தக் குறை தெரியவில்லையா. போய்விட்டதும் அலை அடித்து ஓய்ந்த உணர்வு எனக்குள்.

"நான் மாலாவின் சித்தியின் மகள்" அறிமுகப்படுத்திக் கொண்டவளைப் பார்த்துச் சிரித்தேன். "என்னை எப்படி தெரியும்?" கேட்டேன். "மாலாவிடம் நீங்களும் அடிக்கடி ஒரே பஸ்ஸில் போறதக் கண்டிருக்கேன். உங்களோட பேசணும்னு ஒரே ஆவல் எனக்கு." அவள் தொடர எனக்குள் வியப்பு. "ஏன்" என்றேன். சிரித்தாள். "எப்படி நீங்க மட்டும் மாலாவோட இரண்டு வருஷமா ப்ரெண்ட்ஷிப் வெச்சுருக்கீங்க? எப்படி முடிஞ்சது? அடிக்கடி வார்த்தைகளால் மனசை நோகடிக்கறகுணம் அவளோடது. மத்தவங்கள மட்டம் தட்டி குறை சொல்லாட்டி அவளுக்கு தலை வெடிச்சிடுமே? எப்படி பொறுத்துக்கிறீங்க?" சிரித்தேன். இன்னும் சினேகிதமானாள். நிறைய கதைத்தாள். மாலாவின் மறுபுறம் தெரிவித்தாள். அதிர்ந்தேன்.

பாடசாலை போகும் பருவத்தே ஒருவனைக் காதலித்து; உலகமெலாம் சுற்றி: குடும்பத்தினர் எதிர்க்க எதிர்க்க இஷ்டப்படி மணமுடித்து; ஒழுங்காக படிக்காததால் உயர்ந்த மதிப்பும் பெற முடியாது மனம் விரக்தியுற்று; கணவனின் குடுப்பத்தார் ஏற்றுக் கொள்ளாததால்வேறு மிக மனக்கிலேசம் கொண்டு; தனிக் குடித்தனம் போக வசதியில்லை. வீட்டிலிருக்கவும் இஷ்டமில்லை. இரண்டுங்கெட்டான் வாழ்க்கை. அதுதான் மற்றவர் மீது ஒரே எரிச்சல். வெறுப்பு செயல் ரீதியில் இல்லாவிட்டாலும் வார்த்தைகளாலாவது மற்றவரை விட உயர்ந்து காணப்படுவதாய் ஒரு தோற்றத்தை தனக்குத்தானே உருவாக்கிக் கொள்ள முயன்றதின் பலன்தான் இந்த குறை கூறும் படலம். இப்போது என்னால் சிரிக்க முடியவில்லை.

"ஸ்கூல் போற நேரம் நான்தான் படிப்பில் கெட்டி எல்லா பாடமும் பாஸ். அப்பா தான் கெம்பஸ் போக விடமாட்டேன்டார். விளையாட்டும் செய்வேன். கெம்பஸ் கெப்டன் நான் தான். இப்ப கூட நான் படிப்பிக்க போறதில ஹஸ்பன்டுக்கு விருப்பமில்ல. நான் தான் வீட்ல சும்மா...." மாலா வழமை போல் பெசிக் கொண்டிருந்தாள்.

# அவனுயிர்

எப். லெனாட்குமார்

பஸ்ஸில் சனக்கூட்டம் நிரம்பி வழிந்தது.

அவனது அன்புப் பிடிக்குள் நான் அகப்பட்டு தவித்துக் கொண்டிருந்தேன். அவன் கைகள் செய்த சில்மிசங்களால் எனக்கு வியர்த்துக்கொட்டியது.

அவன் விரல்கள் என் உடம்பெல்லாம் கோடுபோட எனக்கு சொர்க்கத்தில் மிதப்பதைப் போன்றதோர் உணர்வு வந்தது.

நான் அவனுயிர்க் காதலி. அவனது 18வது வயதில் அவனோடு இணைந்தவள். இப்போது அவனுக்கு 23 வயதாகிறது.

அவன் என் மேல் உயிரையே



வைத்திருப்பதில் எனக்குள் ஏகப்பட்ட சந்தோசம். இதுவரையும் அவன் எனக்கு எந்தக் குறையும் வைத்ததில்லை.

தனக்குள் அவன் என்னைப்பற்றி இப்படி சொல்லி மகிழ்வான்:

"என் அன்பே... எனக்கு பணம் இல்லாமலிருக்கலாம். சொந்தபந்தம் இல்லாமலிருக்கலாம்...உண்ண உணவு இல்லாமலிருக்கலாம்... இந்த உலகமே என்னை வெறுக்கலாம்... ஆனால் என்னுயிர் அன்பே... நீமட்டும் எனக்கு வேண்டும். ஏனெனில் நீ இல்லாமல் என்னால் நிம்மதியாக வாழ முடியாது. நீ என்னை விட்டுச் சென்றால் என்னுயிர் காற்றில் பறக்கும் ..." என்று.

அவன் என்மேல் இவ்வளவு அன்பு வைத்துள்ளானே என்று தனிமையில் நான் கூட வியந்ததுண்டு.

நாங்கள் பயணம் செய்யும் பஸ் மருதானை சந்திக்கு வர பலர் ஏற சிலர் இறங்கிக் கொண்டார்கள்.

அதனால் அவனுக்கு இன்னும் வசதியாயிருந்திருக்க வேண்டும். மீண்டும் ஒரு முறை என்னைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

அதற்கிடையில் பஸ் கோட்டைப் புகையிரத பாதைக்கு முன்னால் உள்ள "செக் பொயின்ற்"றில் நிறுத்தப்பட்டதும் அவனுக்கு லேசாக வியர்த்ததைப் பார்க்க எனக்கு சிரிப்பு வந்தது.

நான் அவனருகில் இருக்கும்போது பயமெதற்கு? மனதுக்குள் தைரியம் சொல்லிக் கொண்டேன்.

"ம்...ம்... பயின்ட பயின்ட... தம தமன்கே...எதுனும்பத் பென்னன்ன...?" ஆமி சிப்பாய் தனக்கே உரிய அதிகாரத்தில் கூறிவிட்டு பஸ்ஸை சோதனையிடத் தொடங்கினான்.

என்னுயிர் காதலனான ராமசாமி சுரேஸ் என்ற முழுப்பெயர் கொண்ட சுரேஸ் என்னைத்தூக்கி சிப்பாயிடம் நீட்ட அவன் வாங்கி என்னைப் பார்த்தவிட்டு

"ம்...யன்ன...யன்ன..." என்கிறான்.

அவனுக்குள் ஏகப்பட்ட சந்தோசம் அவனுயிர் காதலியாக அடையாள அட்டையாகிய நானிருப்பது.




படிப்பகம்

# இலக்கிய நயம்

## மானல்ல மயிலுமல்ல!

### தருவது ரசிகன்





எண்ணி ஏழாவது நாள் கோட்டை முற்றுகையில் வீழ்ந்தது. வெற்றி வசப்பட்டது.

தளபதி பூரித்துப் போனான். கோட்டையைச் சுற்றி வீரர்கள் பின் தொடரப் பார்வையிட்டான்.

கோட்டையின் வலதுபுற மூலையில் இருந்து ஒரு விசும்பல் சத்தம் செவியில் விழுந்தது. தளபதி அத்திசை சென்றான்.

அறைக்கதவு திறந்தே இருந்தது. சீனத்துப் பட்டில் செய்த திரை அசைந்து கொண்டிருந்தது.

"யாரது உள்ளே?"

பதிலே இல்லை. விசும்பல் மட்டும் வெளியே வந்தது.

தளபதி உருவிய வாளோடு உள்ளே பிரவேசித்தான். தரையில் அமர்ந்து, முழங்கால்களை மடக்கி, முழங்கால்கள் மத்தியிலே முகம் கவிழ்த்து அழுது கொண்டிருந்தவள் நிமிரவேயில்லை.

தளபதி அறையைச் சுற்றிப் பார்வையை வீசினான். அவள் மட்டும் தான் இருக்கிறாள்.

உருவியவாளை இடையிலே தொங்கிய உறையிலே போட்டான். "யார் நீ?" என்றான்.

கவிழ்ந்திருந்த முகம் உயர்ந்தபோது தளபதியின் மனசுக்குள் மின்னலடித்தது.

விழிகள் சொரிந்த நீரில் முகம் நனைந்திருந்தது.

தளபதிக்கோ, தாமரை ஒன்று தண்ணீரில் நீராடியது போல் அவள் முகம் தெரிந்தது.

கண்டிப்பான குரலில் கேள்வி வீசியவன், கள்ளுக்குள் விழுந்த வண்டாகிப் போனான்.

அவள் தரையிலிருந்து மெல்ல எழுந்து கொண்டாள்.

எந்தச் சொர்க்கத்தில் இருந்து இந்தப் பூ பூமிக்கு வந்தது?!

வானத்து மார்பில் வட்டமிடும் நிலவை பெயர்த்தெடுத்து பூமியில் எறிந்தது யார்?!

தரைக்கு வந்த தளிர்நிலா, எந்தக் குளத்தில் நீரெடுக்க இரண்டு தங்கக் குடங்களை தன் நெஞ்சில் திரை போட்டு மூடி வைத்திருக்கிறது?!

தளபதி வியப்பின் உச்சியில் பேச நா எழாமல், மனதில் மட்டும் 'பா' இசைத்தான்.

அவள் கை கூப்பினாள். கண்களில் சொரிந்த நீர் கூப்பிய கைகளில் கோலம் போட்டது.

நாவால் உதடுகளை ஈரமாக்கிக் கொண்டு, ஒவ்வொரு வார்த்தையாய் தேடியெடுத்து: "யா.....யார் நீ?" என்றான் மீண்டும். குரலில் மட்டும் முன்பிருந்த கண்டிப்பு துளியுமில்லை.

"நான் ஒரு அநாதை! இளவரசிக்கு தோழியாக இருந்தேன். தப்பி ஓடும்போது என்னை தரையில் எறிந்துவிட்டுப் போய்விட்டார்கள்."

வெளியே பெண்கள் சிலர் கூச்சல் போடும் சத்தம் கேட்டது. வெற்றியைக் கொண்டாட சிற்றிடைப் பெண்களைத் தேடிக்கொண்டிருந்தார்கள் தளபதியின் வீரர்கள். அவள் விழிகளிலும் மிரட்சி தெரிந்தது.

"பயப்படாதே. நான்தான் தளபதி. என் வீரர்கள் எல்லை மீறுவார்கள். என்னை மீறமாட்டார்கள். உன் பெயரென்ன?"

"பூவழகி!"

"பொருத்தமான பெயர்!"

தளபதிக்கு மது அருந்தாமலேயே போதை ஏறியது.

"புறப்படு!"

"எங்கே?"

"இந்தப் பூ எங்கே இருக்க வேண்டுமோ அங்கே! தடாகத்தில் இருந்தால்தானே தாமரைக்கு அழகு! வானத்தில் இருந்தால் தானே வண்ண நிலவுக்கு அழகு! இசைக்கப்பட்டால்தானே பாட்டுக்கு அழகு! இரசிக்கப்பட்டால்தான் அழகுக்கு அழகு! வா! போகலாம்!"

***

பூவழகி மாறிவிட்டாள். தளபதிக்கு பூவழகி தினமும் பூஜை அழகியானாள்.

"மண் பிடிக்க வந்தீர்கள், பெண் பிடித்துக் கொண்டீர்கள். தினமும் சுகப் பண் படிக்க வேண்டும் என்று அடம் பிடிக்கிறீர்கள்."

"என் கண் பிடித்த அழகிகளில் நீ மட்டுமே பேரழகி. விண் பிடித்த நிலவுகூட பகலினிலே விடுபடலாம். பொன் சுமக்கும் உன் மேனி என் பிடியில் தவறாது கணப்பொழுதும்!"

"சுகத்தீயில் தினமும் குளிர் காய்ந்தால், ஜெகம் முழுதும் கைப்பற்றும் கனவன்றோ கை தவறும்!"

"பார் முழுதும் போர் செய்தால் வெற்றிக் கனி கையில் விழும். ஆனால், ஜெகம் முழுதும் தேடினாலும் உன்னைப்போல் சுகம் கொடுக்கும் இன்பக் கனி எட்டாதே!"

தளபதி உளறினான். பூவழகியை தன்மீது வாங்கித் தழுவினான்.

"பூவழகி! தேசப்போர் பெரிதா? தேகப்போர் பெரிதா?"

"நீங்களே சொல்லுங்கள். இரண்டிலும் வல்லவர் நீங்கள்தானே!"

தளபதி அவள் கழுத்தில் உதடுகளை நழுவ விட்டான். தோளில் வந்து விழுந்த உதடுகளைத் திறந்து பேசினான்.

"தேசப் போரில் நாசம் வரும். தேகப் போரில் சித்தத்தில் வாசம் வரும்!"

"நாசம் வரும் போரை ஏன் நடத்த வந்தீர்கள்?"

"ஆசை யாரை விட்டது சொல்லு. செழித்துக் கிடந்த உங்கள் நாடு எங்கள் மனதில் ஆசையை விதைத்து விட்டது. பாராண்ட மன்னன் என்று பெயரெடுக்க என் மன்னனுக்கும் ஆசை வந்தது. வந்தோம். வென்றோம். வந்த இடத்தில் கண்டதையெல்லாம் கொள்ளை கொண்டோம்!"

"கொள்ளையிட்டீர்கள். கொலை பல செய்தீர்கள். பெண்களை ஏன் சூறையிட்டீர்கள்?"

"கொய்யத்தானே பூக்கள். சூட்டத்தானே மலர்கள். நெய்யத்தானே நெசவு. கூடிக் கலக்கத்தானே இரவு. நாடு பிடிக்கும் போரில் வீரர்களுக்கு தேவைதானே இன்ப வரவு!"

"கொடுமையல்லவா?"

"கொடுமையுமல்ல, புதுமையுமல்ல; நாடு பிடிக்கும் வேட்டையில் சிங்கங்கள் சிக்கினால் கொன்று விடுகிறோம். மான்கள் சிக்கினால் பிடித்து நம்மோடு வைத்துக் கொள்கிறோம்!"

"பெண்கள் என்றால் அத்தனை இளக்காரமா?"

"இளக்காரமல்ல, இளகிய மனம் எங்களுக்கு. பூக்களை நசிப்பானேன், இரசிப்போமே என்று நினைத்து விடுகிறோம். மான்களை கொல்வானேன், கொள்வோமே என்று முடிவு செய்கிறோம்."

"மான்களில் கவரிமான்களும் உண்டு; தெரியுமா தளபதி?"

"அப்படி ஒரு பொய்யைக் கேள்விப் பட்டிருக்கிறேன். நேரில் கண்டதில்லை. அதெல்லாம் இருக்கட்டும் பூவழகி, இன்று ஏன் இத்தனை கேள்வி; அதனால் தடைப்பட்டு நின்று விட்டதே தேக வேள்வி. நீயாட, நானாட, நினைவெல்லாம் தணலாக, உன் நெஞ்சமே மேடையாக..."

இடைமறித்துச் சொன்னாள் பூவழகி, "தளபதி, இப்போது நான் மட்டும்தான் ஆடப்போகிறேன்."

"அப்படியா? ஆட்டத்தில் புதுமையா?"

"புதுமையல்ல தளபதி, எல்லை மீறிய பொறுமை! பெண் என்றால் வெறும் பூவல்ல. விருந்துக்கு பலியாகும் மானுமல்ல. ஆட மட்டும் தெரிந்த மயிலுமல்ல; பலத்திற்கு முன்னாலே பணிகின்ற நாணலல்ல; பெண்ணும் புயலாவாள், குமுறுகின்ற கடலாவாள், பூமியைப் புரட்டுகின்ற பூகம்பமாவாள்."

பூவழகி சேலைக்குள் மறைந்திருந்த குறுவாளை கையில் எடுத்தாள்.

"பூ..பூ... பூவழகி விளையாடாதே! நம்பியிருந்தேன் நான் உன்னை!"

நம்பவேண்டும் என்று நடித்தேன். தளபதி! நீ ஒரு முட்டாள்!

"நானோ முட்டாள். பெண் என்றதால் ஏமாந்தேன்! அழுதாய். இரக்கப்பட்டேன்."

**"அதுதான் முட்டாள் என்கிறேன். பகைவர் தொழுத கையின் உள்ளும் கொலைக் கருவியிருக்கும். சொரியும் கண்ணீரும் அப்படித்தானிருக்கும் என்பதை மறந்து போனாய். இப்போது மடிந்து போகப் போகிறாய்?"**

குறுவாள் தளபதியின் நெஞ்சில் பாய்ந்தது.

உயிர் பிரிந்து கொண்டிருந்தபோது, தளபதிக்கு திருக்குறளில் ஒரு பாடல் மட்டும் இறுதியாக நினைவிலடித்தது.

**"தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்**
**அழுதகண் ணீரும் அனைத்து."**

பாடல்-828. அதிகாரம்-83

## குறுக்கெழுத்துப் போட்டி இல—123

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | ■ | 3 | | | 4 |
| 5 | | | | ■ | ■ | |
| | ■ | 6 | | 7 | | |
| 8 | | | | | | ■ |
| | ■ | ■ | ■ | | ■ | 9 |
| ■ | 10 | | | | | ■ |
| 11 | | ■ | 12 | | | |

### இடமிருந்து வலம்

03. மாதத்தில் ஒரு நாள் வானில் தோன்றும்.
05. அறிவுக்கு ஆதாரமான நூல்கள் இதற்கு அருமையான ஆகாரம்.
06. நமது இல்லத்து மண்டபத்தை அலங்கரிக்க உதவுவது.
08. ஆசிரியருக்கும் மாணவருக்கும் பொதுவாக உதவும் பொருள்.
10. நடிகர்கள் இதன் மூலம் தங்கள் முகங்களை அழகுபடுத்துவார்கள்.
11. சிலை வடிப்பதும் ஒரு இதுதான்.
12. கானகத்துக்கு அரசன்.

### மேலிருந்து கீழ்

01. திராவிடர் மிகத் தொன்மையான காலத்தில் இதன் உச்சியில் இருந்ததாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன.
02. குற்றம் செய்தால் கிடைப்பது.
04. எதிலும் இதுவாக இருக்கும் ஒருவரை எதுவும் அசைக்க முடியாது.
07. தீபாவளியைக் கொண்டாட வகைவகையான சுவைதரும் இவற்றை வீட்டில் தயாரிப்பார்கள்.
09. ஐம்பெரும் பூதங்களில் ஒன்று.
10. சில காலங்களுக்கு முன்னர் சில எழுத்தாளர்கள் வடித்த கதைகள்-புதிய இதுவாக வர்ணிக்கப்பட்டன.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 28.10.1995இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-123
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-121ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 தே | ர் | த | ல் | ■ | 2 ந | 3 கை |
| ங் | ■ | 4 வி | ழ | ல் | ■ | யூ |
| கா | 5 த | ■ | ■ | 6 க | ர | ட் |
| ய் | ந் | ■ | 7 சு | ரு | ட் | டு |
| ■ | 8 தி | ரா | வ | க | ம் | ■ |
| 9 சா | ர | ண | ர் | ■ | ■ | 10 ப |
| டி | ம் | ■ | ■ | 11 வி | ன் | னி |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 121இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. கே. வேணுகோபால், பண்டாரவளை.
2. ஆர். விஜயராணி, வவுனியா.
3. எம். பைஸ், திக்வெல்ல.
4. செல்வி. என். மர்ழியா, புத்தளம்.
5. பி. யோகச்சந்திரன், நாரகேன்பிட்டி.
6. திருமதி. எச். தேவகி, நாவலப்பிட்டி.
7. எவ். நூருல் பாத்திமா, கிண்ணியா.
8. எம். சவ்ராஸ், வாழைச்சேனை-05.
9. ஆர். செல்வரத்தினம், கல்லடி.
10. செல்வி. ஆர். ஜீவா, தெகிவளை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

# சிந்தியா பதில்கள்

**பிரேமானந்தா போல சந்திராசுவாமியும் மாட்டிக் கொள்ளுவாரோ?**

எம்.சிவபாலன், கண்டி

*பிரேமானந்தா மாநில அளவாடு நின்று கொண்டவர்; சந்திராசுவாமி சர்வதேச அளவில் கரங்களை விரித்தவர், அதிகாரபலம், பணபலம், ஆட்பலம் என்று கணக்குப் பார்த்தால் பிரேமானந்தா துரும்பு. சந்திராசுவாமி இரும்பு. சுலபத்தில் முறிக்க முடியாது.*

▫▫

**பெண் பாவம் பொல்லாதது என்கிறார்களே, இது உண்மையா?**

எஸ். விஜயன், அக்கரைப்பற்று-07.

*யார் பாவமும் பொல்லாததுதான். ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளுக்கு ஒப்பாகும் என்று கேள்விப்பட்டதில்லையா நீங்கள்?*

▫▫

**டியர் சிந்தியா! இன்பத்தின் பிறப்பிடம் எங்கே?**

தாஹா பயறுாஸ், அக்கரைப்பற்று

*துன்பத்தை தூசாய் உதறுவதில்.*

▫▫

**விட்டு விட்டுக் காதல் செய்தால் என்ன அர்த்தம்?**

ஆர்.எ.ப்.ரூமி, மருதானை

*ஓடி ஓடிக் காதலித்துக்கொண்டிருக்கிறீர்கள். ஓடிய களைப்புத்தீர ஓய்வெடுக்கிறீர்கள். ஆனாலும் ஒரு தலைக் காதல். (இருதலைக் காதல் என்றால் களைப்பே தெரியாதே!)*

▫▫

**ரஜனிகாந்த் இப்போது என்ன செய்து கொண்டு இருக்கிறார்?**

வி.தயாளினி, ஹட்டன்.

*ஹைதராபாத்தில் தனிமையில் அமைதியாக இருக்கிறார்.*

**'இடி மின்னல்' நடவடிக்கைக்கு பின்னர் புலிகள் என்ன செல்கிறார்கள்?**

எஸ். என். அகமட், கல்முனை

*இன்னமும் பதில் சொல்ல ஆரம்பிக்கவில்லை.*

▫▫

**எல்லா இயக்கங்களும் ஒன்றுசேர்ந்து இனப்பிரச்சனைக்கு தீர்வு கண்டால் என்ன?**

சொ.மதிவாணன், லுணுகலை

*இனப்பிரச்சனைக்கு தீர்வு கண்டால் கூட ஆச்சரியமில்லை, இயக்கங்களின் பிரச்சனைக்கு தீர்வு காணப்பட்டால் அதுதான் உலக அதிசயம்.*

▫▫

**இந்த ஆண்டில் நடந்த மிகச் சுவாரசியமான அரசியல் ஜோக் எது?**

எஸ். கிருஷ்ணன், மாணிக்கமடு

*தீர்வு யோசனையை ஆராய்ந்து பார்த்த மூத்த பெரும் தலைவர் ஒருவர், அதற்குள் சமஷ்டி இருப்பதாக-தான் மட்டும் சிரிக்காமல் சொன்ன ஜோக்.*

▫▫

**வாழ்க்கையில் சாதிக்க முடியாதது எது?**

ஏ.எஸ்.எம்.அனீஸ், கிண்ணியா-03

*மரணத்தை வெல்வது.*

▫▫

**இலங்கை கிரிக்கெட் அணி தொடர்ந்து சாதனைகள் படைக்குமா சிந்தியா?**

ஏ.பரமேஸ்வரன், செங்கலடி.

*மேற்கிந்தியத் தீவு அணிக்கு எதிராக சார்ஜாவில் ஆடிய ஆட்டம் தன்னம்பிக்கையின் அடையாளம். அணி முழுவதுமே போராடும் உறுதியோடு இருப்பது என்பது ஒரு சாதனைதான், 333 ஓட்டங்களை மேற்கிந்திய தீவு குவித்துவைத்திருக்க, அதை எட்ட முடியுமா என்று பார்வையாளர்கள் மலைத்திருக்க, புகுந்து தூள்கிளப்பி வெற்றியின் விளிம்புவரை இலங்கை அணி சென்றது நிச்சயமாக ஒரு சாதனைதான், இந்த தன்னம்பிக்கை தொடருமானால் சாதனைப்பட்டியல் நீளும்.*

▫▫

**பொட்டம்மானை விலக்கி விட்டார்களாமே உண்மையா?**

என்.தனேஷ்குமார், சுவிற்ஸர்லாந்து

*பொறுங்கள்! நாரதரைக் கேட்டுச் சொல்லுகிறேன்..... அடுத்தவார எக்ஸ்ரே ரிப்போட்டில் சரியான தகவல்களை தரப் போகிறாராம்.*

▫▫

**கிழக்கு மாகாணத்தில் சற்று அமைதி நிலவுகிறதே, நீடிக்குமா?**

மா.பிரபாஷ், களுவாஞ்சிக்குடி.

*புயலுக்கு முன்னரும் அமைதி நிலவும் தானே பிரகாஷ்!*

▫▫

**எம்.ஜி.ஆர்., என்.டி.ஆர் வேறுபாடு என்ன?**

கா.தாரிணி, திருக்கோணமலை

*"நான் ஒருமுறை முதலமைச்சரானால் இறக்கும்வரை முதலமைச்சர்தான்" என்று சொல்லாமல் சொன்னவர் எம்.ஜி.ஆர். ஒரு முறை முதலமைச்சரானால் மறுமுறை எதிர்க்கட்சித் தலைவராக மாறும் ராசி என்.டி.ஆருக்கு.*

**இராமாயணப் போட்டி இல-1**

சரியான விடை:

இருசியசிருங்கர் அல்லது கலைக்கோட்டு மாமுனிவர்.

இலக்கிய நூல்கள் பரிசாகப் பெறும் அதிஷ்டசாலிகள்:

1. **ஆர். சுரேஸ்குமார்,** டபிள்யூ.ஏ.சில்வா மாவத்தை, கொழும்பு-6.
2. **முகமட் பாசில்,** பிரதான வீதி, தலவாக்கலை.
3. **எஸ்.கே.ரஜினி,** தெமட்டகொட, கொழும்பு-09.
4. **லொரேன்சியா,** வட்டக்களி-சிலாபம்.
5. **ஏ.ஆன் லூசியா,** உடையார் வீதி, கல்முனை-02.

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 3

## தேவர்கள் அளித்த தெய்வீகப் பிரசாதம்

### அயோத்தி மாநகரில் அருள்மாமுனிவன்

அயோத்தி மாநகரம் விழாக்கோலம் பூண்டு காணப்பட்டது. வீதிகளெல்லாம் கழுவிச் சுத்தம் செய்யப்பட்டு அலங்கார வளைவுகள், மகர தோரணங்கள் ஆங்காங்கே கட்டப்பட்டன. அந்நகர மக்களும் தங்களை வண்ணப்பட்டாடைகளால் அலங்கரித்து பல்வகை நகைகளை அணிந்து புன்னகையுடன் பூரித்து நின்றனர். வண்ண வண்ண மலர்கள் நிரம்பிய வெள்ளித்தட்டங்களை ஏந்தி நின்றனர். தங்கள் நகருக்கு வருகைதரும் தவசிரேட்டரான இள முனிவரை வரவேற்க வீதிகளின் இரு மருங்கிலும் மக்கள் திரண்டு நின்றனர்.

இரு நாட்களுக்கு முன்னர் கோசல நாட்டின் எல்லையிலேயே மந்திரிப் பிரதாணிகள் வந்து காத்து நின்றனர். அங்கநாட்டிலிருந்து புறப்பட்ட இருசிய சிருங்கரையும் அவருடைய தர்ம பத்தினி சாந்தையையும் உடன் வரும் முனிவர்களையும் நகருக்கு அழைத்துவர சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. மன்னர் மன்னன் தசரதன் தன் குலகுருவான வசிட்ட மாமுனிவருடன் பல தடவைகள் கலந்தாலோசனை செய்து, கலைக்கோட்டு மாமுனிவரை வரவேற்பதற்கான ஏற்பாடுகளை எத்தகைய குறையுமின்றி செய்து வைத்திருந்தார்.

பிறநாட்டு அரசர்களை வரவேற்பதானால் அதற்கென்றொரு முறையுண்டு. பிரமுகர்களானால் அவர்களை வரவேற்கப் பிறிதொரு முறையுண்டு. முனிபுங்கவர்களை வரவேற்பதானால் அதற்கெனச் சிறப்பான வழிமுறைகளுண்டு. இதில் ஆடம்பரமான ஆடல் பாடல்கள் இடம் பெறலாகாது. பக்திப்பரவசத்துடன் கூடிய வரவேற்பாக இது அமைய வேண்டும். ஆகவே நாட்டின் எல்லையிலேயே வாழை, கமுகு, மற்றும் மாவிலைத் தோரணங்கள் காட்சி அளித்தன. நாட்டிலுள்ள தவசிகள், அந்தணர்கள், அறிவாளிகள் ஆகியோர், முனிவரை வரவேற்கத்திரண்டிருந்த கூட்டத்தில் அமைச்சர்களுடன் காணப்பட்டனர்.

இருசியசிருங்கர் எல்லைப்புறத்தை வந்தடைந்ததும் சங்குகள் முழங்கின; சேகண்டிகளினதும் மணிகளினதும் ஓங்கார ஓசை எழுந்து எங்கும் எதிரொலித்தன. அந்தணர்களுடைய வேத பாராயணம் உரிய உயரிய உச்சரிப்புடன் எழுந்து சகல ஒலிகளும் ஒன்றிணைந்து அந்தப் பிரதேசத்தில் பக்தி வெள்ளம் பெருக்கெடுப்பது போன்ற உணர்வினை ஏற்படுத்தியது. அகிற் புகையும் எங்கும் பரவியது.

வசிட்ட மாமுனிவரின் பிரதான சீடரான ஒரு முதிய முனிவர் பூரண கும்பத்துடன், இரதத்திலிருந்து இறங்கிய இருசியசிருங்க முனிவரை வரவேற்றார். முனிவருடன் அவருடைய தர்ம பத்தினியும் வந்தமையினால் சில ரிஷி பத்தினிகளும் சாந்தையை முறைப்படி வரவேற்றனர்.

முனிவர் நாட்டின் எல்லைக்கு வந்துவிட்ட செய்தியை ஓர் இளைய வீரன் மன்னனுக்கு அறிவிப்பதற்காக ஓர் அழகிய குதிரையின்மீதேறிப் புறப்பட்டான். இந்த இளைஞன் வேறு யாருமல்ல; அருணன் கோவிலில் அன்று நடைபெற்ற உதயகாலப் பூசையின்போது மன்னர் தசரதருக்குக் காவலாக நிற்பதற்காக காலையிலேயே புறப்பட்டுச் சென்றானே! அதே வீரன்தான். உபேந்திரன் என்பது தான் அவனுடைய பெயர். இளமையும் அழகும் வீரமும் வீரியமும் வீறும் கொண்ட காளை அவன். கொற்றவன் இட்ட கட்டளைதன்னை குறை வேதுமின்றி திட்டமிட்டே நிறைவேற்றி முடிப்பவன்.

***வால்மீகியோ கம்பனோ கூறிய இராமகாதையில் உபேந்திரனை எவரும் தேடிக் கண்டுபிடிக்க முடியாது. நாம் கூறும் கதையில் அடிக்கடி தலை காட்டவிருக்கும் உபேந்திரனை வாசகர்கள் நினைவில் வைத்துக்கொள்வது நல்லது.***

கலைக்கோட்டு முனிவரும் அவருடன் வந்த ஏனையோரும் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருந்த விடுதியில் ஓய்வெடுத்து சிரமபரிகாரம் செய்தபின்னர்; அடுத்த நாள் அதிகாலை உதயத்தின் பின்னர் இரு நாழிகைகள் கழித்து அயோத்தி மாநகர வாயிலை அடைந்தனர்.

அயோத்தி தலைநகரமல்லவா? இந்திரனின் அமராவதி நகரைவிட அழகிலும் வசதிகளிலும் சிறந்து விளங்கும் நகரம் என்று போற்றப்படுவதல்லவா? அது மட்டுமல்லாமல் திருமாலே மாநிட அவதாரமாக வந்துதித்து வளர்வதற்குத் தேர்ந்தெடுத்த நகரமல்லவா? ஆகவே அந்நகரம் விழாக் கோலம் பூண்டு, கலைக்கோட்டு முனிவரை வரவேற்க ஆயத்தமாகி இருக்கிறதென்றால் அதனை வர்ணிக்க வார்த்தைக்கு எங்கே போவது?

பொழுது புலர்வதற்கு முன்னரே உபேந்திரனுடைய குதிரை அரண்மனை வாயிலை அடைந்துவிட்டது. இள வயதினனாயினும் அவனுடைய அறிவுக் கூர்மையும் வீரப்பொலிவும் கடமை உணர்வும் மன்னரின் மெய்காப்பாளர் அணிக்கு அவனைத் தலைமை ஏற்க வைத்துவிட்டன. அரண்மனையில் அவன் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். எந்தக் காவலனும் எந்தப் பொழுதிலும் தடை செய்ய முடியாது. மன்னர் எப்போது எங்கிருப்பார் என்று முன்கூட்டியே அறிந்து வைத்திருப்பான் உபேந்திரன்.

பனிபடர்ந்து இருள் விலகாதிருந்த அந்தப் பொழுதில் அரசர் எங்கிருப்பார் என்பது உபேந்திரனுக்குத் தெரியுமாதலால் சரியாக அதே இடத்தில் போய் நின்றான். அருணன் ஆலயத்துக்குச் செல்வதற்காக அரசர் தன் மாளிகையின் முன் வாயிலில் வந்து சேர்ந்ததும் அங்கு உபேந்திரன்- தான் எதிர்பார்த்த தகவலுடன் வந்திருக்கிறான் என்பதை அறிந்து கொண்டார். முல்லை அரும்பு போன்ற தன் முன்வரிசைப் பற்களைக்காட்டி, உபேந்திரனைப் பார்த்து மன்னர் புன்னகைத்தார். அந்தப்புன்முறுவலில் பொதிந்திருந்த பொருளை உணர்ந்த இளைஞனும் அதே போன்ற மென்னகையை உதிர்த்தான்.

அந்த முதியவரும் இளையவனும் தங்கள் பற்களைக் காட்டியே பேசிய மொழி அவர்களுக்கு மட்டுமே புரியக்கூடியது. முனிவரும் குழுவினரும் நகரை வந்தடையப் போகிறார்கள் என்பதுதான் உபேந்திரனின் வருகை மன்னருக்கு உணர்த்திய தகவல்.



அதனை 'உணர்ந்துகொண்டேன்' என்று மன்னர் தன் புன்னகையால் அவனுக்குத் தெரியப்படுத்தினார்.

சூரிய வம்சத்துக் குலக்கொழுந்தான கோன் தசரதன் உதய வேளையில் உதய தேவனுக்குப் பூசை செய்து முடித்த பின்னர் தான் எவருடனாவது உரையாடுவார். அதற்கு முன் எத்தகைய வார்த்தையும் அவருடைய வாயில் உதிராது. அதே முறையைத்தான் குலகுருவான வசிட்ட மாமுனிவரும் கடைப்பிடித்து வந்தார்.

அரசர் முன்னேறி அருணன் ஆலயம் செல்லும் வழியில் அருகே உள்ள சந்து முனையில், அரசனை எதிர்கொண்ட வசிட்ட முனிவரும் சேர்ந்து கொண்டார். அருணன்

### இராஜகுமாரன்

பூசை முடிவடைந்ததும் இருவரும் ஏனைய பரிவாரங்களுடன் இணைந்து நகரவாயிலை வந்தடைந்தனர். அங்குதான் கலைக்கோட்டு முனிவரும் குழுவினரும் வந்து சேர்ந்தனர்.

ஓங்காரத்துடன் இணைந்து அயோத்தி மாநகரெங்குமே வாழ்த்தொலிகள் எழுந்தன. சங்கு, சேகண்டி, மங்கள பேரிகை, சமனிக்கை போன்றவற்றின் ஒலியும் வான் முட்ட எழுந்தன.

### வரவேற்பும் உபசரிப்பும்

இரதத்திலிருந்து இறங்கிய முனிவரை முதலில் மன்னர் தாழ் பணிந்து வணங்கினார். தொடர்ந்து அமைச்சர்களும் பிரதானிகளும் வணங்கினர். வசிட்ட மாமுனிவர் பூரண கும்பத்தை ஏந்தி வரவேற்றார். அனைவரும் ஊர்வலமாகச் சென்று அருணன் கோவிலை அடைந்தனர். மீண்டும் அவ்வாலயத்தில் பிரார்த்தனை இடம்பெற்றது.

அருணன் ஆலயத்தின் அருகே ஆரண்யம் போலவே ஓர் அழகிய பூஞ்சோலை இருந்தது. சரயுநதியுடன் இணைவதற்காக துரித கதியில் சலசலப்புடன் ஓடிக்கொண்டிருந்தது ஒரு சிற்றருவி. புள்ளினங்கள் எழுப்பும் காலை கீத ஒலி எங்கும் பரந்திருந்தது. அந்தப் பூங்காவின் மத்தியில் தான் இருசிய சிருங்கமுனிவரும் அவருடன் வந்திருந்த குழுவினரும் தங்குவதற்கேற்ற விடுதிகள் அமைக்கப்பட்டிருந்தன.

ஆலயத்திலிருந்து புறப்பட்ட அனைவரும் விடுதிகளுக்கு அழைத்துவரப்பட்டனர். காலைக் கடன்களை அவர்கள் முடித்துக் கொண்டதும் மன்னர் தசரதரே முன்னின்று உபசாரங்களை மேற்பார்வை செய்தார். இங்கு வைத்தே அரசர் தமது பத்தினயர்களான கோசலை, கைகேயி மற்றும் சுமித்திரையை முனிவருக்கும் அவருடைய தர்மபத்தினியான சாந்தைக்கும் அறிமுகம் செய்துவைத்தார்.

அன்று பகற்பொழுதில் வசிட்ட மாமுனிவரால் கணித்துக் கொடுக்கப்பட்ட சுபவேளையில் தசரத மன்னரும் வசிட்ட மாமுனிவரும் கலைக்கோட்டு முனிவரின் விடுதிக்கு வந்து முறைப்படி வரிசைகளை அளித்தபின் உரையாடல்களை ஆரம்பித்தனர்.

வேள்வி அல்லது யாகம் என்பது அக்காலத்தில் சாதாரணமான காரியமல்ல. வேதங்களில் சொல்லப்பட்ட விதி முறைகள் எதனையும் மீறாமல் வேள்வி இடம்பெற்றாக வேண்டும். மிகச் சிறிய தவறு நேர்ந்தாலும் அதன் விளைவு பாரதூரமான பயங்கர விளைவினை ஏற்படுத்திவிடும். ஆகவே மிக நுணுக்கமாக அம்சங்கள் ஒவ்வொன்றும் விரிவாக ஆராயப்பட்டன. இருசியசிருங்கரும் அவருடன் வந்த தவசிகளும் வசிட்ட மாமுனிவரும் கோசல நாட்டிலுள்ள முனிவர்களும் அறிவாற்றல் மிக்க அந்தணர்களும் இந்த உரையாடலில் பங்கெடுத்தனர். முதலில் அசுவமேத யாகம் நடத்திய பின்னரே அதர்வண வேதத்தில் கூறப்பட்டுள்ள விதி முறைகளின் அடிப்படையில் மகப்பேறடைய- புத்திரகாமேட்டி யாகம் செய்வதென முடிவாயிற்று.

### அசுவமேத யாகம்

அசுவம் என்பது குதிரை. அசுவமேத யாகம் என்றால் குதிரையை மையமாக வைத்து நடத்தப்படும் வேள்வி என்பதாகும்.

இத்தகைய வேள்வி, அரசர்க்கரசனாகத் திகழும் ஓர் அரசன், தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை-தனக்கு எவரும் எதிரியில்லை என்பதனை நிரூபிப்பதற்காக நடத்தும் யாகமாகும். பட்டத்துக்குரிய குதிரையை தகுதிவாய்ந்த அரசப் பிரதிநிதியுடனும் வீரர்கள் படை ஒன்றுடனும் பல தேசங்களுக்கும் அனுப்ப வேண்டும். குதிரை ஒரு நாட்டுக்குள் நுழைந்துவிட்டால், அதனையும் அத்துடன் வரும் வீரர்களையும் அந்நாட்டு அரசன் முறைப்படி வரவேற்று உபசரித்து பொன்னும் பொருளும் அளித்து வழியனுப்பி வைக்க வேண்டும். இவ்வாறு செய்யாவிட்டால் அசுவத்துடன் சென்ற வீரர்கள் அந்நாட்டின் மீது போர் தொடுத்து அரசனை அடிமைப்படுத்துவர்.

தசரத மன்னரால், மேற்கூறப்பட்டது போல் அனுப்பிவைக்கப்பட்ட குதிரையையும் படைகளையும் சகல அரசர்களும் மரியாதையுடன் வரவேற்று உபசரித்து அனுப்பி வைத்தனர். இவ்வாறான திக் விஜயம் ஒரு வருடத்தில் பூர்த்தியடைந்து அயோத்தி மாநகரை அசுவம் குறிப்பிட்ட தினத்தன்று வந்து சேர்ந்தது. குதிரைக்குரிய கௌரவம் கொடுத்து அனுப்பிவைத்த அரசர்களுக்கெல்லாம் அழைப்புகள் அனுப்பிவைக்கப்பட்டு அவர்களும் வேள்வியின் போது வந்து குழுமிவிட்டனர்.

விருந்தினர்களாக வந்து சேர்ந்த அரசர்களுக்கும் பரிவாரங்களுக்கும் தங்குமிட வசதிகளும் விருந்து வைபவங்களும் குறைவின்றி நிறைவாகச் செய்து முடிக்கப்பட்டிருந்தன. அத்துடன் அவர்களின் பொழுது போக்குக்காக கலை நிகழ்ச்சிகளும் ஏற்பாடாகியிருந்தன. ஒவ்வொருவருக்கும் பெறுமதியான வெகுமதிகளும் அளிக்கப்பட்டன.

அசுவமேத யாகம் முடிவடைந்ததும் தசரத மன்னருக்கு சக்கரவர்த்தி என்ற பட்டமும் வழங்கப்பட்டது. மன்னர்களுக்குள் மன்னர் என்றும் அரசர்க்கரசர் என்றும் அதற்குப் பொருள் கொள்ளலாம்.

### தேவதை அளித்த தெய்வீகப் பிரசாதம்

மன்னர் மன்னனான தசரதன் அடுத்து புத்திரகாமேட்டி வேள்வியினைத் தொடங்கினார். நூற்றுக்கணக்கான தவ சிரேட்டர்கள் ஓம குண்டத்தை வளைத்திருந்து வேத மந்திரங்களை ஓதி, உரிய பூசைகளை நடத்தினர். விலையுயர்ந்த திரவியங்களையும் தினசரி ஓம குண்டத்தில் வளரும் தீயில் இட்டு ஆகுதி செய்து தேவதைகளைப் பிரார்த்தித்தனர். ஈராறு திங்கள்-12 மாதங்கள் இவ்வாறு ஓம குண்டத்தில் ஆகுதியிட்டு பிரார்த்தித்தனர். இருசியசிருங்கரான கலைக்கோட்டு முனிவரே தலைமை தாங்கி இவ்வேள்வியைச் செய்வித்தமையினால் யாகத்தின் இறுதி நாளன்று தீயினுள்ளே ஓர் அழகிய தேவதை தோன்றியது. அதன் கைகளில் பொன்னாலான பாத்திரம் ஒன்று காணப்பட்டது.

“மன்னர் மன்னவனே! நீர் நடத்திய வேள்வியினால் அகம் குளிர்ந்த தேவர்கள் உமக்கு புத்திரர்களை அளிக்க வல்ல பிண்டமான பாயசத்தினை அருளியுள்ளனர். உமது பத்தினிமார் மூவருக்கும் இப்பாயசத்தினைப் பருகத் தந்தால், அவர்கள் கர்ப்பமடைந்து உரிய காலத்தில் நான்கு புத்திரர்களைப் பெற்றெடுப்பார்கள்.”

இவ்வாறு அந்தத் தேவதை கூறி மன்னவனிடம் அப்பேழையினைக் கொடுத்தது. மன்னவனும் மகாரிஷிகளும் மந்திரிப் பிரதானிகளும் பெருமகிழ்ச்சியடைந்தனர். எங்கும் ஜெயபேரிகை முழங்கியது.

பாயசப் பேழையை ஏந்திய மன்னவன் உடனடியாக அந்தப்புரம் சென்று தன் பத்தினிமார் மூவரையும் அழைத்தார். முதல் மனைவி கோசலையை அழைத்து பாயசத்தின் சரிபாதியை அவர் பருகும்படி சொன்னார். அவர் பருகியதும் எஞ்சிய பாயசத்தின் பாதியை சுமித்திரைக்குப் பருகக் கொடுத்தார். அதன் பின்னர் பாத்திரத் திலிருந்த பாயசத்தின் அரைவாசியை பருகும்படி கைகேயியிடம் தந்தார். மொத்த அளவில் இப்போது அரைக்கால் பங்கு பாயசம் மிஞ்சி இருந்தது. அதனையும் சுமித்திரையிடம் கொடுத்தார். அவர்கள் பாயசத்தைப் பருகிய சில நாட்களில் கருவுற்று விட்டார்கள் என்ற அறிகுறி தென்பட்டது. தகவலறிந்த அயோத்திமாநகரும் கோசல நாடும் குதூகலித்தன.

கலைக்கோட்டு முனிவருக்கும் ஏனைய முனிவர்களுக்கும் தகுந்த உபசாரங்களைச் செய்து, அவர்கள் அயோத்தி மாநகர் வரும்போது எத்தகைய சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டதோ, அதே போன்று எக்குறையும் நேராமல் பிரிவுபசார வைபவங்களும் இடம்பெற்றன.

அரசிகள் மூவரும் கருவுற்று உரியகாலம் வந்ததும் மூத்தவளான கோசலை, கடக இராசியில் புனர்பூச நட்சத்திரத்தில் தெய்வாம்சம் பொருந்திய ஆண் மகவை ஈன்றெடுத்தாள்.

கைகேயிக்கு மீன இராசியில் பூச நட்சத்திரத்தில் ஆண் மகவு பிறந்தது.

இளையவளான சுமித்திரை, கடக இராசி-ஆயிலிய நட்சத்திரத்தில் ஒரு மகனையும் சிம்ம இராசி மக நட்சத்திரத்தில் மற்றுமோர் ஆண் குழந்தையையும் பெற்றெடுத்தாள்.

தெய்வீகப் பிரசாதமாக- வேள்வித் தியிலிருந்து எழுந்து வந்த தேவதை அருளிய பாயசம் மூன்று அரசிகளாலும் எவ்வாறு பங்கிட்டுப் பருகப்பட்டதோ, அவ்வண்ணமே நான்கு ஆண் குழந்தைகளும் பிறந்தன. இவை நான்கும் திருமாலின் அம்சங்களுடன் கூடியவையே.

பன்னெடுங்காலம் பிள்ளைகளின்றி வாடிய மன்னவனும் மனைவியரும் நான்கு புத்திரர்கள் பிறந்ததும் சொல்லொணாத மகிழ்ச்சியில் திளைத்தனர். அரண்மனை அல்லோலகல்லோலப்பட்டது அமைச்சர்களும் பிரதானிகளும் தத்தமது இல்லங்களில் குழந்தைகள் பிறந்தால் எத்தகைய ஆனந்தமடைவார்களோ அதைவிடப் பன்மடங்கு பேருவகை கொண்டனர்.

### மக்களைக் கண்டு மன்னவன் மகிழ்ச்சி

தசரத சக்கரவர்த்திக்கு, மக்கள் பிறந்த தகவல்கள் அவ்வப்போது தெரிவிக்கப் பட்டன. சோதிட வல்லவுநர்களான அந்தணர்களை உடனழைத்து, குழந்தைகள் பிறந்த நாள், கோள், நட்சத்திரங்களை முறையாகக் கணக்கிட்டுக் கொண்டனர். வசிட்ட மாமுனிவரையும் உடன் அழைத்துக் கொண்டு குழந்தைகளையும் அரசிகளையும் போய்ப் பார்த்தார் மன்னர்.

அயோத்தியில் திருமாலின் திருவவதாரம் நிகழ்ந்ததை தேவர்கள் அறிந்தனர். ஆணவத்தால் மதியிழந்து ஆர்ப்பரித்து கொடுமைகளைப் புரிந்து வந்த அரக்கர் கூட்டம் வேரோடு சாயும் காலம் விரைந்தோடி வருகிறது என்று ஆனந்தக்கூத்தாடினர்.

குழந்தைகளைக் கண்ட பேரானந்தப் பெருக்கில் மூழ்கிய மன்னவன், நாட்டு மக்களுக்கு இந்த நல்ல செய்தியை பறையறைந்து தெரிவிக்குமாறு பணித்தார்.



சக்கரவர்த்தியான தனக்கு சிற்றரசர்கள் பலர் உரிய திறை செலுத்தாமையினால் கைது செய்யப்பட்டு சிறைகளில் வாடினர். அவர்கள் அனைவரையும் விடுதலை செய்யுமாறு பணித்தார். மக்கள் செலுத்த வேண்டிய பல வரிகளைச் செலுத்த வேண்டியதில்லை என்று அறிவித்தார். அதுமட்டுமல்லாமல் தானியக்களஞ்சியங்களைத்திறந்து விட்டு, நாட்டு மக்கள் அனைவரும் வேண்டியவற்றை எடுத்துச் செல்லுமாறு ஆணையிட்டார்.

நன் மக்கள் பிறந்த நற்செய்தி கேட்டு நாற்புறமுமிருந்தும் வாழ்த்த வந்தவர்களுக்கெல்லாம் பொன்னும் மணியும் பட்டுப் பீதாம்பரங்களும் வாரி வழங்கப்பட்டன.

தொடர்ந்து 12 நாட்கள் நாடெங்கும் கொண்டாட்டங்கள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆலயங்கள் புதுப்பிக்கப் பட்டு பிரத்தியேக பூசைகள் நடைபெறுவதற்கான வசதிகளும் செய்யப்பட்டன.

அரசமரபின்படி குழந்தைகள் பிறந்து பன்னிரண்டு நாட்களின் பின்னர்தான் பெயர் சூட்டு விழா இடம்பெறும். அதற்கேற்றாற் போல குறிப்பிட்ட நாட்கள் முடிந்ததும் குலகுருவாகிய வசிட்ட மாமுனிவர் அரண்மனைக்கு வந்துசேர்ந்தார். அன்னாரை வணங்கி வரவேற்ற அரசர்க்கரசர், ஆசனமளித்து, மைந்தர்களுக்கேற்ற பெயர்களைச் சூட்டுமாறு கேட்டுக் கொண்டார்.

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி 03

ஒரே ஒரு கேள்வி மட்டும். பதிலை அழகாக தபாலட்டையில் எழுதி அனுப்பினால் போதும். அதிஷ்டசாலிகளான ஐந்து பேருக்கு இலக்கிய நூல்கள்.

**கேள்வி:- அசுவமேத யாகம் என்றால் என்ன?**

ஒக்டோபர் 28ம் திகதிக்கு முன்பாக பதில் அனுப்ப வேண்டிய முகவரி:

இராமாயணப் போட்டி இல:03.
தினமுரசு வாரமலர்
த.பெ. இல- 1772
கொழும்பு.

(போட்டி இல 1 இல் பரிசு பெற்றவர்களும் அதிஷ்டசாலிகளது பெயர் விபரம் 18ம் பக்கத்தில்)



படிப்பகம்

www.padippakam.com


அருள் ஜுவலர்ஸ்
AROL JUWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
436331
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு





அம்மன் ஜுவல்
AMMAN JUWEL
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
332033
29 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


## வண்ணத்தில் முதலிடம்

வண்ணத்தில் மட்டுமல்ல எண்ணத்திலும் மகிழ்ச்சி தருவது வண்ணத்திப்பூச்சி. (முரசமாதிரி). வேறு எந்தப் பூச்சிகள் எப்படித்தான் நிறம் பூசிக்கொண்டாலும் வண்ணத்திப்பூச்சி போல வரவே வராது. எப்போதுமே ஒரிஜனல்தானே உசத்தி.

வண்ணத்திப்பூச்சி கண்டு மகிழாதோர் யாருண்டு. ஆனால் இந்த வண்ணத்திப்பூச்சி ஏனைய வண்ணத்திப் பூச்சிகளிலிருந்து விசேஷமானது. இதனை 'மொனார்ச்' என்று அழைப்பார்கள். 4 அங்குல விஸ்தீரண முடையது. வட அமெரிக்கா, பிலிப்பைன்ஸ், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் அதிகம் காணப்படும். கோடைகாலம் வந்துவிட்டால் சிறகைவிரித்து வட அமெரிக்காவுக்கும், தென் கனடாவுக்கும் பறந்துவிடும். கோடைக்குப் பயந்து பெரும் தொகையாக இவை இடம் பெயரும்போது வானத்தில் பெரிய பட்டாளம் நகருவது போல இருக்கும். (பயப்படத் தேவையில்லை). மரத்தில் அமர்ந்து இவை ஓய்வெடுக்கும் போது அந்த மரம் மலர்பூத்தது போல அழகாகிவிடும். இடம் பெயர்ந்து சென்றுவிட்டு சொந்த இடம் திரும்பும்போது அங்கு இவை போட்டுவிட்டு வரும் முட்டைகளில் இருந்து சந்ததி உருவாகும்.

## இருளைக் கிழித்துவிடு



தீபாவளியை
கொண்டாடும்
வாசக நெஞ்சங்களுக்கு
வசந்தமான வாழ்த்துக்கள்.
ஆயிரம் ஆயிரம்
தீபங்கள் மண்ணில் எழுந்தால்
விண்ணில் சூளும்.
இருள் கிழிந்துபோகும்.
எழுவோம்–வாழ்வோம்
வாழ்த்துவோம்!

## மண்ணிலிருந்து விண்ணுக்கு

விண்ணைநோக்கி இந்த ராக்கெட் கிளம்புகிறது என்று நம்பிவிட்டீர்களா. தவறு! விண்ணை நோக்கிக் கிளம்புவது போல எழுந்து, தரையில் இருந்து தரை நோக்கிச் செல்லும் ஏவுகணைதான் இது. இதன் பெயர் **LTV ATACMS**. அமெரிக்கத் தயாரிப்பு. 950 சிறிய குண்டுகளை பொருத்தி வைத்திருக்கலாம். 100 கிலோமீற்றர் தூரம்வரை சென்று தரை இலக்குகளை தகர்த்தெறியும். வளைகுடா யுத்தத்தில் ஈராக்மீது தாக்குதல் நடத்த நேட்டோ நாடுகளுக்கு இதுதான் பெரிய உதவி செய்தது. சமவெளி யுத்தங்களுக்கு ஏற்றது. இதனை தற்போது மேலும் நவீனப்படுத்தி அணுக்குண்டுகளை ஏவக்கூடிய வகையில் தயார்படுத்தி வருகிறார்கள்.



தருவது
வியோடெ



## கைக்குண்டோயிது?!

பார்த்தவுடன், கைக்குண்டோ என்று நினைக்க வைக்கும். ஆனால் கைக்குண்டல்ல. இதன் பெயர் ஹோர்சு கிராப். எந்த ரக ஆயுதம் என்று கேட்காதீர்கள். இது கடலில் வாழும் குதிரைலாட நண்டு. 24 அங்குலமான வாட்டசாட்டமான உருவம். பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் நூறுவகையான குதிரைலாட நண்டு இனங்கள் வாழ்ந்திருக்கின்றன. தற்போது அவற்றில் 5 வகையான இனங்கள் மட்டுமே வாழ்கின்றன. கடினமான உடல். 5 சோடிக் கால்கள். குதிரைலாடம் போல நீண்டவால். 10 ஆயிரம் முட்டைகள் ஈனும். கடற்கரையில் வந்து மண்ணைக் கிண்டி முட்டையிடும். பெண் முட்டையிட, ஆண் காவல் இருக்கும். 2 வாரத்தில் குஞ்சு ரெடி. பிடித்தமான உணவு; கடற்கரைப் புழுக்கள்.



## டென்னிஸ் உலகில் ஒரு சொக்காபவா

டென்னிஸ் உலகில் கிசு-கிசுக்களில் அடிக்கடி மாட்டிக் கொள்ளும் கவர்ச்சி நட்சத்திரம் சபாடினி. ஆட்டத்தைப் பொறுத்தவரை தூள் கிளப்பல் என்று சொல்ல முடியாது.

1990ல் அமெரிக்க ஓபன் சாம்பியன் பட்டத்தை வென்றது மட்டுமே சாதனை. ஏனைய போட்டிகளில் காலிறுதி, அரையிறுதிவரை வந்துவிடுவார். பின்னர் சுருண்டுவிடுவார். அதனால் டென்னிஸ் உலகில் 5வது இடத்தை தக்கவைத்துக் கொண்டிருக்கிறார்.

சபாடினியின் ஒவ்வொரு ஷொட்டும் பலமாக இறங்கும். எதிராளி திணறிப்போவார். அப்படியிருந்தும் கவனக் குறைவும், நம்பிக்கைத்தளர்வும் இறுதிவரை சென்று அசத்தாமல் செய்துவிடுகின்றன.

சபாடினியின் உடல் வலிமையும், கட்டமைப்பும் ஆண் ரசிகர்களை கவர்ந்து கொள்கிறது. இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர் ரவிசாஸ்திரி "சபாடினியினியோடு ஒருநாளை பகிர்ந்து கொள்ள ஆசை" என்று பகிரங்கமாகவே தெரிவித்திருந்தார். தோல்வி கண்டாலும் தோற்றத்தில் வலிமையும், அடிகளில் உரமும் ரசிகர்களை கவர்கிறது.

முதலாம் இடத்தை நோக்கி தொடர்ந்து போராடுவேன் என்கிறார் சபாடினி. இடையிலே தளராவிட்டால் வெற்றியைச் சுவைக்கலாம்.

வாரமலர் தினமுரசு



படிப்பகம்